ஆண்டு மலர்

ஏப்ரல் - 1960

25 காசுகள்


உங்கள் அருமை மகளுக்கு
நீங்கள் தரக்கூடிய
அன்பளிப்பு வைர மோதிரமே
வைரங்கள்
ஒரு பெரிய முதலீடு.
அவைகளை வாங்குவதற்கு
முன்னால் சோதித்துப் பாருங்கள்.
வைரங்களின் தரத்தை கண்டறிய உம்மிடியாரின் ஷோரூமுக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள். இலவசமாக இதை செயல் முறையில் செய்து காட்ட தயாராக இருக்கிறோம்.
உம்மிடியார்
உம்மிடி ராமய்யா செட்டி, குருஸ்வாமி செட்டி & கோ
23லிருந்து 25, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை
VRG
JWT-VR.919

விரைவில் வருகிறது!
வைஜயந்திமாலா
சிவாஜி கணேசன்
மற்றும் பலர் நடிக்கும்
BHARATH STUDIO
உமா பிக்சர்ஸாரின்.......
சித்தூர் ராணி பத்மினி
டைரக்ஷன்
Ch. நாராயணமூர்த்தி B.A.,
கதை-வசனம்
ஸ்ரீதர்
சங்கீதம்
G. ராமநாதன்
RIGHTS CONTROLLED BY:
சண்முகா பிக்சர்ஸ், சென்னை-17.

# கட்டிட தளவாடங்கள்...

அன்று

பண்டைக்காலச்சிற்பியரின் கலைத் திறனும் ஆற்றலும் தான் என்னே! நாடு எங்கும் சுண்ணும்பும் கல்லும் கொண்டு நிருமிக்கப்பட்டு கலையழகுடன் வானளாவி நிற்கும் கோபுரங்களே பழமைச் சிற்பியரின் திறனுக்குத் தக்க சான்ருகும்



## இன்று

**சங்கர் பிராண்ட்**
**போர்ட்லண்ட் ஸிமெண்ட்**

திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது

## சங்கர் பிராண்ட்

போர்ட்லண்ட் ஸிமெண்ட்

இன்றைய கட்டிட தளவாடங்களில் சிறந்தது. சர்க்கார் சோதனைச் சாலையின் நற்சாட்சிப் பெற்றது. எல்லாவித கட்டிட வேலைகளுக்கும் உகந்தது. எல்லா முக்கிய நகரங்களிலும் தட்டின்றி கிடைக்கிறது.



SANKAR I C BRAND

**இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட். மதறுஸ் –1**

விற்பனையாளர்களும், விநியோகஸ்தர்களும்:

**ஸிமெண்ட் மார்க்கட்டிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்**

# WEDDING SAREES CARNIVAL

*We have collected*

*Up-to-date Style in*

*Wedding Sarees*

*From Benaras, Mysore,*

*Conjeeveram & Surat.*

**Special Offer for College & School Girls**

| | | |
|---|---|---|
| Benaras Pure Washable Silk Sarees | 6 yds. | Rs. 25/- |
| Mysore Grape Silk Sarees Washable | 6 yds. | Rs. 12/50 |
| Lucknow Chickken Voil Sarees | 6 yds. | Rs. 20/- |
| Rajasthan Stripped Chiffon Sarees | 6 yds. | Rs. 12/50 |
| Bombay Printed Voil Sarees | 6 yds. | Rs. 9/50 |
| Mirror Work Crepe Satin Pavadies | 6 yds. | Rs. 12/50 |
| Gold Printed Chiffon Davanis | 3 yds. | Rs. 5/- |
| Hydrabad Cotton Choli Piece each | | Rs. 1/50 |

**Kindly Come Early and Have The First Choice**

AT

# SAREE CENTRE

**142, Mount Road, Thousandlights,**

**MADRAS-6.**

Phone : 85285

விரைவில் வருகிறது!

கலை உலகம் இதுவரை கண்டிராத
காட்சி களஞ்சியம்

ஜூபிலி பிலிம்ஸ்
கல்கியின்

# பார்த்திபன் கனவு

டைரக்ஷன் : யோகானந்த்

வசனம் :
விந்தன்.

இசை :
வேதா.

★

கலை அமைப்பு :
மணியம்.

படபிடிப்பு :
செல்வராஜ்.

★

நெகடிவ் ரைட்ஸ் கன்ட்ரோல்ட் :
ஜெயந்தி பிலிம்ஸ் (மதுரை) பிரைவேட். லிட்.,
34, ஹபிபுல்லா ரோடு, சென்னை-17.

Phone { Show Room : **2002**
Residence : **61725**

Post Box : **1625**

Grams : **" NATHELLA "**




**Fashionable GOLD Jewellery Variety of Latest designed Gem - Setted Jewellery**

**Silver-Trophies Cinema Shields Water-Drums a number of attractive articles**

*Please pay a visit to our Show Rooms*

# NATHELLA SAMPATHU CHETTY & SON,

**177, N. S. C. BOSE ROAD, MADRAS-1.**

Nutrine மிட்டாய்கள்

## சுவை மிகு நியூட்ரைன் டாபிகள்

நீங்கள் ஆசையுடன் வைத்துக்கொள்ள விரும்பும் அழகான டின்களில் கிடைக்கின்றன.

நியூட்ரைன் டின்களில் நிறைய **டாபிகள்** கிடைக்கின்றன.

காரணம், டின் முழுவதும் டாபிகளால் நிரப்பப்படுகின்றன. அரைகுறையாக நிரப்பப்படுவதில்லை.

**நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி (பி) லிட்.,**
**சித்தூர், ஆந்திர பிரதேசம்.**

# மாலா

போஷகர்: வைஜயந்திமாலா
நிர்வாக ஆசிரியர்: எம். டி. ராமன்—ஆசிரியர்: எஸ்.எஸ்.சர்மா
துணை ஆசிரியர்: த. ரா. ரா.

மாலா 10 | ஏப்ரல் 1960 | மலர் 1

## பொருளடக்கம்

பொலிக புத்தாண்டு —தலையங்கம்

கட்டுரைகள்

திருப்போரியூர்க் கோவில் —பிலோ இருதயநாத்
பிரகத்தன் —தி. நா. சுப்பிரமணியம்
பழையதும் புதியதும் —த. ரா. ரா.

நாடகம்

பரிசு —எல்லார்வி

கதைகள்

சிபாரிசு —எஸ். வைத்தியநாதன்
ஏமாந்தது யார்? —நந்தினி
புரூட் ஸாலேட் —அத்தர்
மனிதரா, நீங்கள்? —டி. எஸ். கே.
வேலி —விக்கிரமன்
சந்தேகம் தீர்த்த சற்குரு! —சுப்பு

ஜோதிட பகுதி

ராசிபலன், கேள்வி பதில் —கணபதி ஜோஸ்யர்

கலை அரங்கம் —த.ரா.ரா.

குறிப்பு: மாலாவின் கதைகளில் வரும் பெயர்கள் நிகழ்ச்சிகள் அனைத்தும் கற்பனையே.

போஷகர் : வைஜயந்திமாலா

மாலா 10 | 1960 ஏப்ரல் | மலர் 1

# பொலிக புத்தாண்டு

பிறக்கும் சார்வரி வருடம் சகலவித நலன்களையும் அளிக்க வல்லதாய் அமையுமாக! கடந்த விகாரி ஆண்டு பாரதம் பொருத்த வரை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவ்வாண்டிலே உலக வல்லரசுகளிரண்டின் பிரமுகர்களை பாரதம் வரவேற்கும் பேறு பெற்றது. ஜனாதிபதி ஐஸன்ஹோவர் விஜயம் மகத்தானது. இது போன்ற வரவேற்பைக் கண்டதே இல்லை என்று அவரே பூரிப்புடன் கூறிச் சென்றார். சோவியத் பிரதமர் குருஷ்சேவ் பாரதத்திற்கு வந்து சென்றார். இவ்விரு விஜயங்கள் பலவிதத்திலும் நன்மை பயக்க வல்லவை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே நல்ல முன்னேற்றம் கண்ட வருஷம் விகாரி.

இவைகளினூடே ஒரு கவலைக்கிடமான விஷயமும் இவ்வாண்டிலேதான் தலை தூக்கியது. ஆம். சீனா எல்லை விஷயமாக கொண்ட போக்குதான் இந்த நிலைக்குக் காரணம். இது பற்றி நாடெங்கும் பரபரப்பு; வாதப் பிரதி வாதங்கள். ஆனால் திட்டமான முறையில் இந்நிலை மாறவில்லை. சீனப் பிரதமர் இந்தியப் பிரதமர் கடிதப் போக்குவரத்துகளினாலும் பலனில்லை. ஆனால் சமீபத்தில் சீனப் பிரதமர் டில்லி வருகையிலே நல்ல முடிவு ஏற்படும் என நம்ப வேண்டியிருக்கிறது.

மாலா பொறுத்தவரை, சென்ற ஆண்டிலே மாலாவின் 101வது இதழ் சிறப்பு மலராக வெளிவந்தது. சார்வரி வருடத்திலே பத்தாவது பிராயத்தைத் தொடங்குகிறது மாலா. நமது பத்திரிகைக்கு, தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் நேயர்கள் மேலும் ஆதரவளிக்கும் முறையிலே புதுப் பொலிவுடன் சார்வரி துவக்கத்திலிருந்து வெளிவருகிறது. நேயர்கள், விளம்பரதாரர்கள் ஆதரவு பெருகுமென நம்புகிறோம். யாவர்க்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# சார்வரியை அழைப்போம்

மஹி

★

காலக் கடல் நீரைக்
கடக்கின்ற ஆண்டுகளின்
சாலால் இரைப்பதிலே
சார்வரிக்கு வந்துநின்று
ஞாலத்தில் நாம்வந்த
நெடுவழியைப் பார்க்கையிலே
கோலம் தெரியவில்லை,
கும்பிட்டு ; காலெண்டர்

தாளைக் கிழித்தெறிவோம்
தாளோடு சேர்ந்தேழர்
நாளைக் கிழித்து விட்டு
நம்வாழ்வில் குறைகின்றோம்.
வேளைக் கணக் கிட்டு
வாரங்கள், மாதங்கள்
கோளின் சுழற்சியினுல்
கூடுதலாய் ஓராண்டு;
—இன்று

புதிதான நாட்காட்டி
புத்தம் புதுநாட்குறிப்பு
அதிலில்லா அங்கங்கள்
அமைந்துள்ள பஞ்சாங்கம்
இதிலுள்ள பேரளவை
இமைப்பில் கடந்து விட்டு
ஏதிற்கும் நேரமில்லை
எதற்காக ஓடுகிறோம் ?

புத்தாண்டு வருகிறது
புதிதான வாழ்க்கைக்கு ;
எத்தனையோ கற்பனைகள்
எதிர்கால நம்பிக்கை
செத்துள்ள நாட்கணங்கள்
சேமித்த அநுபவத்தை
வித்திட்டு வளர்க்கின்றோம்
விழைகின்றோம் நிறைவுக்காய்

வாழப்பிறந் தவர்கள்
வாழ்வுக்கு நேரமின்றி
சூழ்கின்ற தொல்லைகளால்
சோற்றுக் கவலைகளால்
ஆழ்கின்றோம் அன்புக்கு
அமைதியுடன் முயலாமல்
ஊழ்வலியால் பாழுலகில்
உழல்கின்றோம் ; இதை விட்டு

எண்ணம் உயர்த்தி மன
ஏணியினுல் மேலேறி
விண்ணென்ன ; அதன்மேலும்
வியனுலகில் கற்பனையால்
உண்மையுடன் செல்கின்ற
உறுதிதனைப் பூண்டு
வண்ணத் திருநாளை
வருடத்தொரு நாளை.

புத்தாண்டை வரவேற்போம்
பூரித்த வசந்தமெனும்
சித்தாடை அணிவிப்போம்
சிற்றருவியாய்ப் பெருகி
கத்தும் குயிற் குரலால்
கட்டியங்கள் கூறிடுவோம்.
அத்தனையும் இன்பத்தால்
அழைத்திடுவோம் சார்வரியை

சீர் பெற்ற புத்தாண்டு
சித்திரைத் திருநாளில்
நேர்வந்த நன்மைகளை
நினைத்தே மனம் மகிழ்ந்து
பார்முற்றும் அன்பினையே
படைக்கின்ற மகிழ்வோடு
சார்வரியை யேஅழைப்போம்
சந்தோஷம் பொங்குறவே.

★

# கீத கோவிந்தம்

## எஸ். எஸ். சர்மா

### சருக்கம் 4 (தொடர்ச்சி)

### அஷ்டபதி—9

கார்வண்ணனாகிய கண்ணனே, உன் காதலியாகிய ராதை உன்னைப் பிரிந்திருப்பதால் துன்பம் மேலிட்டு இளைத்தாள்; ஏங்கினாள். அம் மெல்லியலாள் மனம் சோர்ந்து வாட்ட முற்றாள். அவள் தோழியர்களோ அவள் மார்பில் முத்தாரத்தை அணிவித்து அழுந்தப் பிடித்துக் கொள்கின்றனர். ஆனால் அம்முத்து மாலையும் அவளுக்குச் சுமையாகத் தோன்றுகின்றது. இத்தகைய ராதையின் நிலையைக்கண்டு உனக்கு இரக்கமே உண்டாகவில்லையா? உன்னையோ கருணைக்கடலென அனைவரும் போற்றுகின்றனர். ஆனால் அக்கருணையை நீ இராதையிடம் காட்டாதது ஏனோ?

என் சிநேகிதியாகிய ராதை உன் பிரிவினால் வருந்தினாள். அம் மெல்லியலாளின் உடல் வெப்பமடைந்தது. அவள் உடலெங்கும் ஈரமுள்ள மென்மையான சந்தனக் குழம்பு பூசப்பட்டிருந்தும் அதனால் குளிர்ச்சி ஏற்படவில்லை. ஐயமுற்ற அவள் அதை விஷம்போல் கருதுகின்றாள்.

சிறு துன்பத்தையும் பொறுக்காதவளாகிய என் தோழி எரிகின்ற காமக் கனலைப்போல் வெப்பமான நீண்ட பெருமூச்சை விட்டுக் கொண்டே இருக்கிறாள். அவள் அருகே அணுக முடியாதபடி அழகிய உடலும் வெப்பமாகிவிட்டது. மூச்சுக் காற்றும் அனலாகிவிட்டது.

அவள் உன்னைக் காணவேண்டும் என்ற அவாவினால் ஒவ்வொரு திசையிலும் தன் கமலக்கண்களைச் செலுத்துகின்றாள். கண்ணாகிய கமலம் தண்டறுந்த தாமரைபோல் தோன்றுகின்றது. அத்தகைய கண் மலர் கண்ணீர்த்துளிகளால் நிறைந்துள்ளது.

அந்தி வேளையில் அவளைப் பிரிவுத்துன்பம் வாட்டியது, துன்பம் மிகுந்ததால் அவள் சிறிதுகூட அசையாமல் கன்னத்தில் கையைவைத்துக் கொண்டு சிந்திக்கத் தொடங்கிவிட்டாள். கையினால் பாதி மறைந்துள்ள அவள் கன்னம் அந்தியில் தோன்றும் பிறைமதி போல் வெளுத்து ஒளியற்றுக் காணப்படுகின்றது.

கமலக்கண்ணனே! உன்னையே இடைவிடாமல் நினைந்து நினைந்து உருகும் ராதை தன் தாபத்தை நீக்குவதற்காக அமைக்கப்பட்ட சிவந்த புதிய தளிர்ப்படுக்கையைக் கண்கூடாகக் கண்டும் அப்படுக்கை தாபத்தை அகற்றாமல் வளர்ப்பதால் அதை கனற் படுக்கையாகவே கருதுகின்றாள்.

மாதவனே! மரணப் படுக்கையிலுள்ளவர்கள் அரி (திருமால்) நாமத்தை ஜபிப்பதுபோல் உன் கொடிய பிரிவினால் மிகத் துன்புற்று மரணவேதனையை அனுபவிக்கும் என் தோழி மிகுந்த விருப்பத்துடன் 'ஹரி, ஹரி' என்று உன் பெயரையே உச்சரித்துக்கொண்டிருக்கிறாள்.

இங்ஙனம் ஜயதேவரால் இயற்றப்பட்ட கிருஷ்ணகீதம் பக்தர்களுக்கு இன்பத்தை உண்டாக்க வேண்டும்.

**சுலோகம் 1** கடுங்காய்ச்சலை அடைந்தவர்போல் பிரிவு நோயால் வருந்தும் ராதை மயிர்க்கூச்சடைகிருள். 'இஸ்' என்று மூச்சிழுக்கிருள்; புலம்புகிருள்; பிரிவுத் துன்பத்தை எங்ஙனம் பொறுப்பது என நடுங்குகிருள்; வாடுகின்ருள்; உன்னையே எப்பொழுதும் நினைக்கிருள். சுற்றித் திரிகின்ருள். உன்னுடன் அனுபவித்த இன்பங்களை நினைத்துக் கொண்டு கண்களை மூடிக்கொள்கிருள்; மெலிந்துவிட்டதால் நிற்க முடியாமல் பூமியில் விழுகின்ருள்; பிறகு உன்னை அகத்தால்கண்டு அணுகுகின்ருள்; பின்னர் மூர்ச்சையுமடைந்துவிடுகிருள். தேவ வைத்தியரான அச்வினீ குமாரர்க் கொப்பானவனே! இத்தகைய காமநோய் ஏற்பட்ட வேளையில் நீ அருள் புரிந்தால் வனப்புமிக்க வசீகரமான உடலையுடைய அவள் உன் இன்பரஸத்தால் உயிர் பிழைப்பது உறுதி. நீ அருள் புரியாவிடில் (வாய் பேசமுடியாது) கை சாடை காண்பிக்கும் நிலையையும் அவள் இழந்து விடுவாள்.

**சுலோகம் 2** இந்திரனுக்குத் தம்பியாக அவதரித்தவனே! தேவ வைத்தியரான அச்வினீ குமாரர்போல் மனதைக் கவரும் சக்தியுள்ளவனே! உன் காதலியாகிய ராதையோ காமனல் துன்பமடைந்தவளாயிருக்கிருள். உன் அவய சம்பந்தமாகிய அமுதத்தால்தான் அந்நோய் நீக்கத்தக்கது. அவள் நோயை நீ அகற்ருவிடில் இந்திரனுடைய வஜ்ராயுதத்தினும் கொடியவனுவாய். அவன் விருத்திரனைக் கொன்றவன். நீ ஒரு மங்கையைக் கொன்றவனுவாய்.

**சுலோகம் 3** காமனல் கருத்தழிந்து துன்புற்ற அவள், சந்தனம், சந்திரன் தாமரை என்றசொற்களைத் தோழிகளுடன் பேசும்பொழுதுகூட மனம் மிக வருந்துகின்ருள். தாபமடைந்தவர்கள் குளிர்ச்சியான பொருள்களை விரும்புவர். இவளோ அவற்றை வெறுப்பது விந்தையாக உளது. தாபத்தால் மிகமெலிந்து மரணத் தருவாயில் இருந்தும் அவள், தனி இடத்தில் தங்கி, விருப்பத்தை வளர்க்கக்கூடியதும், குளிர்ச்சியைத் தருவதுமாகிய உன் அழகிய அங்கத்தின் ஸ்பரிச சுகத்தை நினைத்துக் கொண்டே சிறிது நேரம் உயிரைத் தாங்கிக்கொண்டிருக்கின்ருள். நீ விரைந்து செல்லாவிடில் அவளைக் கண்ணுலும் காணமுடியாமற் போய் விடும்.

**சுலோகம் 4** மாதவனே! உன்னுடன் இன்புற்ற காலத்தில் எவள் உன் பிரிவைச் சிறிது நேரம் கூடப் பொறுக்க முடியாதவளாகப் இருந்தாளோ, கண் இமைப்பதற்கும் வருந்திஞளோ, அத்தகைய இராதை இப்பொழுது நீண்ட பிரிவு ஏற்பட்டும் இவ்வஸந்தகாலத்தில் மலர்ந்த நுனிபாகத்தையுடைய மாங்கிளையைப் பார்த்து எங்ஙனம் உயிர் வாழ்கிருளோ! அறியேன்.

**சுலோகம் 5** ஒரு சமயம் மிகுந்த மழையினல் கோகுலம் கலங்கியது. அப்பொழுது அதைக் காக்கக் கண்ணன் விருப்பங்கொண்டான். உடனே தன் பராக்கிரமத்தால் கோவர்த்தன மலையைத் தன் கையால் தூக்கிப் பிடித்தான்; கோபஸ்திரீகள் மிக மகிழ்ச்சிக்கொண்டு அவன் கையை முத்தமிட்டனர்; அங்ஙனம் முத்தமிட்டதால் சிவந்த முத்திரைகள் கையில் உண்டாயின. கோபர் வேஷத்திலுள்ள கண்ணன், தன் மாமனுகிய கம்ஸனைக்கொன்று மக்களைக் காத்தான். அத்தகைய கண்ணனுடைய கை உங்களுக்கு நன்மைகளை உண்டாக்கட்டும்.

9ம் அஷ்டபதி (பிரபந்தம்) முற்றிற்று.

நான்காம் சருக்கம் முற்றும்.

4 ஆம் சருக்கம்–7. சுலோகங்கள் முற்றும்.

# பழையதும் புதியதும்

த. ரா. ரா.

★

சார்வரி ஆண்டு பிறக்கிறது. புத்தாண்டு துவக்க நாள், கொண்டாடப்படும் புனித நாள். புதிது என்றாலே ஒரு தனி மவுசுதானே. புதிது பற்றி நினைக்கையிலே ஒரு குதூகலம். புதிய அணிகள், புத்தாடை, இவ்விதம் புதியவைகளை விரும்பாதார் யார்? இப்போது பட உலகில் புது முகங்கள் எப்படி சக்கைப் போடு போடுகிறார்கள். புதுமுகங்களுக்குத்தான் எவ்வளவு கிராக்கி.

பழையன கழிதலும் புதியன புகுதலும் (Ring out the old and ring in the new) என்பது பழமொழி. ஆனால் பழையவைகள் எல்லாம் நீக்கப்படலோ அல்லது புதியவைகள் யாவையும் ஏற்கப்படலோ முற்றிலும் உகந்ததாகாது. சீர்திருத்த கொள்கை மிக்கு பரப்பப்பட்டும், நாகரீக மோகம் அளவுக்கு மீறிகொள்ளப்பட்டும்வரும் தற்கால உலகிலே நிதானத்தை போதிப்பது சுலபமான காரியமல்ல. நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டியவன் கதிதான். ஆனால் சொல்லுவதை சொல்லிவிடுவோம், செய்வதை செய்யட்டும் என்ற மனப்பான்மையில் கூருமலிருக்க முடியவில்லை.

சமுதாய அமைப்பு விஷயத்திலோ, நிலஉடமை, இதர உடமைகள் விஷயத்திலோ மாறுதல்கள் ஏற்பட்டு வரும் இக்காலத்தில் பழைய முறைகள் மாறி புது முறைகள் ஏற்படுவதால் விளையும் சாதக பாதகங்கள் பற்றிச் சிந்திக்கவேண்டும். அதேபோல் கல்வி முறைகள் விஷயத்திலும். தொன்று தொட்டு வரும் பழைய முறைகள், கல்வித் துறையில் நிபுணர்களால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறைகள், புதிய முறை மோகத்தில் மாற்றியமைத்து, குழப்பத்தை உண்டாக்குவது விவேகமல்ல இதே போன்று தர்ம சொத்துக்கள். இந்து மத ஸ்தாபனங்களின் சொத்துக்கள் இவைகள் பரிபாலன விஷயத்தில் நன்மை பயக்க வல்லவையும், சொத்துக்களை விட்டுச் சென்றவர்கள் நோக்கங்களைப் பூர்த்தி செய்வனவையாயும் உள்ள நடைமுறைகளை மாற்றி புதிய வழிகளில் செயல்பட முற்படும்போது சிந்தித்து செயல்பட முற்படவேண்டும்.

தனி மனிதர்கள் பொறுத்தவரை காலத்திற்கேற்ப புதிய உண்மைகள், புதியகருத்துக்கள், முடிவுகளை ஏற்கையிலே பழைய பண்பாடுகள், அவசியமான மாற்ற இயலாத பழைய பழக்க வழக்கங்களை அப்படியே வைத்துக் கொள்ளவேண்டும். அநாவசியமாக இதர நாட்டினரின் புதிய பழக்கங்களே மேல் எனக் கருதுவதில் பலனே இல்லை. புதிய நாகரீகம், புதியதத்துவங்களை ஏற்பது காரணமாக, ஆஸ்திகத்தையும்,ஸ்திரீ தர்மத்தையும் ஆணிவேர்களாகக் கொண்ட இந்த பாரத நாட்டின் மகிமையை குறைக்கும் வகையிலே நாம் மாறிவிடக்கூடாது. பழையதில் சிறப்பானவைகளை வைத்திருப்பது இழுக்கல்ல. இது ஆடவர் மட்டுமல்ல. நமது பாரத ஸ்திரீ ரத்னங்களும் கவனத்தில் வைக்க வேண்டிய விஷயமாகும். பாரதப் பண்பாடு கலாசாரம் சிரஞ்சீவித்வம் கொண்டதாக எண்ணவேண்டும். பல படையெடுப்புகள், கலாசார, மதாசாரத் தினிப்புகளுக்கும் மத்தியிலே நமது பாரதப் பண்பாடும், கலாசாரமும், ஆத்மீகத் துறை மேம்பாடும், குன்றின்மேல் இட்ட விளக்கு போல சுடர்விட்டு பிரகாசிக்கிறது. இதை மங்காது மேலும் பிரகாசிக்கச் செய்வது நமது கடமை.

# மதுரையில் கலைக்கோயில்

★



மதுரைமாநகர் செல்பவர்கள் மீனாக்ஷியம்மையின் திருக்கோயிலுக்கும், திருமலை நாயக்கர் மஹாலுக்கும் விஜயம் செய்யாமல் இருக்க இயலாது. சிற்பச் செல்வங்கள் நிறைந்த இறைவியின் திருக்கோயிலும், திருமலை மன்னனது கலைக் கோயிலும் அற்புத சிருஷ்டிகள். திருமலை நாயக்கர் மஹாலின் மூன்றுவித தோற்றங்களின் படங்கள்.



புகைப் படங்கள் :
**சாமி.**

★

# இன்பம் பொழியுது எங்கும்

**இளங்கார்வண்ணன்.**

卐

சித்திரைச் செந்திரு வந்தாள்—நமைச்
சித்தம் மயங்கிடச் செய்பருவத்தாள்
முத்தெனச் சோலையில் எல்லாம்—நகை
மோதி மணத்திடு பூ அவள் சாயல்

தேனைக் குழைத்திடு குயிலாய்—இன்பத்
திங்குரல் காட்டி அழைத்திடும் ஒயிலாள்
வானச் சுடர் மணிக் கண்ணாள்—தென்றல்
பாடிப் பரவிடு தெய்வீகப் பெண்ணாள்.

பழமைச் சிறுமைகள் ஓட்டி—பழம்
பண்பெனும் பூமியிற் கால்களை நாட்டி
எழும்புதுப் பெருமையின் உருவாய்—வானை
எட்டி யெழும் புதுப் பெண்ணினைக் கண்டான்.

வீசி யெழுந்தது காதல்!—இள
வேனிலகத்தினை சித்திரை வென்றாள்!
தேசு நிறைந்த அத்தேவன்—அவள்
செங்கரம் பற்றியே எழிலுற நின்றான்!

அவர்—
அன்பு கமழ் திருமணத்தில்—உயிர்
அத்தனையும் மகிழ்வெய்தி யிருக்கும்—அட!
இன்பம் பொழியுது எங்கும்!—அதை
ஏந்திக் குடித்திட யாவரும் வாரீர்!

—★★—

# பரிசு

எல்லார்வி

[ரகுராமன் காரியாலயத்தி லிருந்து வீடு திரும்புகிறார்.]

கல்யாணி: ஏன் இவ்வளவு நேரம்?...மணி பத்து ஆவுது!

ரகுராமன்: (பெரு மூச்சுடன்) என்ன செய்யறது கல்யாணி? நாளையிலிருந்து இன்னும்கூட நேரம் ஆகலாம்.

கல்: அட கண்ராவியே! இப்படி உழைச்சா உடம்பு என்னத்துக்கு ஆகும்? நல்லா யிருக்கு கதை!

ரகு: (விரக்தியாக நகைத்து) வாழ்க்கையே ஒரு கதை தானே?

கல்: ஆபீசிலே அப்படி என்ன வேலே இப்போ?

ரகு: தன்னே மறந்து பேசறயா? ஒரு வாரத்திலே ஆண்டு மலர் வெளிவந்தாகணும்னு ஒரு வாரமா சொல்லிகிட்டிருக்கேனே!

கல்: ஆமா, ஆமா. அதை நான் மறந்தே போனேன்......சரி. கையெ காலெ கழுவிகிட்டு சாப்பிட வாங்க.

ரகு: (கொட்டாவி விட்டு) சாப்பாடுகூட வேணும்; படுத்தா போதும்னு இருக்கு உடம்பு...அ... பவானி, மணி, பானு எல்லாரும் தூங்கிட்டாங்களா?

கல்: அதை ஏன் கேக்கறீங்க? இம்மா நேரம் வீடு நிர்த்தூளி பட்டுப் போச்சு. இப்பத்தான் கண் மூடினுங்க.

ரகு: ஏன்?......எதுக்கு நிர்த்தூளி?

கல்: என்னத்தெச் சொல்றது? அறிஞ்சதுங்க, அறியாததுங்க அல்லாம் ஒண்ணுத்தான் இருக்கு!

ரகு: ஆரம்பிச்சுட்டயா?... ... ஏதாவது ஒரு விஷயம்னு, பளிச்சுன்னு நேரடியா சொல்றதுங்கறது ...உன் அகராதியிலேயே கிடையாதே!

கல்: (வெடுவெடுப்பாக) பவானிக்கு மேலே படிக்கணுமாம்; மணிக்கு 'கேரம் போர்டு' வேணுமாம்; பானுவுக்கு ஆடும் குதிரை வேணுமாம்! போறுமா?

ரகு: போட்ரா சக்கைன்னுன்! ...உம் இவ்வளவுதானு. இன்னம் ஏதாவது உண்டா?

கல்: எவ்வளவோ தான் உண்டு. செட்டியார் கடையிலேருந்து வசூலுக்கு ஆள் வந்தான்: வீட்டுக்காரர் வாடகை பாக்கிக்காக வந்து சத்தம் போட்டாரு; டாக்டர் பில் வந்திருக்...

ரகு: போறும், போறும், போறும்!

கல்: உங்க பெரிய பொண்ணு அபிராமி பேறு காலத்துக்காக அடுத்த வாரம் இங்கே வரேன்னு எழுதியிருக்கா...ஆ...அடாடா!... கடுதாசின்னதும் நெனப்புவருது: பழைய கடங்காரங்க ரெண்டு பேர் கிட்டேயிருந்து கண்டிப்புங் காயிதாவுமா கடுதாசி வந்திருக்கு.

ரகு: (பெருமூச்சு) உம். இதெல்லாம் ஒரு குடும்பியின் சர்வ சாதாரணமான விவகாரங்கள் தான் சமாளிக்க முடியாதது நம்ம குறை!

கல்: சமாளிக்கிறது எங்கேருந்து? உப்பு, புளி விக்கிற விலேயிலே வர்ர வருமானந்தான் மாசத்துலே பாதி நாளைக் கடத்தக் கூடப் பத்தல்லியே!...என்னங்க இது! ...உம்?......நீங்களே இப்படி கண்ணெ கசக்கினு...

ரகு: (வறண்ட குரலில்) அதில்லே கல்யாணி, இந்தப் பயமணி காலெப் பாத்தியா? பாளம் பாளமா வெடிச்சு கிடக்கு. சிலசமயம் அந்தப் பித்த வெடி உபத்திரவந் தாங்காமெ அவன் தட்டித் தடுமாறி சுவரெ பிடிச்சுகிட்டு நடக்கற அப்போ பாக்கற கண்ணெ குத்திக் கணம் போலே இருக்கு! அதோடே தார் ரோட்டுலே வெயிலிலே பள்ளிக்கூடம் போய் வர்ர அந்தப் புள்ளைக்குக் கேவலம்

செருப்பு வாங்கி கொடுக்கக் கூட முடியலே பாத்தியா நமக்கு ?

கல் : அடிக்கடி சொல்லிகிட்டே இருக்கோம்...உம் ... என்ன செய் யிறது ? சம்பளம் பத்தலியேன்னு ஏதோ ரெண்டு கதை கட்டுரையை எழுதினு...அதிலேயும் பலனேக் காணமே !

ரகு : எல்லாம் என்னுேட அதிர்ஷ்டம் கல்யாணி.

கல் ; சரி சரி. நொந்து வந் திருக்கீங்க ; படுத்து தூங்குங்க.

ரகு : அந்தக் கடுதாசெல்லாம் எங்கே ?

கல் : இப்ப எதுக்கு அதை யெல்லாம் பாத்து அலட்டிக்கணும்?

ரகு : பாக்கலாம் கொண்டா யேன்.

கல் : இதோ கொண்டாரேன் ...(தாமதம்)

ரகு : (பெருமூச்சு) உம்...என் னிக்குத்தான் விடிவு காலமோ !

கல் ; இந்தாங்க.

ரகு : (மெதுவாக) அப்பாவுக்கு அபிராமி வணக்கம்...

கல் : (மெல்ல) ஆமா...சாயங் காலத் தபால்லே ஒரு கடுதாசி வந் ததுன்னு மணி சொன்னுனே... இருங்க, இருங்க ; பசங்களோடே பந்து விளையாடற மும்முரத்திலே அதை வாங்கி கூடத்து அலமாரி யிலே...இருங்க வர்ரேன்.

ரகு : அது ஒரு கடன்காரர் கடுதாசா இருக்கும்.

கல் : இந்தாங்க.

ரகு : (கூவல்) கல்யாணி !... கல்யாணி !...இதோ...இதோ...

கல் : (படபடப்பாக) என் னங்க ?...என்னங்க ?...

ரகு : (இரைந்து) போச்சு !... போச்சு !......நம்மைப் பிடிச்சிருந்த பீடையெல்லாம் இன்னியோடே போச்சு !

கல் . (பரபரப்பாக) என் னங்க ?......விஷயத்தை சொல் லாமே...

ரகு : இந்தக் கடிதாசி கதை இலக்கிய சங்கத்திலேருந்து வந்தி ருக்கு கல்யாணி, கதை இலக்கிய சங்கத்திலேருந்து வந்திருக்கு. முன்னே நான் போட்டிக்கு அனுப்பி யிருந்தேனே நினைவிருக்கா ?... நாவல் !...

கல் : ஆமா. ஆனந்த சாக ரம்னு ஒண்ணு எழுதி...

ரகு : அந்தப் பேரு அவங்களுக் குப் பிடிக்கல்லே ; மகிழ்ச்சிக் கடல்னு மாத்திருக்காங்க. தலைப் பைப் பத்தி என்ன ? ரூபாய் ஐயாயிரம் கல்யாணி, ரூபாய் ஐயாயிரம் !

கல் : (மகிழச்சிப் பெருமூச்சு) அப்பாடா !...கடவுள் நம்மை இப் பத்தான் கண் திறந்து பார்க்க ஆரம்பிச்சிருக்காரு. மொதல்லே இது வந்திருக்கில்லே ; இனிமே பாருங்களேன் ! அடுத்தடுத்து நமக்கு நல்ல காலந்தான் ! எதிலே யும் வெற்றிதான் !...பவானி பாத் திருந்தா அப்பவே சொல்லி யிருப்பா.

ரகு : கல்யாணி !...

கல் : (பயந்து) என்னங்க இது ? உங்க உடம்பு ஏன் இப்படி பதறுது ?...நாற்காலியிலே யாச்சும் சாஞ்சுக்குங்களேன்

ரகு : (சிரித்து) ஒண்ணுமில்லே கல்யாணி. தரித்திரனுக்குப் புதை யல் கிடைச்சாப்பலேன்னு அடிக் கடி கதைகள்ளே சுலவமா எழுதிட றேன். அந்த நிலையெ அனுபவிக் கிறபோது......தாங்க முடியல்லே கல்யாணி.

கல் : போவுது, பானு ஆசை யோடே ஆடுங்குதிரை கேட்டு கண்ணெ கசக்கினது வீண் போகல்லே.

ரகு : ஆடுங்குதிரை என்ன ? ஆளையே வாங்கிக் கொடுத்திட லாம் கல்யாணி ! மணிப் பயலுக்கு கேரம் போர்டு, செருப்பு எல் லாமே வாங்கிடலாம். பவானியும் ஆசைப்பட்டபடி மேலே படிக் கட்டும்.

கல் : முதல்லே வாடகைத் தொல்லை இல்லாமெ ஒரு வீட்டை கட்டிக்கிட்டு போய்ச் சேரணும்.

ரகு : அது மட்டுமில்லே கல்யாணி; அபிராமியை கொடுத்த மாதிரி பஞ்சையான இடத்திலே பவானியைத் தள்ளிவிடாமெ நல்ல இடமாபாத்து கட்டிக்கொடுக்கணும்.

கல் : சரி. நேரம் ரொம்ப ஆயி போச்சு. மிச்சத்தெ காலையிலே பேசிக்கலாம். படுங்க. காலையிலே எழுந்து ஓடணுமில்லே, அடிமைப் பொழைப்புக்கு !

ரகு : தூக்கமே வராது போலே இருக்கு ... பரிசளிப்பு விழா ... பத்தாந்தேதியா ... சரி ... புறப்படறதுக்குப் பணம் வேணும். அதுக்கென்ன கடுதாசெக் காட்டினா ஆபீசிலே தர்ராங்க...நீ படுத்துட்டயா ? ...சரி. நானும் படுக்கறேன்.

★

உதவி ஆசிரியர் : ஸார் !... ரகுராமன் !...

ரகுராமன் : யாரு?...(அருகில்) வாங்க ஸார் ... வாங்க...உள்ளே வாங்க ... உக்காருங்க ... நீங்க ... யாரு ?...

உ. ஆ : மனோரஞ்சிதம் உதவி ஆசிரியர். உங்களுக்குப் பரிசு...

ரகு : (மகிழ்ச்சி) ஹி ஹி...ஆமா, ...எல்லாம் உங்களைப் போல உள்ளவங்களோட அன்புதான் காரணம்.

உ. ஆ: கர்ரெக்ட் ! நீங்க சொன்னது ரொம்ப சரி. கதை இலக்கியச் சங்கத்துக்கு இந்தப் பிராந்தியப் பிரதிநிதி மனோரஞ்சிதம்தான். அதனாலே நீங்க பரிசு வாங்கினதிலே எல்லாரையும்விட எங்களுக்குத் தான் அதிக மகிழ்ச்சி. முக்கியமா எனக்கு ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி ஸார் !

ரகு : (மகிழ்ச்சி) ரொம்ப சந்தோஷம். ஹி ஹி ... கல்யாணி... காபி கொண்டுவா ஸாருக்கு.

உ.ஆ: காபிக்கு என்ன ஸார்? ...வரட்டும்...உம்...இப்ப ... உங்க போட்டோ ஒண்ணு வேணும். உங்களோட வாழ்க்கைக் குறிப்பு வேணும். உங்களுடைய எழுத்து அநுபவம்...

ரகு: (தாமதம்) இந்தாங்க போட்டோ. இதோ இதிலே என்னுடை வாழ்க்கைக் குறிப்பு இருக்கு.

உ.ஆ: (சிரித்து) பேஷ் பேஷ்! ...எல்லாம் முன் கூட்டியே ரெடி பண்ணி வச்சிருக்கிங்க போலே இருக்கே!

ரகு: அதெல்லாம் ஒண்ணும் இல்லே ஸார். ஒரு சிறு கதை எழுதினேன். அதிலே என்னுடை அவல நிலையை அப்படியே வருணிச்சேன். அதுக்காக இந்த வாழ்க்கைக் குறிப்பைத் தயாரிச்சேன். அதுதான் இது.

உ.ஆ: ஓகோ! அந்தக் கதை எந்தப் பத்திரிகையிலே பிரசுரமாச்சு?

ரகு: (வருத்தம்) நாலஞ்சு பத்திரிகைக்கு அனுப்பிப் பார்த்தேன். யாருமே போடலே. நான் அதை உள்ளே எடுத்துப் போட்டேன்.

உ.ஆ: (வியப்பு) அட!... உங்க கதைகளைக் கூடவா மறுக்கிருங்க?

ரகு: (துயரம்) ஏன் ஸார் கேக்கறீங்க, அந்த வெட்கக் கேட்டை! நேத்துவரைக்கும் என்னை யாருமே மதிக்கல்லே. இன்னிக்குப் பரிசு கிடைசுட்டதில்லே? இனிமே தான்...

உ.ஆ: ஆமா. ஆமா, இனி மேல்தான் உங்களுக்குப் புகழும் பொருளும் வந்து குவியப் போகுது!...அ...நீங்க இதுவரைக்கும் எத்தனை நாவல் எழுதியிருக்கிங்க?

ரகு: மூணு ஸார். ஒண்ணு அரை குறையிலே நின்னு போச்சு; இன்னொண்ணை ஒரு பத்திரிகைக்கு அனுப்பினேன். அவங்க அதை வெளியிடவுமில்லே, திருப்பவும் இல்லே. பல கடுதாசி எழுதினேன்; நேரிலேகூட போய் வந்தேன் ... நாவல் அவங்ககிட்டே வந்து சேரவே இல்லேன்னுட்டாங்க...மூணுவதுதான் இப்போ... பரிசு...

உ.ஆ: சரிதான், சரிதான். மொத்தம் எத்தனை சிறு கதைங்க இதுவரை எழுதியிருக்கிங்க?

ரகு: (விரக்தி நகைப்பு) எழுதின கணக்கு வேணுமா, அச்சிலே வந்த கணக்கு வேணுமா?

உ.ஆ: ஏன் இப்படி கேக்கறீங்க?

ரகு: ஏன்னு, அருமையான கதைங்க நூறுக்கு மேலேயே எழுதியிருக்கேன். ஆனு...இந்த பத்திரிகைக்காரங்களுக்கு அதுங்களோட அருமை கொஞ்சம்கூட தெரியலியே!

உ.ஆ: (வியப்பு) அப்படியா?...

ரகு: 'கதை ரொம்ப பிரமாதம்; ஆனு உங்க சொந்த சரக்கு இல்லே'ன்னு ஏழெட்டு கதைங்களை ஒருத்தரேபோல எல்லாருமே திருப்பிட்டாங்க. நான் பல ராத்திரி கண் விழிச்சு இங்கிலீஷ் சினிமாக்களை பார்த்து அரும்பாடு பட்டு எழுதினேன் அதுங்களை. பல இங்கிலீஷ் கதைப் புஸ்தகங்களோட பேரெ குறிப்பிட்டு நான் அதிலேருந்து அதுங்களெ திருடிட்டதாகக் குத்தம் சாட்டருங்க. எப்படி இருக்கு விஷயம்?

உ.ஆ: உம் ...அப்போ ... அச்சிலே உங்க கதை...

ரகு: இனிமேதான் ஸார் வரணும். இந்தப் பரிசு நாவல்தான்..

உ.ஆ: பாத்தீங்களா ஸார் ஒரு ஆச்சரியத்தை?

ரகு: என்ன ஸார்?

உ.ஆ: சின்ன வயசு உள்ள எத்தனையோ பேர் விர்ருன்னு அவுட் வாணம் மாதிரி மேலுக்கு வந்து பிரகாசிச்சுகிட்டிருக்கிற இந்தக் காலத்திலே உங்களைப்போலே உள்ள பழுத்த அறிவாளிங்களுக்கு ஐம்பது வயசுக்கு மேலேதான் புகழும் பொருளும் கிடைக்குது!

ரகு: முயற்சியும் திறமையும் மட்டுமே இருந்தா போறலியே

ஸார். அதிர்ஷ்டம்ங்கற ஒண்ணில்லே வேண்டியிருக்கு ?

உ.ஆ: ரொம்ப சரியான பேச்சு...உம்...எழுத்துத் துறையைப் பத்தி உங்க அபிப்பிராயம் என்ன ஸார்?

ரகு: வேறே பின்பலம்—அதாவது சொத்து, வியாபாரம், கை நிறைந்த சம்பளம், அல்லது நல்ல ஆதரவு—இப்படி ஏதாவது — இல்லாதவங்க எழுத்தைப் பிழைப்பாக வச்சு கிட்டா மண்ணைக் கவ்வ வேண்டியதுதான். சொந்த அநுபவம் இது.

உ.ஆ: கதை இலக்கியம் வளருதா, இல்லே...

ரகு: வளந்துகிட்டுத்தான் வருது. சாமானியமா இல்லே; அசுர வேகத்திலேதான் வளருது. ஆனா...

உ.ஆ: ஆனால்?...

ரகு: பயனுள்ள முறையிலே வளருதுன்னு சொல்ல முடியாது.

உ.ஆ: சரி சார். உங்களுக்கு ரொம்ப தொந்தரவு கொடுத்துட்டேன்...உத்தரவு வாங்கிக்கிறேன். ஒன்பதாந்தேதி ஸ்டேஷன்லே சந்திப்போம்.

ரகு: (மகிழ்ச்சி) விழாவுக்கு நீங்களும் வர்ரீங்களா?

உ.ஆ: ஆசிரியருக்கு உடம்பு சரியில்லே. அதுக்குள்ளே குணம் ஆய்ட்டா ரெண்டு பேருமே வருவோம். இல்லேன்னா நான் மட்டும் வருவேன்...வர்ரேன் ஸார். வணக்கம்.

உ.ஆ: (பிரசங்க முறை) அவைத் தலைவர் அவர்களே! இலக்கிய ரசிகப் பெருமக்களே! இன்று இங்கே சொற்பொழிவாற்றிப் பரிசுகளை வழங்க இருந்த மனோரஞ்சிதம் ஆசிரியர் சுகவீனமாக இருப்பதால் அந்தப் பொறுப்பை சங்கத்தார் என்னிடம் சுமத்தியுள்ளார்கள். (கரகோஷம்) இந்தச் சங்கம் மூன்று ஆண்டு முயற்சியில் நடத்தி முடித்த பரிசுப் போட்டித் திட்டத்திலே நாவலுக்குரிய பெரும் பரிசைப் பெற்ற ரகுராமன் அவர்கள் நீறுபூத்த நெருப்பு! (கரகோஷம்) ஐம்பது ஆண்டுகளைக் கடந்த இப் பெரியவர் தமது மகத்தான சக்தியை இதுவரை வெளிப்படுத்



சோவியத் பிரதமர் குருஷேவ், ராஷ்டிரபதி பவனத்திற்கு பவனி வரும் காட்சி.

தாதிருந்தது எழுத்துலகுக்கு நஷ்ட மாயினும் நம் சங்கத்திற்கு லாபமே! (கரகோஷம்) இவரு டைய படைப்பு இவர் அமைத் திருந்த தலைப்பு "ஆனந்த ஸாக ரம்." சங்கத்தார் தனித் தமிழ்ச் சிறப்புத் தோன்ற "மகிழ்ச்சிக் கடல்" என்று அதை மாற்றி யிருக் கிறார்கள். (கரகோஷம்) நாவலை நான் படிக்கவில்லை. (கரகோஷம், சிரிப்பு) படித்தவர்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்ததாகச் சொல்கிறார் கள். நாட்டிலுள்ள அனைவரும் அந் நிலையைப் பெறுவார்கள் என் பதில் ஐயம் இல்லை. அன்பர் ரகு ராமன் வாழ்க! நமது சங்கம் வாழ்க! சங்கத்தின் சார்பில் இந் தப் பூமாலையை இவருக்கு அளித் துப் பரிசுத் தொகையைத் தமிழன் னையின் ஆசியுடன் வழங்குகிறேன். (கரகோஷம்) அன்பர் ரகுராமன் இதுபோல் இன்னும் பல உயர்ந்த நாவல்களைப் படைத்துத் தமிழ் மொழிக்கு நல்ல தொண்டு செய்ய வேண்டுமென்று உங்கள் சார்பில் வாழ்த்துகிறேன். (கரகோஷம்) (ஆரவாரம்)

ரகு: (கனைத்து) அன்பர்களே! (கனைப்பு) தலைவர் அவர்களே!... (கனைப்பு) எனக்குப் பேச வர வில்லை. (கனைப்பு) வணக்கம். (கனைப்பு) நன்றி!...(ஆரவாரம். கூட்டம் கலையும் சந்தடி.)

★

ரகு: (பலமான குறட்டை ஒலி) போய் வரேங்க...

கல்: என்னுங்க ... எந்திரிக் கல்லே!

ரகு: (உரக்க) எல்லாருக்கும் போய் வரேன்!... வணக்கம்... வணக்கம்!

கல்: (அலுப்புடன்) அடாடா! என்ன இது! மணி ஒம்பது ஆச்சு, இவரு இன்னும் குறட்டையும் கனவுமா...என்னுங்க ...எந்திரிங்க.

ரகு: (விழித்தெழும் பாவனை) ஆ...(கொட்டாவி) ... கல்யாணி...

கல். நல்லா இருக்கு கதெ!... நாலு நாளா சோறுகூட தின்னுமே வேலெ வேலேன்னு எட்டு மணிக்கே ஓடினீங்க ... இன்னிக்கு என்னுடான்னு ... ஒன்பதாகியும்... ஆபீசுக்குப் போவாணுமா?

ரகு: (வெடுவெடுப்பு) அட என்ன புள்ளே தொண தொணன்னு! இன்னிக்கு ஆபீசுக் கும் போகமெ போனுத்தான் என்ன?

கல்: சரியாப் போச்சு! அர சனெ நம்பி புருசனெ கைவிட்ட கதைதான்!

ரகு: (மகிழ்ச்சி) அற்புதமான கனவு கல்யாணி!...... அதுக்குள் ளாற நீ எழுப்பிட்டே...ஆனு... விழாவெல்லாம் முடிஞ்சு மாலையுங் கழுத்துமா...

கல்: ஓ!......பரிசு வாங்கற கனவா?...

ரகு: போனுல் போவுது. பத் தாந்தேதிதான் நேரிலேயே...

கல்: (குழைவாக) இதோ பாருங்க...என்னையும் கூட்டிகிட்டு..

ரகு: அசடே! என்ன ஒளற்றே! தலைக்கொசந்த பொண்ணையும். மத்த பசங்களையும் விட்டுட்டு நீ மாத்ரம் வரலாமா?

கல்: அப்போ ... எல்லாருமே போகலாங்கறீங்களா?

ரகு: ஐயையோ! என் ஒன்டிக்கு ரெயில் சார்ஜுக்கே திண்டாட் டமா இருக்கு...நீ ஒண்ணு...

கல்: (பிணங்கி) மாலை யுங் கழுத்துமா நீங்க மேடையிலே நிக் கிறப்போ...பாக்கணும்னு... ஆசை யாயிருக்குன்னு...

ரகு: அதுக்கென்ன? பேப்பர் லேல்லாம் படம் வரும் கல்யாணி.

குமார்: ஸார்!...

கல்: யாரு?...

குமா: நாலாம் நம்பர் வீடு இதுதானே?

ரகு: கதவுலே நம்பர் இல்லே?

குமா: ஓ!......கவனிக்கல்லே ஸார்...மன்னிக்கணும்.

ரகு: சரி சரி. நீ யாரப்பா?

குமா: நாற்பத்தொண்ணும் நம்பர் வீட்டிலேருந்து வர்ரேன்,

ரகு : என்ன விஷயம் ?...... இங்கே இப்படிவா.

குமா : நாங்க திருச்சியிலே ருந்து இங்கே குடிவந்து ஒருவாரம் ஆவுது. எங்க தபால் ஏதாவது இங்கே தவறி...

ரகு : (அதட்டி) என்னப்பா ஒளரறே ! உங்க தபால் ஏன் இங்கே வருது ?......காலே வேளே யிலே நேரத்தை வீணுக்காதே... போ.

குமா : இல்லே ஸார் ... எங் கப்பா டூர் போயிருக்காங்க. காலேப் பேப்பரைப் பாத்துட்டு எங்க வீட் டுக்கார மாமா, எங்க அப்பாவுக்குப் பரிசு விழுந்திருக்குன்னு சொன் ணுங்க.

ரகு : (திடுக்கிட்டு) ஆ !...

குமா : பரிசு விழுந்தா கடுதாசு வரும்னு அப்பா சொல்லி கிட்டிருந் தார். ஒருவேளே தபால் தட்டு கெட்டு உங்ககிட்டே வந்திருக்கு மோன்னு எங்கப்பா கேட்கச் சொன்ணுங்க.

ரகு : (தயங்கி) அப்படியா !... உங்கப்பா பேரு ?

குமா : எஸ். ரகுநாதன்.

ரகு : (வியப்பு) எழுத்தாளர் ரகுநாதனு !... இந்த தெருவுக்கா குடி வந்திருக்கீங்க ? ரொம்ப சந் தோஷம். என் பேர் இனிமே தான் பிரபலமாகணும். நீ சொல் றது தவறு. பரிசு எனக்குத்தான். உங்கப்பாவுக்கு இல்லே... அதா வது, கதை இலக்கியச் சங்கப் பரிசு தானே ? உங்கப்பாவும் நாவல் அனுப்பி யிருந்தாரா ?... என்ன பேரு ?

கல் : இவ்வளவு எதுக்கு ?... இந்தாங்க...கடிதாசு. தம்பி கிட்டே காட்டிடுங்களேன். பாத்துட்டுப் போவட்டும்.

குமா : எங்கப்பா நாவல் பேர் " மகிழ்ச்சிக் கடல் !"

ரகு : (திடுக்கிட்டு உரக்க) ஆ ! (பதறி) கல்யாணி ! கடுதாசை இப் படிக் கொடு !...(பார்த்துத் திடுக் கிட்டு) ஆ !...உறைமேலே நல்லா 'ரகுநாதன்'னுதான்... ...(நெஞ்சை அடைக்கிறது) ஆ!...கல்யாணி !...

கல் : (படபடப்புடன்)குந்துங்க குந்துங்க. அப்படியே குந்துங்க. கிழே விழுந்துடப் போறீங்க !... (அவர் சாய்கிருர்) தம்பி, கொஞ்சம் தாங்கிப் பிடியேன்...ஐயோ !...... கண்ணே இழுக்குதே !

தாபற்கரான் : போஸ்ட் !... ரிஜிஸ்தர் !...ரகுராமன் !...

கல் : தபால்கார ஐயா, கொஞ் சம் இருங்கய்யா. (கணவரின் முகத் தில் தண்ணீர் தெளிக்கிருள். அவர் தெளிவு பெறுகிருர்.) என்னங்க, அப்படியே சுவரிலே சாஞ்சுக்குங்க. தபால் வந்திருக்கு. ரிஜிஸ்தராம். வாங்கியாறேன்.

ரகு : ஆ ! ரிஜிஸ்தரா ?...அங் கிருந்துதான் வந்திருக்கும் ; (கல் யாணி பெரிய பார்சலே வாங்கி வருகிருள்.) சரிதான் ! நம்ம நாவ லோட கையெழுத்துப் பிரதிதான். (உரக்க) தம்பி, இந்தா தம்பி கடுதாசு. உனக்கு உள்ளது அது ; எனக்கு உள்ளது இது !

கல் : கிடக்கு தள்ளுங்க. பரிசு வாங்கப் பொறந்தவங்க வேறே ; கனவு காணப் பொறந்தவங்க நாம்.

ரகு : அப்படி சொல்லாதே கல்யாணி. நம்ம படைப்பு நல்லா யிருந்தா பரிசு கிடைக்கத்தான் செய்யும். நல்லா படைக்கிற திறமை இல்லாமே ஆசை மட்டும் பட்டா கனவிலேதான் மகிழ்ச்சியை அநுபவிக்கணும்.

கல் : ஆபீசுக்கு லீவு சொல்லி டெலிபோணுச்சும்...

ரகு : வேணும் கல்யாணி. இந்த சமயத்திலே லீவு சொல்லி, அந்த பிழைப்பையும் கெடுத்துக்கவா ?... இதோ கிளம்பிட்டேன். உம்... பரிசு !... ரகுராமனுக்குப் பரிசு ! (போகிருர்) [திரை]

*pride of place*
*for*
*durability*



There is nothing to beat Mettur Mulls and Long Cloth for sheer durability. Naturally, those who want white cloth which wears longest, prefer Mettur Mulls and Long Cloth. Look for the METTUR sign, mark your dealer and buy with confidence at fixed and economical prices.

# Mettur Mulls & Long Cloth

*Manufactured by:*
**METTUR INDUSTRIES LTD.**
Mettur Dam R.S.—Salem District.

*Managing Agents:*
**W. A. BEARDSELL & CO. (PRIVATE) LTD.,**
**MADRAS-1.**

EP

# சிபாரிசு

எஸ். வைத்தியநாதன்



"யசோ! நான் எவ்வளவோ சொல்லியும் நீ திருந்தவில்லை. உன் காரியங்கள் எனக்குப் பிடிக்கவே இல்லை! துளிக்கூடப் பிடிக்கவே இல்லை! ஆமாம்!" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டான் வேங்கடசைலம்.

"அழகான முகத்தை ஏன் இப்படிக் கோரமாக்கிக்கொள்கிறீர்கள் ?" என்று முறுவலித்த யசோதரா, "அப்படி என்ன மாபெரும் பிசகை நான் செய்துவிட்டேன்?" என்றாள்.

"தெரியாதது மாதிரி ஏன் நடிக்கிறாய் ? அந்தப் பெருந்தேவியோ, மூதேவியோ, அவளோடு பழக்கம் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று எத்தனை தரம் படித்துப் படித்து உனக்குச் சொல்லி இருக்கிறேன்?"

சென்னை-600 008

"அவளை வீணாக ஏன் இகழுகிறீர்கள்? இத்தனை நாளாகப் பழகிவிட்டு திடீரென்று அவளை அகாரணமாக விரோதித்து கொள்ளமுடியுமா? அப்படி யொன்றும் விரும்பத் தகாதவளும் இல்லையே அவள்! ரொம்பவும் தங்கமான சுபாவம் உடையவளாச்சே!"

"அவள் தங்கமாக இருக்கட்டும், பிளாடினமாக வேண்டுமானாலும் இருக்கட்டும்! நீ அவளோடு சிநேகமாயிருப்பதும், சரிசமானமாக அளவளாவுவதும் எனக்கு உவப்பாயில்லை! ஒரு டெப்டி கலெக்டர் மாட்டுப்பெண், ஒரு சமையற்காரன்வீட்டு தரித்திரத்தை ஆருயிர் சிநேகிதியாக வைத்துக் கொண்டிருப்பது எனக்குத் தாங்க முடியாத அவமானமாயிருக்கிறது! அதை இனி ஒரு கணமும் என்னால் சகிக்க முடியாது! ஆமாம்!" என்று உறுமினான், வேங்கடசைலம், கடூரமாக.

'என் மாமனார் தானே டெப்டி கலெக்டர்! என் புருஷன் சாதாரண குமாஸ்தா தானே!' என்று கேட்கவேண்டும் போலிருந்தது அவளுக்கு. என்றாலும் பண்புமிக்க பெண்ணாதலால் அடக்கிக்கொண்டு பதில் சொல்லாமல் தன் வேலையை கவனிக்கச் சென்றாள்.

வேங்கடசைலத்தின் தகப்பனார் ரெவின்யூ இன்ஸ்பெக்டராக உத்தியோகம் செய்ய ஆரம்பித்து டெபுடி கலெக்டராக ரிடையர் ஆனவர். என்றாலும் மிகுந்த நாணயமும் யோக்கியப் பொறுப்பும் உள்ளவராதலால் அவரால் சொத்து ஒன்றும் சேர்த்துவைக்க முடியவில்லை! பெருத்த சம்சாரியான அவர் தமது நாலு பெண்களுக்கும் விவாகம் செய்துவைத்துக் கரையேறுவதற்குள் அவர் ஒழுங்கான முறையில் சேர்த்திருந்த சொல்ப பணமும் கரைந்துவிட்டது. கடைக்குட்டியான சைலம் என்னும் வேங்கடசைலம் பி.ஏ. முதல் வகுப்பு படித்துக் கொண்டிருக்கையில் அவர் காலமாகி விடவே அவன் படிப்பை அரை குறையாக நிறுத்தவேண்டி வந்தது.

சென்னைக் கம்பெனியொன்றில் கஷ்டப்பட்டு வேலை சம்பாதித்துக் கொண்ட அவனுக்குச் சில வருஷங்கள் கழித்து யசோதரா மனைவியாக வந்தாள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகளும் பிறந்தன. பேரக் குழந்தைகளுடன் சீராடிவிட்டு மன நிறைவுடன் சைலத்தின் தாயார் போய்ச் சேர்ந்தாள், வானுலகை நோக்கி.

சைலம் தன் கம்பெனியின் அக்கௌண்ட்ஸ் பிரிவில் சாதாரண குமாஸ்தா என்றாலும் தன் அப்பா வகித்த உத்தியோகத்தின் மூலம் தான் ரொம்பப் பெரிய அந்தஸ்து பெற்றுவிட்டதாக அவனுக்கு ஒரு பிரமை; அந்த பிரமையின் விளைவாக ஒரு பெருமை! சந்தர்ப்பம் ஏற்பட்ட போதெல்லாம் தான் ஒரு டெப்டி கலெக்டரின் மகன் என்பதை வெளிப்படுத்தத் தவறுவதில்லை அவன்! சந்தர்ப்பம் நேரா விட்டாலும் 'எங்கப்பா தஞ்சாவூரில் டெப்டி கலெக்டராயிருந்தபோது...' என்று ஆரம்பித்துக் கதைச்சொல்லி எதிராளிக்குத் தன் அந்தஸ்தைப் பிரகடனப் படுத்திக் கொள்வான்!

மயிலாப்பூரில் சைலம் குடியிருந்த வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருந்தாள் பெருந்தேவி என்ற பெண். அவள் கணவன் ஒரு சமையற்காரன். டாக்டர் ராமேசம் என்பவர் வீட்டில் சமையற்காரனாக இருந்து வந்தான்.

முதலில் யசோதராவுக்கும், பெருந்தேவிக்கும் வாசற் புறம் வரும்போது பார்த்தால் பரஸ்பரம் புன்னகை செய்துகொள்வது என்ற அளவில்தான் அறிமுகம் ஏற்பட்டிருந்தது. ஆயினும் ஒரு சில மாதங்களிலேயே அவர்கள் நெருங்கிய சிநேகிதிகளாக ஆகும்படியான சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டது.

ஒரு தடவை யசோதரா கடுமையான ஜுரமாகப் படுத்துவிட்டாள். அப்போது பெருந்தேவியின் உதவியை அவள் கோர நோந்தது. அந்தப் பெண்ணும் மகிழ்ச்சியுடன் ஒத்தாசை செய்ய முன் வந்தாள். யசோதராவைக் கவனித்து சிசுருஷை செய்வது, கஞ்சி வைத்துக்

கொடுப்பது, குழந்தைகளைப் பார்த்துக்கொள்வது. அவைகளுக்கு வேண்டியதைச் செய்வது, சைலத்துக்குச் சமைத்துப் போடுவது முதலிய சகல வேலைகளையும் பொறுப்பாகச்செய்து, யசோதராவின் அன்புக்கும் நன்றிக்கும் பாத்திரமாகி விட்ட அப்பெண்மணி அவள் மதிப்பிலும் மிக உயரும்படியான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

பத்து நாளில் உடம்பு மீண்டும் பழைய நிலைமைக்கு வந்து விட்டது யசோதராவுக்கு. தனக்குப் பெரும் ஒத்தாசை செய்த பெருந்தேவிக்குக் கைம்மாறுசெய்ய விரும்பிய அவள், வெற்றிலைப் பாக்கில் ஒரு பத்து ரூபாய் நோட்டை வைத்துப் பெருந்தேவிக்கு அளித்தாள். ரூபாயைத் தட்டிலேயே ஒதுக்கிவிட்டு வெற்றிலைப் பாக்கை மட்டும் எடுத்துக் கொண்டாள் அவள்.

"பணத்தையும் எடுத்துக் கொள்!" என்றாள் யசோதரா.

"பணம் எதுக்கு?"

"பத்து நாள் சிரமப்பட்டு உழைத்து, பெருத்த ஒத்தாசை செய்திருக்கிறாய் அல்லவா? அதற்கு..."

"கூலியா இது..."

"சேச்சே. அப்படிக் கருதவில்லை நான்! என் அன்பளிப்பாக வைத்துக் கொள்!..."

"பெயர் பகட்டாகத்தான் இருக்கு! என்றாலும் காரியாம்சத்தில் இரண்டுக்கும் அர்த்தம் ஒன்றுதானே!"

"பார்த்தாயா, தப்பாக எண்ணாதே!...எடுத்துக் கொள்!"

"என் கணவர் சமையற்காரராக இருப்பது போதும்! நான் வேறு சமையற்காரி உத்தியோகம் பண்ணவேண்டாம்!" என்று சிரித்த பெருந்தேவி பிடிவாதமாக பணத்தை எடுத்துக் கொள்ள மறுத்து விட்டாள்!

ஏழையாயிருந்தாலும் உள்ளத்தால் மிக உயர்ந்தவள் என்பதை நிரூபித்துவிட்ட பெருந்தேவியிடம் யசோதராவுக்கு அசாத்தியமான மதிப்பு உண்டாகிவிட்டதில் வியப்பில்லை அல்லவா?


இன்றே விஜயம் செய்யுங்கள்

மதுரையில்

1901-ல் ஸ்தாபிக்கப்பட்டது
மூன்று தலைமுறையாக
நடைபெற்றுவரும்.

ஒரிஜினல்
நாகப்பட்டணம்
நெய் மிட்டாய் கடை

இது ஒன்றுதான்
20, மேலச் சித்திரை வீதி
(மேல கோபுரம் சமீபம்)

Prop: வி. வெங்கட்ருமய்யர் சன்
வி. அனந்தநாராயணன் மதுரை.

இருவருக்கும் நேசம் வளர்ந்தது. பழக்கம் முதிர்ந்தது. இவள் வீட்டுக்கு அவள் வருவதும், அவள் வீட்டுக்கு இவள் போவதும், இருவரும் சேர்ந்து கோயிலுக்குப் போவதும், சினிமாவுக்குச் செல்லுவதும் கதை கேட்கப் போவதும் அடிக்கடி நிகழும் சம்பவங்களாயின.

'டெப்டி கலெக்டர் பிள்ளை'க்கு இதெல்லாம் உடன்பாடாக இல்லை. அந்தச் சமையற்காரப் பிணத்தோடு தன் மனைவி 'குலாவுவதை'த் தடை செய்ய விரும்பினான் அவன். 'அதைக் கட்டிக்கொண்டு ஏன் மாரடிக்கிறாய் ஓயாமல்! என் சிநேகிதர்களெல்லாம் பார்த்தால் அத்தோடு என் கௌரவம் படுபாதாளத்தில் அல்லவா வீழ்ந்துவிடும்?' என்று அவளிடம் முறையிட்டான்.

"நமக்குச் சமயத்துக்கு ஒத்தாசை செய்தவள் இல்லையா அவள்?" என்றாள் யசோதரா.

"அதற்காக அவளைக் கட்டிக் கொண்டு கொஞ்சணுமா? ஐந்தோ பத்தோ கொடுத்துப் போகச் சொல்வாயா!" என்றான் சைலம்.

"பத்து ரூபாய்கூடக் கொடுத்துப் பார்த்தேன். அவள் வாங்க மறுத்துவிட்டாள். ஏழையாயிருந்தாலும் எவ்வளவு கௌரவமுள்ளவள் தெரியுமா அவள்!"

"நினைத்துக்கொண்டிரு! அப்படி வேஷம் போட்டு, கடைசியில் பெரிசாக எதையாவது சுருட்டிக் கொண்டு போய்விடுவாள்!"

யசோதரா கணவன் மனப்போக்கைக் கண்டு மிகவும் வருந்தினாள். அவனுடைய போலி கௌரவ உணர்ச்சிக்காக அந்த நல்ல பெண்ணினுடைய சிநேகத்தைக் கத்தரித்துக்கொள்ள அவள் விரும்பவில்லை. அது மிகவும் பண்புக் குறைவான காரியம் என்று அவள் கருதினாள். பல தடவை சொல்லியும் அவள் தன் போக்கிலேயே செல்வதையும் பெருந்தேவியுடன் உறவாடுவதை நிறுத்தாததையும் கண்ட சைலம் ஒரு நாள் தன் கண்டனத்தைக் கடுமையாகவே தெரிவித்தான். அதைத் தான் இந்த வரலாற்றின் ஆரம்பத்தில் பார்த்தோம்.

கணவனின் கண்டிப்பான கட்டளைக்குப் பிறகும் பெருந்தேவியோடு உறவாடுவதை அடியோடு நிறுத்த யசோதரா துணியவில்லை. அவன் ஆபீஸுக்குப் போனபிறகு அவளோடு உறவாடுவது என்று கட்டுப்பாடு செய்து கொண்டாள்.

சில நாட்கள் கழித்து ஒருநாள் மாலை ஆபீஸிலிருந்து வந்த சைலத்தின் முகம் பேயறைந்த மாதிரி இருந்ததையும், ஒன்றுமே பேசாமல சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு மோட்டு வளையைத் துயரத்துடன் அவன் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்ததையும் கண்ட யசோதரா கலவர மடைந்தாள். அவனை நெருங்கி "ஏன் என்னவோபோல் இருக்கிறீர்கள்? உடம்புக்கென்ன?" என்று விசாரித்தாள்.

அவன் பதில் சொல்லாமல் பெருமூச்செறிந்தான்.

அவள் கவலையுடன் தூண்டித் துருவிக் கேட்ட பிறகு தன்னை வேலையிலிருந்து நீக்கிவிட முதலாளி முடிவு செய்து விட்டதாக ஆபீஸில் வதந்தி பரவியிருப்பதாக அவன் தெரிவித்தான்.

அவளுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. தைரியப்படுத்திக் கொள்ள முயன்றவாறு "வதந்திதானே! நிஜமாயிருக்காது! புரளியை யெல்லாம் நம்பிக் கவலைப் படாதீர்கள்!" என்று அவனைத் தேற்றினாள்.

"புரளியாக இருக்க முடியாது யசோ! முதலாளியின் வலது கையும், அவரது காரியதரிசியுமான சசிதரனே ஜாடையாக என்னிடம் கூறினான். அவன் அக்கப்போர் பேர்வழியல்ல. அத்தோடு முதலாளிக்கு மிகவும் அந்தரங்கமானவன்..."

"முதலாளியைப் பார்த்தீர்களா?"

"அவர் ஊரிலில்லை. இன்று இரவு தான் வருகிறார்... அவரைப் பார்த்தாலும் ஒன்றும் பயன்படாது. மிகவும் பிடிவாதக்காரர்..."

"எதற்காக உங்களை நீக்குகிறுராம்! நீங்கள் செய்த பிசகென்ன?"

"என் இலாகாவில் எனக்கு மேலே இருக்கும் கோபாலனுக்கும் ரங்கனுக்கும் நான் புத்திசாலியாயிருக்கிறேன் என்று பொருமை. அவர்களுடைய பதவிக்கு நான் வந்து விடுவேனே, அவர்களைக் கீழே இறக்கி விடுவேனே என்ற பயம்! எனவே ஓயாமல் முதலாளியிடம் என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகக் கூறிக் கோள் சொல்வதே அவர்கள் வேலை! அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமல்லவா? முதலாளி அவர்கள் பொய்களை நம்பிவிட்டார்!"

"அதற்காக தீர விசாரிக்காமல் ஒருதலை பட்சமாக முடிவுசெய்து விடுவாரா என்ன?"

"அதுதான் செய்து விட்டாரே!"

ஒரு பெரிய கம்பெனியைப் பல வருஷங்களாக நிர்வகித்து வெற்றிகரமாக நடத்திவரும் ஒருவர் இப்படிப் பொறுப்பின்றிக் காரியம் செய்வார் என்பதை யசோதரா வால் நம்ப முடியவில்லை. சைலம் ஏதோ பிசகு செய்து அவருடைய அதிருப்திக்கு ஆளாகியிருக்க வேண்டும். அதை அவன் மறைத்து ஜம்பமாக வேறு ஏதோ சால்ஜாப்புக் கூறுகிறுன் என்று அவள் கருதினுள்.

அவள் அபிப்பிராயம் ஓரளவு சரியே. 'முட்டாள் பயல்'களாகிய கோபாலனும், ரங்கனும் தனக்கு மேல் பதவி வகிப்பது பற்றிச் சைலத்துக்கு அசாத்தியக் கோபம் பொருமை! அவர்கள் பதவியைத் தான் பிடித்துக்கொண்டு விட வேண்டும் என்பதற்காக அவர்களைப் பற்றி முதலாளியிடம் ஓயாமல் கோள் சொல்லிக்கொண்டிருப்பான் அவன். 'அந்த நல்ல மனிதர் அவைகளைக் காதில் வாங்கிக் கொள்வதில்லை. 'யார் எப்படிப் போனுல் உனக்கென்ன ஐயா! உன் வேலையைச் சரியாகச் செய்! அதுபோதும்!' என்று கூறி அவனை அனுப்பிவிடுவார்.

அவன் தன் போக்கைத் திருத்திக் கொள்ளவில்லை. முதலாளிக்கு அலுப்பும், கோபமும் ஏற்பட்டுவிட்டன. அந்த 'விரும்பத்தகாதவன்' கம்பெனிக்கே லாயக்கில்லை என்று முடிவு செய்துவிட்டார். சந்தர்ப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார். கணக்குகளில் பெரும் பிழை ஒன்றைச் செய்ததின் மூலம் அந்தச் சந்தர்ப்பத்தை அவருக்கு அளித்தான் சைலம்.

மறுநாள் ஆபீஸுக்கு வந்ததும் முதல் வேலையாக சைலத்தை அழைத்து வேலை நீக்க உத்தரவை வாய்மொழியாகத் தெரிவித்து விட்டார் முதலாளி முத்து ராமன். சைலம் எவ்வளவோ வேண்டிக் கொண்டும் அவர் உறுதி தளரவில்லை. 'தகுதியற்றவனும், விரும்பத் தகாதவனுமாகிய அவன் ஆபீஸுக்கே பெருத்த களங்கம். அபாயத்தை விளைவிக்கக்கூடியவன்' என்று கூறி அவன் வீட்டுக்குப் போகலாமென்றும், மறுநாள் வந்து மூன்று மாதச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு போகலாம் என்றும் தீர்மானமாகக் கூறிவிட்டார்.

எதிர்பார்த்ததுதான். என்றுலும் துயரமும் அவமானமும், எதிர்காலத்தைப் பற்றிய கவலையும் அவனைக் குடையாமலிருக்குமா! தள்ளாடிக் கொண்டே வீட்டுக்கு வந்தவன் பெருந்தேவியின் வீட்டுக்குப் போய்விட்டுத் தங்கள் வீட்டுக்குள் நுழையும் யசோதராவைச் சற்று தூரத்திலிருந்தே பார்த்தான். அவனது பல்வேறு உணர்ச்சிகளும் மனைவிமீது பெருஞ் சீற்றமாகப் பரிணமித்தன. விரைந்து வந்து வீட்டுக்குள் நுழைந்து மனவியைப் பளார் பளார் என்று அறைந்தான்! "அந்தப் பரிசாரகப் பிணத்தோடு சிநேகத்தை விட்டு விடு என்று எத்தனை தரம் சொன்னேன்! கேட்காமல் குலாவிக் கொண்டிருக்கிருயா! அதோடு பழகிப் பழகி அதன் தரித்திரத்தை நமக்கும் கொண்டு வந்து விட்டாய்! என் வேலை 'ஹோகயா' ஆகிவிட்டது. இனிமேல் நீயும் சமையற்காரி வேலைக்குப் போக வேண்டியது தான்!" என்று சம்பந்தமின்றிக் கத்தினுன்.

"இல்லை. ஒரு காரியமாக..." என்று வலியைப் பொறுத்துக் கொண்டு ஆரம்பித்தவளை "சமா

தானம் ஒன்றும் தேவையில்லை! பேசினுயோ கழுத்தைத் திருகி விடுவேன்!'' என்று கர்ஜித்து அடக்கி விட்டு அப்பால் போய் விட்டான்.

மறுநாள் பிற்பகல் மூன்று மணிக்கு மூன்று மாதச் சம்பளப் பணத்தைப் பெற்றுக்கொண்டு வருவதற்காக ஆபீஸுக்குப் போன சைலம் ஐந்து மணிக்கு வீடு திரும்பினுன். அவன் முகத்தில் குதூகலம் குமிழியிட்டது. "யசோ, யசோ!'' என்று குழைவுடன் மனைவியை விளித்து 'எனக்கு உத்தியோகம் போகவில்லை! வேலை நீக்க உத்தரவை முதலாளி வாபஸ் பெற்று விட்டார்!'' என்ருன் எக்களிப்போடு.

அச் செய்தியைக் கேட்டு அவள் வியப்போ பரபரப்போ அடையவில்லை! "ஏனும்?'' என்ருள் அமைதியாக.

"யாரோ இன்னர் என்று தெரியாத மகானுபாவன் ஒருவர் என்னைக் காப்பாற்றியிருக்கிருர்! நான் ஆபீஸுக்குப் போனதும் முதலாளி என்னைக் கூப்பிட்டு 'பெரிய சிபாரிசாகப் பிடித்துவிட்டாய்! அதை நான் தட்டமுடியாது! எனவே வேலை நீக்க உத்தரவு வாபஸ் பெறப் படுகிறது! இனியாவது என் அதிருப்திக்கு ஆளாகாமல் ஜாக்கிரதையாக வேலை பார்!'' என்று கூறினர். யார் சிபாரிசு செய்தார்கள் என்பது புரியாமல் எனக்கு இன்பத் திகைப்பாக இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் முதலாளிக்கு நன்றி கூறிவிட்டு வெளியே வந்தேன்... எனக்குத் தெரியாமலே இந்தப் பேருதவியைச் செய்தவர் யார் என்று இன்னும் எனக்கு விளங்கவில்லை; எவ்வளவோ யோசனை செய்து பார்த்துவிட்டேன்!''

"எனக்குத் தெரியும்!'' என்று முறுவலித்தாள் யசோதரா.

"தெரியுமா! யார்?''

"அந்த எதிர் வீட்டுத் தரித்திரப் பிணம் பெருந்தேவி!''

"என்ன உளறுகிருய்?'' என்ருன், வெகுண்ட சைலம்.

"உளறல் இல்லை; உண்மை! பெருந்தேவி நம்மேல் இரக்கம் கொண்டு தன்கணவனிடம் சிபாரிசு செய்தாள். அவர் டாக்டர் ராமேசத்திடம் உங்களைப் பற்றிச் சிபாரிசு செய்தார். அவர்மேல் டாக்டருக்கு ரொம்பப் பிரியம். அவர் சொல்லைத் தட்டமுடியாமல் டாக்டர் உங்கள் முதலாளியிடம் சிபாரிசு செய்தார். அவர் உங்கள் முதலாளி வீட்டு டாக்டர், அவரோடு படித்தவரும் கூட. எனவே அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு உங்கள் முதலாளி உங்களுக்குக் கருணை காட்டியிருக்கிருர். உங்கள் முதலாளியும் ராமேசமும் ஆப்த நண்பர்கள் என்று முன்ஞெரு நாள் பேச்சு வாக்கில் பெருந்தேவி என்னிடம் கூறியிருக்கிருள். உங்கள் உத்தியோகத்தைக் காப்பாற்றித் தரும்படிக் கேட்டுக் கொள்வதற்காகத் தான் அந்தத் 'தரித்திரப் பிணத்திடம்' நேற்று மத்தியான்னம் போயிருந்தேன்...''

வெட்கத்துடனும் வேதனையுடனும் தலைகுனிந்து நின்ருன் அந்த டெபுடி கலெக்டர் மகன்! ★

நண்பர்: என்னப்பா, பையனை பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டாயா?
பயில்வான்: ஆமாங்க, பையனை சேர்ப்பதற்கு அந்த வாத்தியாருடன் ஒரு குஸ்தி போட்டு சேர்த்தேன்.

# திருப்போரியூர்க் கோவில்

பிலோ இருதயநாத்



"கற் கோவில் கண்டவன் தமிழனடா!" என்றார் கவி மகான். பல்லவர்கள் ஆண்ட காலத்தில் கட்டிய கோவில்கள் பலப் பல. இந்தியாவில் மட்டுமின்றி, கடல் கடந்தும் கற்கோவில்கள் கட்டினான் தமிழன் என்பதற்குப் பல சான்றுகள் இன்னும் உள்ளன.

தமிழ் நாட்டில் பலவுளவாயினும், தொண்டை நன்னாட்டில் விளங்குவது முப்பத்து மூன்றே. அவைகளுள் சிறப்புற்றது திருப்போரூர். ஆனால் இது பண்டைக் கல் வெட்டுச் சாசனங்களில், 'திருப்போரியூர்' என்று வழங்கப் படுகின்றது.

இவ்வூர் செங்கல்பட்டு இரயில்வே நிலயத்திற்கு வடகிழக்கில் பதினாறு மைலிலுள்ளது. சென்னையிலிருந்து அடையாறு பக்கமாக 36 மைல். பார்ப்பான் சாவடியிலிருந்து படகிலும் செல்லலாம்.

## சரித்திரச் சான்றுகள்.

பண்டைக் காலத்தில் விஷ்ணு மூர்த்திக்கும், இலக்குமிக்கும ஒரு முனிவரால் நேர்ந்த சாபத்தைச் சிவபெருமான் விடுதலையுண்டாக்கிய இடமென்றும், ஈண்டு முருகன் வள்ளியுடன் திருக்கோவில் கொண்டு, தேவர்களுக்கும் ஏனையோருக்கும் அருள் கொடுத்தாரென்றும், திருப்போரூர் சரித்திரம் கூறுகிறது.

கந்தப் பெருமான் கோவிலுக்குப் பின்புறம், "பிரணவமலை" உள்ளது. வேதத்திற்கு முன்னே 'பிரணவம்' பூசித்து, இம்மலையாக நின்றது எனபர். இக்காரணங்களைக் கொண்டு இத்திருப்போரூர் மிகமிகப் பழைமையான தோரிடம் என்று கூறலாம்,

இச் செய்திகள் பழைமையானதாக இருப்பினும் இத்திருக்கோவில் பண்டைப் பல்லவர் காலத்து விளங்கியதென்பதற்கு அங்கு ஒரு கல்வெட்டு இருக்கிறது. அது பன்னிரண்டு பதின்மூன்றாவது நூற்றாண்டில் திருப்போரூர் ஜயங்கொண்ட சோழ மண்டலமாகிய தொண்டை நாட்டில. "ஆமூர்க் கோட்டத்துள்" ஒரு நகரமாக இருந்தது அக்காலத்தில் கட்டிய சோழனுடைய கோவில் மறைந்தும், சோழனால் கோவிலுக்குக் கொடுத்துள்ள மான்யங்கள் பலவிருந்தும், அவைகள் அழிந்தும் போயின.





பின்னர் பதினேழாம் நூற்றாண்டில் திருப்போரூரை சிதம்பர சுவாமிகள் பனங்காட்டிலிருந்து, ஒரு பெண் பனைமரத்தடியிலிருந்த சுயம்புமூர்த்தியை எடுத்து திருக் கோவில் கட்டினார். அந்தச் சிதம்பரசுவாமிகள் பரம்பரையில் பின்வந்த மடத்து அதிபதிகள் தான் இன்றும் கோவில் காரியங்களைக் கவனிக்கின்றனர்.

கோவில் கிழக்கு நோக்கிப் பெண் பனைமரத்தின் புற்றின் மேல் அமைந்திருக்கிறது. இக் கருப்பக்கிரகத்துக்குக் கீழ்பாகத்தில் கிரந்த கல்வெட்டு எழுத்துக்களால், பண்டைக் காலத்தில், திருப்போரூரைச் சுற்றிலும் என்னென்ன ஊர்கள், எத்தனை மைல் தூரத்தில் இருந்தன வென்று கூறப்படுகிறது. கருப்பக்கிரகத்தின் வெளிப்புறத்தில் ஐந்து மாடங்கள் உண்டு. அதில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிற்பங்கள் உண்டு.

இத்தேவாலயத்தின் ஒவ்வொரு கற்றூணிலும் ஒருகையில் கேடயமும் ஒருகையில் வாளுமுடைய வீரர்களின் உருவங்களைக் காணலாம். அவைகள், "சூரபதுமன் போரில் அசுரர்களை வென்றான்" என்பதை நினைவுப் படுத்துகின்றன. இங்கு காலை, உச்சி, மாலை, இரவு என்னும் நான்கு காலங்களிலும் தீபாராதனைகள் நடைபெறுகின்றன. இக்கோவில் 1834-ம் ஆண்டுவரையில் சிதம்பர சுவாமிகளும், அவரின் அதிபதிகளும், கடைசியில் இன்று இந்து மத தர்ம நிலையத்தாரும் நிர்வாகம் செய்கின்றனர்.

இக்கோவிலை இன்னும் பல கோடி மக்கள் காணாதவர்களாய் இருக்கின்றனர். இக்கோவிலுக்குள் போகும்போது, ஒரு புது விதமாகக் கட்டியிருப்பது நமக்குத் தோன்றி நிலைத்து சிறிது நேரம் நிற்கநேரும். ★


# நாட்டியாலயா

[பரத நாட்டிய ஸ்கூல்]

பெண்களுக்கு மட்டும்

போஷகர் : **குமாரி வைஜயந்திமாலா**

சிறந்த ஆசிரியரைக் கொண்டு சாஸ்த்ரீய முறையில் நாட்டிய வகுப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாணவிக்கும் பிரத்தியேக கவனம் செலுத்தப்படுகிறது.

★

விவரங்கட்கு :

**நாட்டியாலயா,**

C/o 'மாலா' ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

# ஏமாந்தது யார்?

**“ நந்தினி ”**

அன்று காரியாலயத்திற்குச் சென்ற பிறகுதான் பசுபதிக்கு கம்பெனி டைரக்டர்களில் ஒருவரான சதாசிவத்தின் மறைவிற்காக, ஆபீஸ் விடுமுறை எனத் தெரிய வந்தது. அந்தச் செய்தியை அறியாமல், அவனைப்போலவே மற்றும் நான்கைந்து நபர்களும், ஆபீஸுக்கு வந்திருந்தனர். ‘நோட்டீஸ்’ போர்டில் ஒட்டியிருந்த அறிவிப்பைப் படித்துவிட்டு ஒவ்வொருவரும், அவரவர்க்குத் தெரிந்த வகையில் காலஞ்சென்ற டைரக்டரின் குணாதிசயங்களைப்பற்றி உற்சாகத்துடன் விவாதிக்கத் துவங்கினர். எதிர்பாராத வகையில் லீவு கிட்டியதுபற்றி அவர்களுக்கு மகிழ்ச்சி. பசுபதிக்கு அவர்கள் பேச்சிலோ விவாதத்திலோ கலந்துகொள்ள விருப்பமில்லை. இருப்பினும் பஸ் ஸ்டாண்டில் பல நிமிடங்கள் தவம் கிடந்து, முண்டியடித்து பஸ்ஸில் ஏறி, தொத்திக்கொண்டே பிரயாணம் செய்து ஆபீஸுக்கு வந்துவிட்டு, உடனேயே வீடு திரும்பவும் மனம் வரவில்லை. கடியாரத்தைப் பார்த்தான். மணி பத்தரைதான் ஆகியிருந்ததால் சினிமா காட்சிகளைப் பற்றியும் யோசனை செய்ய முடியாது, சிந்தனை செய்தவாறே கட்டிடத்தைச் சுற்றி வந்தான் பசுபதி.

பத்தடி எடுத்து வைப்பதற்குள் ஆபீஸ் பியூன் மாணிக்கம் எதிரில் வந்து நின்றான். பசுபதி எப்போதுமே ஒரு குஷிப் பேர்வழி. பிறரைக் கிண்டல் செய்வதற்கும், அப்பாவிகளை அழ வைப்பதற்கும் அவனுக்கு அளவு கடந்த ஆனந்தம். இம்மாதிரி செய்கைகளில் மாணிக்கம் அவனுக்குப் பல தடவை குற்றேவல் புரிந்திருக்கிறான். அதற்குரிய சன்மானத்தைப் பெற்றுக்கொண்டு. எனவே, மாணிக்கத்தைக் கண்டதும் பசுபதிக்குச் ‘சட்’டென்று ஒரு யோசனை தோன்றியது. அவனையுமறியாமல் ஓங்கி ஒரு சிட்கை அடித்தான் பசுபதி.

மாணிக்கத்திற்குப் புரிந்துவிட்டது, ஐயாவிற்கு ஒரு ‘ஐடியா’ தோன்றியிருக்கிறது என்று. ‘என்ன சார்! இன்னிக்கு உங்கள் வம்புக்கு யார் சார் அகப்படப் போறாங்க?’ என்றான் எடுத்த எடுப்பிலேயே.

‘அது யாரென்று அப்புறம் சொல்கிறேன். நீ முதலில் நம்ப ஆபீஸ் டைப்ரைடர் எங்கேயிருக்கென்று பார், பார்த்தசாரதிக்கு இன்னிக்கு விடுமுறை என்று முன்பே தெரியும் போலிருக்கிறது. ஆளைக் கண்ணிலே காணோம். அவனில்லாவிட்டாலும், டைப்ரைடரை எடுத்து அடிக்க முடியுமோ இல்லையா, பார்’ என்றான் பசுபதி.

மாணிக்கம் பதிலொன்றும் பேசாமல் ஆபீஸுக்குள் நுழைந்தான். பசுபதியும் அவன் பின்னால் நுழைந்தான். அதற்குள் வாசலில் நின்று அரட்டையடித்துக் கொண்டிருந்த நபர்கள் சென்று விட்டிருந்தனர்.

மாணிக்கம் கோடி அறையிலிருந்து குரல் கொடுத்தான். ‘சார்! இதோ டைப்ரைடர் இருக்குது சார் நம்ப பார்த்தசாரதி ஐயா, நேற்றைக்கு மிஷினை பூட்டி வைக்காமலே போயிட்டிருக்காரு போலிருக்கு’ என்றான் உற்சாகமாக.

பசுபதி பாய்ந்தோடினான் டைப்ரைடருக்கு. ஐந்தே நிமிடத்தில் ஒரு அரைப் பக்கம் காகிதத்தில் ஒரு கடிதத்தை டைப் அடித்தான். கடிதத்தின் அடியில் சகுந்தலா என்று அழகாக கையொப்பமிட்டுவிட்டு, ஒரு உறையை எடுத்து அதில் தன்னுடைய விலாசத்தை டைப் அடித்துவிட்டு உறையில்

**கணவன் மனைவியை அழவைக்க முற்படலாம்!**

**ஆனால், மனைவி அம் முறையைக் கையாண்டால்...!**

கடிதத்தை இட்டு, ஒட்டினுன். அவன் முகத்தில் ஒரு தனி குறும்பும் உற்சாகமும் பொங்கியது. டைப் மிஷினே பழையபடியே அதன் இடத்தில் எடுத்து வைத்து மூடிவிட்டு, மாணிக்கத்தைக் கூப்பிட்டான்.

'இதோ பார், மாணிக்கம். இந்தக் கடிதத்தை நேராக எடுத்துக் கொண்டு வீட்டில் அம்மாவிடம் கொடுத்துவிடு. யார் கொடுத்தது என்று கேட்டால், ஆபீஸ் டைப்பிஸ்ட் பொண் என்னிடம் கொடுக்கச் சொன்னதாகச் சொல்லு, என்ன கவனிச்சுக்கிட்டயா. தப்பித் தவறி ஊளறினயோ குட்டு வெளிப்பட்டு விடும்.'

'என்ன சார், இத்தனே நாள் என்னேடு பழகிட்டு என்னைப்பத்தி நீங்க இன்னும் சரியா புரிஞ்சுக்கலீங்களே. உங்க 'ஐடியா' எனக்குப் புரியலேயா என்ன? அந்த டைப்பிஸ்ட் பொண்ணுக்கும் உங்களுக்கும் கடிதப் போக்குவரத்து இருக்கறதாக நினேச்சு உங்க சம்சாரத்தை அழவைக்கப் பார்க்கறீங்க, பாவம், அந்த அம்மா ரொம்ப நல்லவங்க. அனுவசியமா அதன் மனசை ஏன் புண்படுத்திறீங்க.

''டேய் மாணிக்கம், இங்கே பாரு உனக்கு இஷ்டமில்லேனு பேசாம எங்கிட்ட கடிதத்தைக் கொடுத்துட்டு வீடுபோய்ச் சேர். அனுவசியமாகப் பேசிகிட்டு நிக்காதே, தெரிகிறதா?' என்முன் பசுபதி. என்றுமில்லாமல், தன் திட்டத்திற்கு எங்கே மாணிக்கம் வெடி வைத்து விடுவானே என்று அவனுக்குத் திகில். ஆனுல் மாணிக்கம் அவனே மேலும் சங்கடத்தில் ஆழ்த்தாமல். 'இஷ்டமில்லாமே என்ன சார், இதெல்லாம் சும்மா தமாஷ்தானுங்களே' என்று சொல்லிக்கொண்டே நகர்ந்து விட்டான்.

மாணிக்கம் போனபிறகும் சிறிது நேரம் ஆபீஸ் வாசலிலேயே நின்று சிந்தனே செய்துகொண்டிருந்தான் பசுபதி. அவன் மனத்திரையில் மாணிக்கம் கொடுத்த கடிதத்தை அவன் மனேவி கல்யாணி படிக்கும் காட்சி திரைப்படமாக ஓடியது.

"கல்யாணி கலவரத்துடனும், ஆத்திரத்துடனும் கடிதத்தைப் படிக்கிருள் ஒவ்வொரு வரியையும் படிக்க படிக்க அவள் வதனம் சிவக்கிறது. கண்ணீர்த் துளிகள் கரை கட்டுகின்றன. அன்று காலே பார்க்கில் தன்னேத் தனியே சந்திக்கும்படி காதலி சகுந்தலா, பசுபதியை கடிதத்திலே வேண்டிக் கொள்ளும் கட்டம் வரும் போது, கல்யாணி குலுங்கக் குலுங்க அழுகிருள். 'சகுந்தலாவின் வயிற்றிலே பசுபதியின் சின்னமா! ஐயோ! என் ஆவியும் உடலும் பதறுகின்றனவே!' என்று கதறுகிருள். வெகு நேரம் கழித்து பசுபதி வீடு திரும்புகிருன். வீடு ஒரே அந்தகாரமயமா யிருக்கிறது. விளக்கை ஏற்றியதும், புயலும் சூருவளியும் பசுபதியைத் தாக்குகின்றன. மனேவியின் சொல்லம்பு வடிவிலே?'

பசுபதிக்கு மேலும் சிந்தனே செய்ய துணிவில்லே. அவ்வளவு நடந்தால் போதும். பிறகு அவளே சமாதானம் செய்துகொள்ளலாம். உண்மையை அறிந்து கொண்டால் அவளும் நம்முடைய் ஹாஸ்ய உணர்ச்சியை ரசிப்பாள் என்று எண்ணியவாறே கட்டிடத்தைவிட்டு வெளியேறினுன் பசுபதி.

★

நண்பன் ஒருவன் வீட்டிற்குச் சென்று சீட்டுக் கச்சேரி போட்டு விட்டு, பகல் காட்சி ஒன்றையும் பார்த்து விட்டு. பசுபதி வீடு திரும்பும்போது மணி ஆறரை ஆகியிருந்தது. எதிர்பார்த்ததற்கு மாருக கல்யாணி வழக்கம்போல் சிரித்த முகத்துடன் அவனே வரவேற்றது பசுபதிக்குப் பெருத்த ஏமாற்றத்தையளித்தது.

'ஒருவேளே வீட்டுக் காரியமும் மரத்தில் வந்த கடிதத்தைப்பிரித்துப் பார்க்காமலே இருந்துவிட்டாளோ? சே! அதெப்படி இருந்திருக்க முடியும்! அதுவும் மாணிக்கம் டைப்பிஸ்ட் பெண் எழுதிய கடிதம்

என்று சொல்லிக் கொடுத்த பிறகும், எத்தனை தான் வேலையிருந்தாலும், அக்கடிதத்தைப் பிரித்துப் படிக்காமல் இருந்திருப்பாளா?' எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணித் தவித்தான் பசுபதி. உண்மையை அறிய கடைசியில் நேரிடையாகவே கல்யாணியைக் கேட்டுவிட்டான்.

'கல்யாணி, இன்றைக்கு எனக்கு ஏதாவது கடிதம் வந்ததா?' கல்யாணியின் முகத்தை ஊடுருவிப் பார்த்தான் பசுபதி. அவள் முக பாவத்திலிருந்து ஒன்றும் அறிய முடியவில்லை.

'ஓ! உங்க ஆபீஸ் பியூன் மாணிக்கம் வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனான், மேஜைமேல் வைத்திருக்கிறேன் பாருங்கள்' என்றாள் கல்யாணி அஸ்வாரஸ்யமாக.

பசுபதிக்குச் 'சப்' பென்றிருந்தது.

'உம், யார் கொடுக்கச் சொன்னார்களாம்? ஏதாவது உன்னிடம் சொன்னானா?' என்று கேட்டுக் கொண்டே உறையைக் கிழிப்பது போல் பாசாங்கு செய்தான் பசுபதி.

'வந்து, யாரோ, டைப்பிஸ்ட் கொடுக்கச் சொன்னதாகச் சொன்னான்.'

'உம்' பசுபதியின் உபசாரத்திலே உயிரே இல்லை. தான் இவ்வளவு மண்டையை உடைத்துக் கொண்டு ஒரு 'ஐடியா' பண்ணி, கடைசியில் கல்யாணி அதனால் சிறிதளவேனும் பாதிக்கப்படாமல் இருந்ததை எண்ணிக் குமுறினான் பசுபதி.

கல்யாணி, சூடான காப்பியை ஆற்றிக்கொண்டே வந்தாள் ஹாலுக்கு. காபி டம்ளரை மேஜையில் வைத்துவிட்டு 'உங்களுக்கு ஒரு செய்தி வைத்திருக்கேன், சாப்பிடுங்கோ. சொல்கிறேன்' என்றாள் புன்சிரிப்புடன்.

'என்ன செய்தி, சொல்லிவிடேன். பிறகு காபியைக் குடித்துக்கொண்டால் போகிறது'

'வந்து, நீங்கள் ஆபீஸுக்குப் போனபிறகு எங்க ராமு அத்தான் வந்திருந்தான். அப்பப்பா! முன்னே எப்படி அப்பாவியாயிருந்தான். இப்போ வடக்கே நாலைந்து வருஷம் சுற்றிவிட்டு, சோல்ஜர் கட்டைமாதிரி 'ஜம்' மென்று வளர்ந்திருக்கான். நல்ல ஆஜானுபாகுவான சரீரம். எனக்கு முதல்லே ஆளை அடையாளமே கண்டு பிடிக்க முடியலை. பிறகு அவனே 'என்ன கல்யாணி, என்னைத் தெரியலையா'ன்னு கேட்டப்புறம்தான் புரிஞ்சுது.'

பசுபதி அவளை நிமிர்ந்து பார்த்தான். 'யாரு, உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஒற்றைக்காலிலே நின்னான்னு சொல்லுவியே, அந்தப் பிரகிருதிதானா வந்திருந்தது?' என்று கூறிவிட்டு ஒரு அவிட்டுச் சிரிப்பை உதிர்த்தான் பசுபதி.

'ஆமாம், அப்படித்தான் பிடிவாதம் பிடிச்சான். என் மேலே எப்பொழுதுமே அவனுக்கு அலாதி



மணியார்டர், குமாஸ்தா: என்னப்பா! 15 ரூபாய் முழுவதும் சில்லரையாக கொண்டு வந்திருக்கிறாயே?

கிராமவாசி: எங்கள் கிராமத்தில் சில்லரை கிடைக்கவில்லை என்று என் மகன் எழுதி இருக்கிறான். அதனால்தான் சில்லரையாக மாற்றிவந்தேன்.

யான அன்பு. ஏன், எம்மாங்கவைத் தவிர ஆத்திலே எல்லாருக்குமே, ராமுவுக்கு என்னைக்கொடுக்கறத்திலே இஷ்டம்தான்'

'என்னது! அப்படீன்னா. என்னை இஷ்டமில்லாமல் தான் கல்யாணம் பண்ணிக்கொண்டாயா?' பசுபதியின் குரலில் கடுமை தொனித்தது.

'நீங்க ஒண்ணு. ஏதோ சொன்னா ஏதோ பேசறேளே. சரி, நாளைக்கு அவனை நம்மாத்திலேயே சாப்பிடச் சொல்லியிருக்கேன், கட்டாயம் வருவான். நீங்கள் ஆபீஸுக்குப் 'பர்மிஷன்' போட்டு வையுங்கள்' என்றாள் குழைந்துகொண்டே.

'ஆமாம், வேறு வேலையில்லை. உங்க அத்தான் வருகிறான் என்பதற்காக நான் ஆபீஸுக்கு லேட்டாகப் போக வேண்டுமாக்கும், அதெல்லாம் முடியாது'

'என்ன, இப்படி நீங்கள் சொல்கிறது நன்றாகவே இல்லையே. ரொம்பநாள் கழித்து ராமு நம்ப வீட்டில் சாப்பிட வரும்போது, நீங்கள் அவனுடன் சாப்பிடாமல் வெளியே கிளம்பிப் போகிறேன் என்றால் அதெப்படி?'

'சரி, சரி, நாளைக்குக் காலையில் சொல்கிறேன். நீ போய் சமையலைக் கவனி' என்று சொல்லிக்கொண்டே எழுந்திருந்தான் பசுபதி. அவனுக்குத் தன் திட்டம் பாழாய்ப் போனது பற்றியே சிந்தனை. ராமு அத்தான் வருவதைப் பற்றி அவளுக்கு ஒருவிதமான உணர்ச்சியும் அதனால் ஏற்படவில்லை.

★

மறுநாள் காலையில் குளித்துவிட்டு, ஹால் கடிகாரத்தைப் பார்த்தவண்ணமாகவே இருந்தார், பசுபதி. கடிகாரம் ஒன்பது அடித்து ஓய்ந்தது. இன்னும் ராமு வந்தபாடில்லை. அடுக்களையிலிருந்து அமோகமான வாசனை கிளம்பி வந்து அவனைத் தாக்கியது. 'ஏது அத்தானுக்காகப் பலத்த விருந்து

போலிருக்கிறதே' என்று பேச்சைத் துவக்கினான் பசுபதி.

'அதெல்லாம் ஒன்றுமில்லை. 'சிம்பிளா'கத்தான் செய்கிறேன்' என்று பதிலிறுத்தாள் கல்யாணி உற்சாகத்துடன்.

அவள் உற்சாகத்தைக் காண பசுபதிக்கு அவனையுமறியாமலே ஒருவித புகைச்சல் உண்டாயிற்று. 'நீதான் அத்தான் வரப்போகிறானென்று ஓடி ஓடி உழைக்கிறாய். உன் அருமை அத்தான் இன்னும் வரக்காணோமே' என்று கிண்டல் செய்தான் பசுபதி.

'வராமல் இருந்துவிடமாட்டான். என்னிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டு, ஒருநாளும் அதை மறந்து விடமாட்டான் அவன். உங்களுக்கு எப்பொழுதுமே அயலாரைத் தூற்றுவதுதான் குணம்'

பசுபதிக்குச் சுருக்கென்றது. தன்னையே தூக்கி எறிந்து பேசி விட்டாள் என்ற எண்ணம் அவனை ஆட்கொண்டது.

'ஓகோ, அப்படியே இருக்கட்டும். எனக்கு ஒன்றும் உன் அத்தானைப் பார்த்துப் பேசவேண்டும் என்றில்லை. நான் ஆபீஸுக்குப் போகிறேன். நீயும், உன் அருமை அத்தானும் ஆனந்தமாக விருந்துண்ணுங்கள்' என்று சொல்லி விட்டு வெளியேறினான் பசுபதி.

★

அன்று காரணமின்றி, ஆபிஸில் எல்லோரிடமும் 'சள்' ளென்று விழுந்தான் பசுபதி. என்றைக்கும் குஷியான பேர்வழியாக பசுபதியை கண்டிருந்த சகபாடிகளுக்கு அவனுடைய நடத்தை ஒரு பெரும்புதிராக விருந்தது. பசுபதி மனதிற்குள்ளாகவே பொருமிக்கொண்டிருந்தான். 'அத்தானும், அத்தான். அப்படி என்ன உறவு வேண்டிக்கிடக்கிறது. அவனைப் பார்க்கும் பூரிப்பில் தம்மையே அசட்டை செய்து விட்டாளே கல்யாணி. ஆமாம், பார்க்கப் போனால், ராமுதான் அவளை முறைப்படி கல்யாணம் செய்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஏதோ அல்ப விஷயத்திற்காக ஏற்பட்ட குடும்பத் தகராறினால், அவர்களுடைய கல்யாணம் தடைப்பட்டு போய்விட்டது. பிறகு நாம் வந்து, கல்யாணியைக் கரம் பிடித்தோம். ஒருவேளை, கல்யாணிக்கும், ராமு அத்தானிடம் இன்னும் 'அன்பு' இருக்குமோ? அதுதான் அவள் நேற்றும் இன்றும் அவ்வளவு உற்சாகத்துடன் இருந்தாளோ? அப்படியென்றால், நாமும் ஆபீஸுக்கு வந்துவிட்டோமென்றால், இரண்டு பேரும் ஒரே கும்மாளமடித்துக் கொண்டிருப்பார்களோ?'

பசுபதிக்குப் பைத்தியம்பிடித்து விடும்போல் ஆகி விட்டது. அதற்கு மேல் அவனுக்கு ஆபீஸில் வேலை செய்ய முடியவில்லை. மிகவும் தலை வலியாயிருக்கிறது என்று சொல்லிவிட்டு, அரை நாள் லீவு எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான் பசுபதி.

அவர்களை நேருக்கு நேர் சந்தித்து விடுவது என்ற ஆத்திரத்துடன் அவசர அவசரமாக வீட்டுக்குத் திரும்பினான் பசுபதி.

அங்கேயும் பெருத்த ஏமாற்றம். வாசற் கதவு சார்த்தப்பட்டு, பூட்டியிருந்தது. 'இந்த வெய்யிலில் கல்யாணி எங்கே போயிருப்பாள்?' என்று சிந்தனை செய்ய முற்பட்ட போது, பக்கத்து வீட்டுப் பையன் ஓடிவந்து, அவன் கையில் ஒரு கொத்துச் சாவியை திணித்துவிட்டு உங்காத்து மாமி, நீங்க வந்தால் உங்களிடம், இதைக் கொடுக்கச் சொன்னா என்று கத்திக்கொண்டே ஓடிவிட்டான் பசுபதி ஒரு பெருமூச்சுடன் கதவைத்திறந்துகொண்டு உள்ளே சென்றான். வீடு வெறிச் சென்றிருந்தது. உடல் சோர்வும் உள்ள அமைதியின்மையும் சேர்ந்து அவனைத் தூக்கத்தில் ஆழ்த்தி விட்டன.

பசுபதி தூங்கி எழுந்தபோது மணி ஆறடித்து விட்டிருந்தது அப்பொழுதும் கல்யாணி வந்திருக்க வில்லை. ஹால் விளக்கைப்போட்டு விட்டு ஊஞ்சலில் உட்கார்ந்தான் பசுபதி. ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் கல்யாணி வாசற் கதவைத் தட்டிக் கொண்டு நின்றாள்

கல்யாணி, சர்வாலங்கார பூஷிதையாக, முதலிரவு மணப் பெண் போல காட்சியளித்துக் கொண்டிருந்தாள் வாசலில்

'சட்'டென்று கதவைத் திறந்து விட்டான் பசுபதி. கல்யாணி 'தட தட'வென்று உள்ளே சென்று விட்டாள்.

'உம், தேவியார் எங்கு சென்று வருகிறீர்களோ?' என்றான் குதர்க்கமாக, அவளைப் பின்தொடர்ந்து கொண்டே.

'எங்கேயுமில்லை. சும்மா கொஞ்சதூரம் வெளியே போய்ட்டு வந்தேன்.'

'ஓகோ! கொஞ்ச தூரம் வெளியே போய்விட்டு வருவதற்குத்தான், இத்தனை அலங்காரம், இவ்வளவு நேரமா? உண்மையைச் சொல்லு, எங்கே போய் விட்டு வருகிறாய்?' என்று சீறினான் அவன்.

'என்ன, இன்னிக்கு ஒரே துர்வாசர்' மாதிரி கோபித்துக் கொள்கிறீர்கள்? உடம்புக்கு ஏதாவது கோளாறு? 'பிளாஸ்கில்' காபி வைத்திருந்தேன்! குடிக்கிறீர்களா?' கேள்விமேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டே போனாள் கல்யாணி.

'கல்யாணி! நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் சரியாக பதில் சொல்லவில்லை; உம். எங்கே போய்விட்டு வருகிறாய்? 'சட்டென்று சொல்லு. எனக்கு அப்புறம் ரொம்பக் கோபம் வரும்'

'வேறு எங்குமில்லை. நீங்கள் அந்தண்டை போனபிறகு ராமு அத்தான் வந்திருந்தான். இருவரும் சாப்பிட்டோம். நீங்கள் இல்லையே என்று அவனுக்கு மிகவும் வருத்தம். கடைசியில் அவன், என்னை வலுக்கட்டாயமாக மவுண்ட் ரோடுக்கு ஒரு பகல் காட்சிக்கு அழைத்துப் போனான். அங்கிருந்துதான் நான் திரும்பி வருகிறேன்' தட்டுத் தடுமாறிக் கொண்டே பேசினாள் கல்யாணி.

'ஓகோ! கள்ளக் காதலனுடன் பகல் காட்சியா! பேஷ்! இதற்குத்தானா இவ்வளவு நாள் பத்தினி வேஷம் போட்டாய். ஏன் உன் அருமை அத்தானுடனே இரவும் போய்த் தங்குகிறதுதானே! ஏன் திரும்பி வந்தாய்? என்னை என்ன, மானம் கெட்ட மனிதன் என்று நினைத்துக்கொண்டாயா? கழுதை!' என்று கத்தியபடியே கல்யாணியின் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டான் பசுபதி.

கல்யாணி நிலை குலைந்து உட்கார்ந்து விட்டாள். அவள் கண்களில் நீர் மல்கியது.

'ஏன் நான் செய்ததில் தவறென்ன இருக்கிறது? ராமு அத்தான் என்னுடன் சிறு குழந்தையிலிருந்தே விளையாடிப் பழகியவன். அவனுடன் சினிமா பார்த்தது ஒரு பிசகா?' என்று கேவினாள் அவள்.

'ஆம். அப்படிச் செய்வது உன் கற்புக்கே களங்கம். என்னை மண

# கேச பராமரிப்பு-
# ஒரு கலை

அடர்ந்து வளர்ந்த கேசம் தோற்றத்திற்கு என்றுமே தனி அழகை அளிக்கிறது. கேச அழகு தானாக ஏற்படுவதில்லை. மிகுந்த கவனத்துடன் சிறந்த சாதனமான **கேசவர்த்தினியை** விடாது உபயோகிப்பதால் அது மிளிர்ந்து வளருகிறது.

**கேசவர்த்தினியை** நீடித்து உபயோகியுங்கள். உங்களுடைய கூந்தல் அடர்ந்த கருமையோடு வளருவதுடன், தனி சோபையும், மென்மையும் பெறும்.

KSV.6 TAM

நிறைந்த கூந்தல் வளர்ச்சிக்கு
நிகரற்றது கேசவர்த்தினி

# கேசவர்த்தினி

ஹேர் ஆயில், ஷாம்பூ, கண் மை

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ், கிராஸ்கட் ரோடு. கோயமுத்தூர்

ளுகைப் பெற்ற பிறகு, அவனைப் பற்றி ஸ்மரிப்பதே தவறு. அது தமிழினப் பெண்டிர்க் குலத்திற்கே இழிவு என் முன் நில்லாதே! போய்விடு!' என்று இறைந்தான் பசுபதி.

கல்யாணி எழுந்து நின்றுள், கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, ' உங்களுக்குப் பாரதியார் பாட்டுக்களைத் தெரியுமா? அதில் ' கற்பு நிலை என்று சொல்லவந்தார், இரு கக்ஷிக்கும் அஃது பொதுவில் வைப்போம்' என்று ஒரு அடி வருகிறதே அதற்கென்ன சொல்கிறீர்கள்? நீங்கள் உங்கள் ஆபீஸ் 'டைப்பிஸ்ட்' சகுந்தலாவுடன் கொஞ்சுவது, காதல் கீதம் படிப்பதையெல்லாம் நான் சகித்துக் கொள்ளவேண்டும். ஆனுல் எனக்கு என் உறவினன் ஒருவனிடம் பேசக்கூட உரிமை கிடையாது! அப்படித்தானே உங்களுடைய அபிப்ராயம்?' கல்யாணியின் சொற்களிலே கனல் தெறித்தது.

பசுபதி பேச வகையின்றி வாளாவிருந்தான். தான் விளையாட்டுத்தனமாக கல்யாணியைக் கிண்டல் செய்யப் போக அது இவ்வளவு தூரம் பெரும் பிரச்னைகளை நிலைக்களத்திற்கு இழுத்து வரும் என்று அவன் எதிர்பார்க்க வில்லை. உண்மையை ஒளிப்பதில் இனியும் பயனில்லை என்று உணர்ந்த பசுபதி, அழாக் குறையாக;

' கல்யாணி, நீ உண்மை தெரியாமல் ஏதேதோ பேசுகிருய்? மாணிக்கம் எனக்காக வென்று கொண்டு வந்த கடிதத்தைப் படித்துவிட்டுத் தானே நீ இவ்வளவு தூரம் பேசுகிருய்! அது பொய்க் கடிதம், கல்யாணி, பொய்க் கடிதம். உன்னை நையாண்டி செய்வதற்காக நான் வரைந்த போலிக் கடிதம். ஆனுல் அதை வைத்து எனக்கு இப்படியொரு பாடம் கற்பித்து விடுவாய் என்று நான் சற்றும் எதிர்பார்க்க வில்லை' என்றுன்.

' ரொம்ப அழகுதான் போங்கள். உங்கள் போலிக் கடிதத்தைக்கண்டு ஏமாந்துபோக நான் என்ன பைத்தியக்காரியா என்ன? மாணிக்கம் அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுக்கும்போது, அந்த டைப்பிஸ்ட்பெண் சகுந்தலா நம் வீட்டில் தான் உள்ளே யிருந்தாள். அவளும் நானும் பள்ளித் தோழிகள். உங்கள் ஆபீஸில் அவள் வேலை பார்க்கிறுள் என்று எனக்கு முன்பே தெரியும். அவள் மூலமாக, நீங்கள் ஆபீஸில் யார் யாரிடம் எப்படி எப்படி நடந்துகொள்கிறீர்கள் என்றெல்லாம் நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். நான் எப்படி உங்கள் கடிதத்தைக் கண்டு ஏமாறுவேன்!'

நீங்கள்தான் ஏமாந்து போனீர்கள். ராமு அத்தானும் வரவில்லை; ஒரு பொத்தானும் வரவில்லை! அவனுக்கு நேற்றைக்குப் 'பங்களூரில்' கல்யாணம் நடந்து விட்டிருக்கும். உங்கள் மேஜைமேல் கல்யாணக் கடிதம் இருக்கிறது; பாருங்கள். நான்தான் வேண்டுமென்று உங்களைச் சந்தேகப்பிராணியாகச் செய்ய இந்தத் திட்டம் வகுத்தேன். ராமு அத்தான் வந்ததாகவும், அவனுடன் பகல் காட்சிக்குப் போய் வந்ததாகவும் கதை அளந்தேன். உண்மையில் நேற்றைக்குப் பக்கத்துவீட்டு மாமியுடன், அடுத்ததெருவில் தங்கியிருக்கும் 'சுவாமிகளை'த் தரிசிக்கத்தான் போயிருந்தேன். ஆனுலும் நீங்கள் இப்படித் துள்ளுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. அப்பப்பா! என்று சொல்லிவிட்டு சிரித்தாள் கல்யாணி.

' உண்மையாகவா, கல்யாணி! நான் அறியாத்தனமாக உத்தமி உன்மேல் ஆத்திரப் பட்டேனே! ஐயோ பாவம்! உன் பொன்னுன கன்னத்தைப் புண்ணுகச் செய்து விட்டேனே! பாவி!' என்று சொல்லியவாறே அவள் கன்னத் தருகில் கையை நீட்டினுன் பசுபதி.

' ஊம். பார்க்கில் சகுந்தலா காத்திருக்கிறுள். அவளை கொஞ்சுங்கள்' என்றுள் குறும்புக்காரி கல்யாணி.

பசுபதியின்முகத்தில் அசடு வழிந்தது. மேஜையின்மேல் கிடந்த ' ராமு 'வின் திருமணப் பத்திரிகை அவனைப்பார்த்து நகைப்பதுபோல காற்றில் படபடத்து நின்றது. ★

# ‘ப்ருட்-ஸாலேட்’

அக்தர்

“ நீலா! நீ ஊருக்கு போறத பத்தி ஆக்ஷேபணையில்லை! ஆனா ஒண்ணு. நம்ப ‘சுலோ’க்குக் கல்யாணம் நிச்சயமாயிடும் போலயிருக்கு. கடிதாசிபோட்டா கல்யாணத்துக்கு உடனே வந்தூடணும்? என்ன தெரிஞ்சுதா?” என்ற கேள்வியுடன் நீலாவைப் பார்த்தான் சங்கரன்.

“ ஆமாம்? உங்க ‘சுலோ’க்குக் கல்யாணம் ஆனாப்லதான்; நானும் வந்தாப்லதான்! கல்யாணம் கல்யாணம்னு நாலு வருஷமாத்தான் கோடிக்கிறேள்? என்ன வேண்டிக் கிடக்கு?” அவள் அவனைப் பார்த்தும் பார்க்காததுபோல் மிடுக்காக தோள்பட்டையில் தனது முகவாய்க் கட்டையை ஒரு இடி இடித்துக் கொண்டாள்.

“என்ன அப்படிச் சொல்லியூட்டே? எப்படியும் அடுத்த மாதம் கல்யாணம் நிச்சயமாயிடும். ஆத்துக்கு மூத்த நாட்டுப் பொண்ணு நீ? நீ வராட்டா நன்னாயிருக்குமா? அதுக்காகத் தான் சொன்னேன்...என்ன?...” என்று ஆதங்கத்தோடு கேட்ட அவனுக்கு “வேண்டிக் கிடந்தது” என்ற வெறுப்பான பதில் தான் கிடைத்தது அவளிடமிருந்து. அதை அடுத்து உள்ளேயிருந்து வந்த குரல் கூடத்தில் இருந்த அவனைக் கிடுகிடுக்கச் செய்தது.

“ நன்னாத் தாண்டாயிருக்கு? என்னமோ அவளைப்போய் கெஞ்சறயே? அவ வராட்டா இந்தக் கல்யாணமே நின்னு போயிடுமாக்கோம். நாலுபேர் நம்ப ‘சுலோ’வை ஏசிக் காட்டும்படியா நீதான் நடந்திண்டே? அவளை நீயே செஞ்சிண்டிருந்தா இந்தப் பேச்சுக்கு வழியேயில்லை...” என்று சரமாறியாக பொழிந்துவிட்டாள் சங்கரனின் தாய் பார்வதி.

“ ம்...சரி, நீ சும்மா இரு அம்மா? நீ வேற ஆரம்பிச்சூட்டியா?” சலித்துக்கொண்டான் சங்கரன்.

“ நான் ஒண்ணும் ஆரம்பிக்கில்லை...? என்னவோ...ம்...கல்யாணம் பண்ற வரேலும் தான் நம்ப பிள்ளை...என்ன பண்றது? எல்லாம் என் தலைவிதி? அவரைப் போல நானும் கண்ணைமூடியிருந்தா...இந்தமாதிரி கண்டதுகள் கிட்டே பேச்சு கேக்க வாண்டாம்?” பார்வதியின் தொனி அடிவயிற்றிலிருந்து குமுறி எழுந்து அதிர்ந்தது.

“ நான் உங்களை ஒண்ணும் சொல்லியூடல்லை? என்னைக் கேட்டார்; பதில் சொன்னேன்!” என்று சற்று அழுத்தமாகவே சொன்னாள் நீலாவும்.

“ நீலா? நீ சும்மாயிருக்க மாட்டே? அம்மாவுக்குப் பதில் சொல்லாட்டா உன் தலை வெடிச்சுப் போயிடுமா என்ன?” சங்கரனது குரலில் ஆத்திரம் பொங்கியது.

“ பின்னே பாருங்களேன்? அம்மாவுக்கு நான் வரத்தலே கொஞ்சங்கூட இஷ்டமில்லை? நீங்க என்னவோ எங்கிட்ட வந்து கரிசனமா கரியறேள்? எல்லாம் உங்களால்தான் வரது?” என்று சங்கரனைப் பார்த்து உறு

மினாள் நீலா. உரலுக்கு ஒரு பக்கம் இடி ! மத்தளத்திற்கு...? அம்மாவிற்காகப் பரிந்துபேசினால் அகமுடையாளுக்குக் கோபம்? அவளுக்காகப் பரிந்து பேசினால் அம்மாவுக்குக் கோபம் ? இருவரும் அவனை நடுவில் நிறுத்தி சீற ஆரம்பித்தார்கள்.

சங்கரனது பரிதாபமான நிலையைக் கவனித்தான் நீலாவின் அண்ணன் ரகுராமன். அவனால் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை. தனது தங்கையின் போக்கு அவனுக்குக் கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. சின்ன ஒரு விஷயத்தை பெரிதாக்கிச் சண்டையை உண்டாக்கிய நீலாவின் பேரில் அவனுக்கு அளவிற்கு மீறிய ஆத்திரம் வந்தது.

"இதோபார் நீலா? நான் உன்னை இப்போது ஊருக்கு அழைச்சிண்டு போகப் போறதில்லை! வேணுமானா சுலோவின் கல்யாணம் முடிஞ்சத்துக்கப்புறம் நீ வந்துக்கோ? நான் உன்னை அழைக்க வந்ததனாலே உங்களுக்குள்ளே சண்டை வேண்டாம்? என்ன யிருந்தாலும் நீ இப்படி பெரியவர்களைத் தூக்கி எரிஞ்சு பேசறது நன்னாயில்லை!" என்று உரிமையுடன் நீலுவைக் கடிந்து கொண்ட ரகுராமன், தனது கைப்பையிலும் பெட்டியிலும் அமுக்கி நிரப்பியிருந்த அவளது சாமான்களையெல்லாம் படபடப்புடன் வெளியே எடுத்து வைத்தான்.

இதைப் பார்த்ததும் திடுக்கிட்டாள் நீலா. அண்ணாவின் கோபமும், செய்கையும் அவளுக்குப் பயத்தை உண்டாக்கியது? 'அண்ணா, தன்னை அழைத்துப் போக வந்திருக்கிறான்' என்ற சலுகை ஆட்டங்கண்டவுடன் அவள் பதிலடங்கிவிட்டது அவளது சீற்றம் சுண்டிவிட்டது? ஆனால், ரகுராமனின் பேச்சும், செய்கையும் பார்வதிக்குத் தூபம் போட்டாற்போலிருந்தது. உள்ளிருந்து கூடத்திற்கு வந்தாளவள்.

"என்னயிருந்தாலும் உனக்கு நியாயம் தெரிஞ்சிருக்கு? சின்னப் பிள்ளையானாலும் உனக்குத் தெரிஞ்சது அவனுக்கு எங்கே தெரியறது? இந்தமாதிரி சமயத்தில் இடம் கொடுக்காம அடிச்சு பேசத் தெரிஞ்சான்னா தேவலை? அவன் கொடுக்கற இடம்னா அவ அப்படி பேசறா...? அப்பப்ப இப்படி ஒரு போடு போட்டான்னா அவ வழிக்கு வருவா!" என்று தனது அருமை சங்கரனைப் பார்த்துக் கடிந்து கொண்டாள் பார்வதி.

அத்திம்பேருக்கு அனுதாபமாகப் பேசப் போனது இப்படி ஆபத்தாக முடிந்ததே என்ற நினைப்பில் அத்திம்பேரையே உற்றுப் பார்த்தான் ரகுராமன்.

"ரகுராமன் சொன்னதுதான் சரி! அவ இப்போ ஒண்ணும் ஊருக்குப் போகவேண்டாம். எல்லாம் சுலோவின் கல்யாணம் கழித்துப் பார்த்துக்கலாம்?" என்று ஒரு முடிவுக்கு வந்தவனாக சலிப்புடன் உதிர்த்த வார்த்தைகள் அதிர, அலமாரியிலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு தனது அறைக்குக் கிளம்பினான் சங்கரன்.

அவனது வார்த்தைகளைக் கேட்டதும் நீலாவின் கண்களில் முட்டி நின்ற நீர் கீழே உதிர்ந்தது.

"இல்லாட்டாபோனா உங்க எண்ணம் எனக்குத் தெரியாதாக்கோம்?" என்று வெடுக்கென்று பேசிய அவள் விசும்பியவாறே வேகமாக சமையல் அறையை அலம்பி சுத்தம் செய்யச் சென்றாள். ரகுராமன் செய்வதென்னவென்று தோன்றாமல் வாசல் பக்கம் சென்றான்.

## 2

அறையின் உள்ளே நுழைந்த சங்கரன் புத்தகத்தை மேஜையின் மீது எரிந்தான். தனது

அருமை அக்காள் மங்களத்தின் சீமந்த புத்திரியான 'சுலோ'வைத் தான் மணந்துகொள்ளாத தான சாயல், அம்மாவின் அடிமனதில் வேரூன்றி விட்டதை நினைக்க நினைக்க அவனுக்கு ஆரவில்லை. பட்டமரம் கூட சில சமயம் உதிரும் மழைத்தூரல்களினுல் துளிர் விடுவதில்லையா? அலைதப் போன்று குடும்பத்தில் ஏற்படும் சில்லரைச் சண்டைகளின் போதும் அம்மாவின் உள்ளத் துளிரின் இதழும் சில சமயம் தோன்றி மறைவதை நினைக்க நினைக்க அவனுக்கு ஆச்சரியமாகத் தானிருந்தது.

சங்கரனின் அழகுக்கும், ஆகிருதிக்கும் அளவாக உருக்கி வார்த்த தங்கச்சிலை போன்ற நீலாவின் உருவம் எங்கே? சுலோவின் கருப்பு நிறமும் களையில்லாத முகமும் எங்கே? சுலோவின் அவலட்சணம் அம்மாவின் கண்களை மறைத்து விட்டது ஏனோ...? ஒருவேளை பேத்தி என்ற பிரமையாக இருக்கலாமோ...? என்ற எண்ணம் சங்கரனின் மனதில் அடிக்கடி புரளுவதும் உண்டு.

நீலாவை ஸீமந்தம் ஆனவுடனேயே ஊருக்கு அனுப்பியிருந்தால் இந்த சில்லரைச் சண்டைகளுக்கு இடமேயிருந்திருக்காதல்லவா? தன்னைப்போல் அம்மா சொல்லுவதற்கெல்லாம் ஆமாம் போட்டு காரியத்தை சாதித்துக் கொள்ளத் தெரியவில்லையே இந்தப் பேதைப்பெண்ணிற்கு...? அவன் அவளுக்கு உபதேசித்த அந்த 'ஆமாம்' மந்திரத்தை முறையாக அனுஷ்டித்து அம்மாளிடம் அதைப் பிரயோகிக்க அவளுக்குப் போதுமான பொறுமை இல்லை. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று நெறுக்குத் தெரித்தாற்போல் நேர்மையின் அடிப்படையிலே பேசும் அவளுக்கு இந்த மூன்று எழுத்து மந்திரத்தின் சக்தி எங்கே தெரியப் போகிறது...?

ஆனுல், தனது தாயாருக்கு அனுசரணையாகவும், ஆசாரமாயும் நீலாவைப் போல் ஒத்தாசையாக காரியங்கள் செய்ய எந்த மருமகளால் தான் முடியும்? இதைப் பற்றி பார்வதி சில சமயங்களில் பிறரிடம் பெருமையாக தம்பட்டம் அடித்துக் கொள்ளுவதைப் பார்க்க சங்கரனின் மனதும் துள்ளி எழத்தான் செய்தது.

மாதம் ஒன்பது ஆகியும் ஓயாது உழைத்து வந்த தனது அருமை மனைவிக்கு 'ஓய்வு' அளிக்கவேண்டித்தான் சங்கரன் ரகுராமனுக்குக் கடிதம் எழுதினுன். அந்தக் கடிதப் படித்தான் ரகுராமன் இன்று நீலாவைப் பிறந்தகம் அழைத்துப்போக வந்திருக்கிருன். இருந்தாலும் இன்னும் ஒரு வாரத்திற்குள் சுலோவின் கல்யாணத்தை நிச்சயித்து நடத்திவிடுவதான உறுதியில் இருக்கும் அவன், நீலாவிடம் அது பற்றி கூறவேண்டிய முறைக்காகத்தான் அவளிடம் அதைப் பிரஸ்தாபித்தான். ஆனுல்...? நீலாவின் மனது வீணே சஞ்சலப்படும்படி 'ஏன்

## தாயும் சேயும்

—படம்: புஷ்பத்துறை சுப்ரமணியம்.

இந்தப் பிரச்னையை இப்போது கிளப்பினேம்?' என்று தன்னையே நொந்து கொண்டான் சங்கரன்.

"டக்?'' என்று மேஜையின் மீது கேட்ட ஒலி அவனது சிந்தனையைக் கலைத்து நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

'' இந்தப் பாலை சாப்பிடுங்கள் ஆறிப் போயிடும்?'' என்று சொன்னவளின் முகத்தைப்பார்த்தான் சங்கரன். அந்த சிவந்த முகத்தில் பிரதிபலித்த கோபம்; துக்கம்; பரிவு; என்ற முப்பெறும் உணர்ச்சிகளும் அள்ளித் தெளித்த புள்ளிக் கோலம்போல் அவனது கருத்தைக் கவ்வின.

''அண்ணவிற்குப் படுக்கை எடுத்துக் கொடுத்தாகிவிட்டதா? ...அம்மா எங்கே?'' மெதுவாகக் கேட்டான் சங்கரன்.

"எல்லாம் ஆயிடுத்து! அண்ணவின் குரட்டைச் சத்தம் கூட இதோ!'' என்று அவனது கவனத்தைத் திருப்பினுள் நீலா.

"கோபமா நீலா...!'' அனுதாபமாகக் கேட்டான் சங்கரன்.

'' இல்லை, சந்தோஷம்!...'' வெடுக்கென்ற அவளது பதில் கணீரென ஒலித்தது.

'' நீலா உன் கோபம் கூட அலாதி அழகுதான்! அருகில் நெருங்கி அவளது கையைப் பிடித்தான் சங்கரன். பிடித்த கையை உதறினுள் அவள். கைகளில் அடுக்கியிருந்த அடுக்கு வளையல்கள். 'கல...கல...! என்று ஒலிக்காவிட்டாலும் 'கையை உதறுகிருள்' என்ற ஒலியின் மூலம் சித்தரிக்கக் கூடியதாக இருந்தது. அந்த சிறு ஒலியின் நாதம் அம்மாவின் பாம்புச் செவிகளில் பாய்ந்து விடப் போகிறதே என்று பயந்த அவன்...'ச்...சு...' கொட்டிக் கீழே விரித்திருந்த மெத்தையில் படுத்தான்.

முகத்தைச் சுளித்துக் கொண்டு அறையின் கதவைத் தாளிட்டாள் நீலா. படுக்கையில் வந்து உட்கார்ந்தாள். அவளுக்குப் படுக்கைகொள்ளவில்லை. மெதுவாக அவனது கால்களைப் பிடிக்க ஆரம்பித்தாள். ஆய்ந்து ஒய்ந்து அலுத்த அவனது பாதங்களில் அவளது மெத்தென்ற கைகள் பட்டவுடன் அவனுக்கு அலுப்பாற இருந்தது. மெதுவாக ஈனஸ்வரத்தில் பேச்சைத் துவக்கினுள் நீலா.

"என்ன....அப்படியானு நாளைக்கு என்னை ஊருக்கு அனுப்பப் போறதில்லையா?...

"உங்க அண்ணு அழைச்சிண்டு போனுல் நீ போயேன்!''

"அவன் தான் முடியாதன்னு பிடிவாதமா சொல்லி யூட்டானே!''

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே?...''

'' எப்படியாவது நீங்கதான் அவங்கிட்ட சொல்லணும்?''

''...ஏன்...? நீயே தான் சொல்லிப் பாறேன்?...''

'' நான் சொன்ன அவன் ஒரு நாளும் கேக்கமாட்டான். இதோ பாருங்கோ! என்னுல் வரவர ஒண்ணுமே செய்ய முடியல்லே, ஒரே சிரமமாயிருக்கு...ம்...?''

"அப்படியா...? பின்ன ஏன் இப்படி வாயலேவார்த்தையைக் கொட்டறே...?''

"சரி, சரி...எல்லாம் என்மேல் தான் தப்பு! அண்ணவை எழுப்பி எப்படியாவது நாளைக்கு அழைச்சிண்டு போக ஏற்பாடு...

'' சரி, சரி...கால் பிடிச்சது போறும். நீ தூங்கு? எல்லாம் விடிஞ்சத்துக்கப்புறம் பாத்துக்கலாம்?

'' முடியாது...? இப்பவே சொல்லுங்கோ! இது விஷயமா ஒரு முடிவு தெரிஞ்சாத்தான் எனக்குத் தூக்கமே வரும்... என்னைச் சித்த பாருங்களேன்! என் நிலைமைஉங்களுக்குப் புரியவில்லையா?...எப்படியாவது நாளைக்கு அழைச்சிண்டு போக ஏற்பாடு பண்ணுங்கோ...!''

அவள் குழைந்தாள்; கெஞ்சினாள். அவளது கண்ணீரின் இரு சொட்டு அவனது காலில் விழுந்து தெரித்தது...

அவளது பரிதாபமான நிலைக்கு இரங்கினான் அவன். அவளது கண்ணீரைத் துடைத்து அவளைச் சமாதானம் செய்துவிட்டு, ஓசைப் படாமல் கதவைத் திறந்து கொண்டு வாசல் பக்கம் வந்து ரகுராமனை எழுப்பினான். குறட்டை ஒலியுடன் அசந்து தூங்கிக்கொண்டிருந்த ரகுராமனின்மேல் சங்கரனின் கைகள் பட்டவுடன் உளறி அடித்துக் கொண்டு எழுந்தான் அவன். தனது கண்களைக் கசக்கி விட்டுக்கொண்ட அவன் சங்கரன் சொன்ன விஷயங்களைக் கேட்டான். எப்படியும் நீலாவைத் தன்னுடன் அழைத்துச் செல்ல மறுத்து விட்டானவன்.

கோபத்துடனிருந்த ரகுராமனுக்குத் தூபதீபம்காட்டி, எப்படியாவது நீலாவை ஊருக்கு அழைத்துப் போக ஒப்புதல் வாங்கிக் கொண்ட சங்கரன் மெதுவாகக் கூடத்திற்கு வந்தான். கீழே எடுத்து வைத்திருந்த நீலாவின் சாமான்களை எல்லாம் மறுபடியும் பெட்டியிலும் பையிலும் பங்கீடாக வைத்தான், சங்கரன். அவன் அவள் காரியங்களை முடித்துவிட்டுபடுக்கைக்குத் திரும்பும்போது "...ம்...?" என்ற தனது தாயாரின் நீண்ட பெருமூச்சும் அவன் காதுகளில் நுழையாமலில்லை.

இதையெல்லாம் அறையின் வாசற்படியிலேயே மறைவாக நின்று பார்த்துக்கொண்டிருந்தாள் நீலா. அவளது மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. 'எவ்வளவு ஜன்மம் எடுத்தாலும் இவரையே புருஷனாக அடையணும்' என்ற சங்கல்பம்தான் அவளது மன நிறைவின் நடுவே சுடரொளியைப்போல் பிரகாசித்



தது. அன்று இரவு முழுவதும் இருவருமே தூங்கவில்லை· பிரிவை எண்ணி ஏங்கப்போகும் நிலையே அவர்களை கண்விழிக்கச் செய்தது.

## 3

சரியாக பகல் 11–50க்குக் கும்பகோணம் வந்து சேரவேண்டிய 'மதுரை பாசஞ்சர்' அன்று ஸ்டேஷனை அடையும்போது மணி 12-20 ஆகிவிட்டது. சரியாக அரை மணி வண்டி லேட்.

பல பெட்டிகளும் நிறைந்திருந்தன. முன்னால் உள்ள ஒரு பெட்டியில் மட்டும் அதிகக் கூட்டமில்லை. அந்தப் பெட்டியின் கோடி பெஞ்சியில் ஒரு பெரிய அம்மாளும் ஒரு பெண்ணும் உட்கார்ந்திருந்தனர். எதிரில் காலியாக இருந்த பெஞ்சியில் சௌகர்யமாக நீலாவை ஏற்றிவிட்டான் சங்கரன். ரகுராமனும் டிக்கெட்டுடன் வண்டியில் ஏறி உட்கார்ந்தான்.

ஸ்டேஷனில் விற்ற குடை ஆரஞ்சியில் பெரிதாக ஆறு வாங்கி அவளது கைப்பையில் இடம்பொருமல் முண்டித் தவிக்கும்படி செய்து விட்டான் சங்கரன். குழைந்து குழைந்து அவளிடம் பேசினுன். அவள் கூந்தலில் சொருகியிருந்த குண்டு மல்லிகை சரம் தனித்து நழுவி தொங்கவே அதை சரி செய்து கொள்ளும்படி சொன்ஞன். அவளது களைபொருந்திய அழகு முகத்தைப் பார்க்க பார்க்க அவனது இதயம் நெகிழ்ந்தது. 'இவளைப்பிரிந்து ஆறுமாத காலம் எப்படித் தள்ளப்போகிருேம்' என்ற ஏக்கம் அவனைக் கவ்விக்கொண்டது.

அவனது நிலையை உணர்ந்த நீலாவும் அவனது கண்களுக்குத் தனது கண்களால் சமாதானம் சொல்ல முற்பட்டாள். இரு ஜோடிக் கண்களும் ஒன்றை ஒன்று பார்க்கும்போது கலங்கினவே தவிர, எதுவும் சமாதானம் சொல்லும் நிலையில் இல்லை.

முதல் மணியும் அடித்தாகிவிட்டது. "இதோ வருகிறேன்?" என்று சொல்லி ஸ்டேஷன்பக்கம் விறைந்தான் சங்கரன். அதற்குள் அவனுக்கு ஒரு யோசனை. அந்த யோசனைக்கு மதிப்புக் கொடுக்காமலும் அவனுல் இருக்க முடியவில்லை.

இரண்டாவது மணியும் அடித்தாகிவிட்டது. சங்கரனைக் காணுேம்? வண்டி நகர்ந்தது. எட்டி எட்டி வெளியே பார்த்தாள் நீலா. சங்கரனைக் காணவில்லை! அவளது உள்ளம் துடித்தது. கதவைத் திறந்துகொண்டு கண்ணுக்கு எட்டியவரை நன்ருகப் பார்த்த ரகுராமனின் கண்களுக்கும் சங்கரனின் உருவம் தட்டுப்படவில்லை. கடைசியில் சொல்லிக்கொள்ளவில்லையே என்பதை நினைத்து நினைத்து கலங்கிப் புலம்பிவிட்டாள் நீலா, ரகுராமனிடம்.

'பேசாமல் இரு! இப்ப என்ன தலைபோயிடுத்து:? ஏதோ அவசரமா போயிருக்கார். வரதுக்கு நாழி ஆயிடுத்து. வண்டி நகர்ந்துடுத்து......ம் ......மனுஷனுக்கு அதுக்குள்ளத்தான் என்ன அவசரம் வந்ததோ?" என்று அவளது புலம்பலை அடக்கினுன் ரகுராமன்.

"உனக்கு என்ன தெரியும் அவர் மனசு?...ம்...கும்!" என்று ரகுராமனை வெறுப்புடன் பார்த்தாள் அவள்.

எதிர்புற பெஞ்சியில் உட்கார்ந்திருந்த அம்மாள் மெதுவாக நீலாவுடன் பேச ஆரம்பித்தாள்.

"அவர்......உங்க அகத்துக்காரரா?"

"...ம்" என்று தலையசைத்தாள் நீலா.

"ரொம்ப நல்லமாதிரி? அகமுடையான்னு இப்படின்னுயிருக்கணும்! என்ன பிரியம்! என்ன அன்பு!" என்று சொன்ன அவள்

தன் பெண்ணைப் பரிதாபமாகப் பார்த்தாள். நீலாவிற்கு அந்த பெரிய அம்மாள் சொன்ன சொல் பொறுக்கவில்லை. "ஆமாம் நீங்க தான் மெச்சிக்கணும்! அம்மாவும் அவரும் சேர்ந்து கொண்டு என்னைப் படுத்தறபாடு அப்பப்பா!"...

"நீலா! நீ சும்மாயிருக்க மாட்டே? அத்திம்பேரைப்பத்தி ஏதாவது சொன்னா எனக்கே கோபம் வந்துடும். ஆமாம்...!"

"உனக்கு என்ன அண்ணா தெரியும் அவர் குணம்? அவர் கிட்டயிருந்து குடுத்தனம் பண்ற எனக்குன்னா அவரைப்பத்தி அதிகம் தெரியும்! அவரும் அம்மாவும் சேர்ந்து வாய்க்கு வாய் என்னைப் படுத்தறபாடு போறும்; போறும். இப்பத்தான் பாரேன்! எல்லாம் செய்யராப்ல செஞ்சு கடைசீ நிமிஷத்திலே கழனிப் பானையிலே கையை விடறமாதிரி வண்டி கிளம்பர நேரத்துக்கு ஆள் இருந்தாரா?"

"ஏம்மா அப்படிச் சொல்றே? ஐந்து நிமிஷத்திற்குள்ளேயே அவர் குணம் நல்லாத்தெரியுதே. விட்டுப்பிரிய மனமில்லாம குழைஞ்சு குழைஞ்சு உன்கிட்டே பேசிக்கிட்டேதானே நின்னுகிட்டிருந்தார். இதோ என் பெண்ணையும் பாருங்கோ! ஒரு அனுசரணையுண்டா? நானும் சீரும் சிறப்புமாத்தான் கொடுத்தேன்! இது அடியும் துகையும் வாங்கினதுதான் மிச்சம். நேத்திக்கு இவகிட்டேயிருந்து வந்த கடுதாசைப் பார்த்து நான்தான் வந்து அழைச்சிண்டு போறேன். ஸ்டேஷனுக்கு வந்து ரயிலேத்தி விடக்கூட நாதியில்லை! எதுக்கும் கொடுத்து வைக்கணுமம்மா!" என்று தனது நிலையை நீலாவிடம் எடுத்துக்கூறி அங்கலாய்த்தாள் அந்த அம்மாள்.

அவளது பேச்சு நீலாவிற்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லை. இருந்தாலும் அவள் சொல்வி

கட்டிடம், ரோடு, வாட்டர் மெயின், தரை சிப்ஸ், சேனடரி முதலியவைகள் நேர்த்தியாகவும், குறித்த காலத்திற்குள்ளும் காண்ட்ராக்டில் செய்து தரப்படும்.

★

விவரங்கட்கு :

**V. கோவிந்தராஜுலு**

பில்டிங் காண்ட்ராக்டர்ஸ்,
3, கோமுட்டி சத்திரம்
குன்னூர் ஹைரோடு
அயினாவரம் - சென்னை-23.

வந்த குறைகளை எல்லாம் ஒரு காதில் வாங்கி மறு காது வழியாக விட்டு வந்தாள் நீலா. அந்த அம்மாளின் தொண தொணப்பு நீலாவின் சகிப்புத் தன்மையை பெரிதும் சோதித்தது.

நல்ல வேளையாக வண்டி தஞ்சாவூரை அடைந்ததும் அந்த அம்மாளும் பெண்ணும் வண்டியைவிட்டு இரங்கினுர்கள் நீலாவிற்குத் தூக்கம் கண்ணைச் சுத்தியது. காலியான எதிர் பெஞ்சியில் வந்து படுத்துக் கொண்டாள்.

''நீலா! அத்திம்பேரைப்பத்தி அந்த அம்மாளிடம் ஒரு போடு போட்டாயே! அவரைப்பத்தி இவ்வளவு கெட்ட எண்ணமா உனக்கு?'' ரகுராமன் கேட்டான்.

"இல்லே அண்ணு! அவரையும் என்னையும் பார்த்து அந்த மாமிக்கு எவ்வளவு பொருமை தெரியுமா? எதுக்கும் நாலுபேர் கண்களில் விழக்கூடா தோல்யோ...!...''

"பலே கெட்டிக்காரிடி நீ! அப்ப...அத்திம்பேர் பேர்லே...... உனக்கு...'', என்று இழுத்தான் சங்கரன்.

''என்னமோ இப்ப உன்னுடை வரேனே தவிர எனக்கு ஞாபகமெல்லாம் அங்கதான் இருக்கு. இப்ப நினைச்சுப் பார்த்தாக்கூட ஏன் உன்னுடை வரணும்! பேசாம நீ சொன்னபடி 'சுலோ' கல்யாணம் முடிஞ்சப்பரம்கூட வந்திருக்கலாம்னு தோண்றது! எதுக்கும் நானில்லாம அவருக்கு ஒண்ணும் சரிப்படாது! அவர் மனதறிந்து அவர் அம்மாவுக்குக் கூட செய்யத்தெரியாது பாவம்!'' என்று அங்கலாய்த்தாள் நீலா.

அவள் மனம் விட்டுச்சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்ட பிறகுதான், ரகுராமன் நீலாவை நன்கு புரிந்து கொண்டான். அவளது மனதின் அடியில் பதிந்திருந்த அந்தரங்க அன்பின் வடிவம் இப்போதுதான் அவனுக்கு பிரகாசமாகத் தெரிந்தது.

சிறிது நேரத்தில் நீலா நன்ருகத் தூங்கிவிட்டாள். ரகுராமனும் பையில் வைத்திருந்த புத்தகம் ஒன்றை விரித்து பொழுதை ஓட்டினுன். வண்டியும் வேகமாக ஓடி கும்பகோணத்திற்கு வரும்போது ஏற்பட்ட அறை மணி லேட்டை பத்து நிமிடமாகக் குறைத்துக்கொண்டு திருச்சி ஜங்ஷனை அடைந்தது.

டிக்கட் சேகரிப்பவரின் கையில் டிக்கெட்டைக் கொடுத்து வெளியே செல்ல எத்தனித்த ரகுராமனையும், நீலாவையும் எதிரே நின்று ''வாருங்கள்! வாருங்கள்!'' என்று வரவேற்புக் கூறினுன் சங்கரன். சங்கரனைக் கண்டதும் நீலாவும் ரகுராமனும் திடுக்கிட்டனர்! நீலாவின் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டு வெளியே வந்தான் சங்கரன்.

''இதென்ன கூத்து? நீங்களும் இந்த வண்டியிலேதான் வந்தேளா?'' என்று சங்கரனைக் கேட்டாள் நீலா.

"ஆமாம்! அதற்காகத்தான் முதல் மணி அடித்தவுடன் வேகமாக ஸ்டேஷன் பக்கம் டிக்கெட் வாங்கப்போனுர் அத்திம்பேர்! இப்ப புரிஞ்சுதா?'' என்று சிரித்தான் ரகுராமன்.

''நம் இருவருக்கும்தான் இப்போது புரிந்து விட்டதே!''என்று ஒரு போடு போட்டாள் நீலா, ரகுவைப்பார்த்து! நீலாவுக்கு உள்ளூர ஒருவித பயம். "ஆமாம்... நீங்கள் எங்கே உட்கார்ந்திருந்தேள்?'' குறும்பாக சங்கரனைப் பார்த்துக் கேட்டாள் நீலா.

"உங்களுக்குப் பக்கமிருந்து அடுத்த இரண்டாவது பெஞ்சியிலேதான்! ஏன்?'' குறும்பாக நீலாவைப் பார்த்தான் சங்கரன்.

அவனது பதிலைக் கேட்டதும் அவள் மனது 'பக்கு—பக்கு' என்று அடித்துக்கொண்டது. தான் அவரைத் தூஷணையாகப்

பேசிய வார்த்தைகள் அவர் காதில் பட்டிருக்குமோ என்று பயந்தாள் அவள்.

"நீ என்னைத் தூற்றியதையும், போற்றியதையும் எனது காதுகளைத் திட்டிக்கொண்டேதான் கேட்டேன்!" என்று அவன் அன்பாகவும்குறும்பாகவும் சொல்லிக் கொண்டிருக்கும்போதே டவுன் பஸ் வந்து நின்றது. மூவரும் பஸ்ஸில் ஏறி 'மெயின்காட் கேட்டை' அடைந்ததும் ஒரு குதிரை வண்டியில் மூவரும் ஏறினர்.

வண்டி ஆண்டார் தெருவிற்குள் நுழைவதற்குப் பதில் 'நித்யானந்த பவன்' ஹோட்டலின் முன் நின்றது. சங்கரன் அவர்களை அழைத்துக் கொண்டு ஹோட்டலிற்குள் நுழைந்தான். 'குடும்பஸ்தர்கள்' என்ற தலைப்புடன் தொங்கிய போர்டின் அறைக்குள் நுழைந்ததும் அவன் ஆர்டர்படி மூன்று கப் 'புரூட்—ஸாலேட்' மேஜையை அலங்கரித்தது.

"...ம்...சாப்பிடு! நீ ரொம்ப நாளாக ஆசைப்பட்டாயே! நானும் அலட்சியமாக இருந்து விட்டேன்! கடைசியில் கும்பகோணமிருந்து வண்டி புறப்பட இருக்கும்போதுதான் எனக்கு அந்த நினைப்பு வந்தது. அதுவும் பிரசவ காலத்தில் ஆசைப்பட்ட ஒன்றை ... ... அதற்காகத்தான் நான் உன்னுடன் திருச்சி வந்ததே!...ம்...சாப்பிடு! இன்னொரு பிளேட் வேணுமா?" என்றான் சங்கரன். வேண்டாம் என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினாள் நீலா.

அவள், அன்று அவனுடன் சாப்பிட்ட 'புரூட் ஸாலேட்' நாக்கிற்கும் உள்ளத்திற்கும் இனிப்பை ஜில்லென்று வழங்கிற்று என்றாலும் "பாவம்......! இதற்

தந்தி : தம்பி. போன் 11.

எங்கள் சொந்தத் தறியில்...

அழகிய நவீன பார்டர்களில் தயாரிக்கப்படும் பட்டுச் சரிகை சேலைகள், ரவிக்கைகள், பாவாடைகள், தாவணி ரகங்கள் சேலம் வெண்பட்டு சரிகை பேட்டு வேஷ்டி துப்பா ரகங்கள், கலியாண ஜவுளி ரகங்கள் முதலியன சாயத்துக்கு உத்திரவாதமுள்ளவை. மற்றும் பல விதமான மில் கைத்தறி நூல் ஜவுளிகளுக்கு நம்பிக்கையும் நாணயமும் வாய்ந்த இடம்.

★

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. பெரியதம்பி முதலியார் & சன்ஸ்

பட்டு நூல் அண்டு மில் ஜவுளி வியாபாரம்,

183 A-B, காந்தி ரோடு, காஞ்சீபுரம்.

காகவா வந்தீர்கள்?" என்று அவள் வாய் இடை இடையே இன்னும் ஏதேதோ முணு முணுக்கவும்தான் செய்தது.

ரகுராமன் நீலாவைப் பார்த்துக்கொண்டே அகம் மகிழ முகம் மலர சாப்பிட்டு முடித்தான்.

பிறகு மூவரும் ஆண்டார் தெருவை அடைந்து 'சீதா' ஸ்டோருக்குள் நுழைந்தனர். அன்று இரவு அங்கு தங்கிவிட்டு மறுநாள் காலை பஸ்ஸில் தஞ்சாவூர் வந்து கும்பகோணம் வந்துவிட்டான் சங்கரன்.

4

நாட்கள் நகர்ந்தன. திருச்சியிலிருந்து மஞ்சள் தீத்திய கடிதம் வந்தது. பலருக்கும் சர்க்கரை வழங்கப்பட்டது.

"பேத்தி பிறந்துட்டாளா?" என்று பல மாமிகளும் பார்வதியை விசாரித்துவிட்டு வாயில் சர்க்கரையை அள்ளிப் போட்டுக்கொண்டார்கள்.

5

புண்யாவசனத்திற்குச் சங்கரன் திருச்சி வந்து சேர்ந்தான். வீட்டிற்குள் நுழைந்ததும் மாவிலை தோரணங்களால் வீடு அலங்கரிக்கப்பட்டிருந்தது. காலை காபி எதிர்கொண்டு அழைக்கவே அதை அருந்திவிட்டு அந்த அறையின் வாசற்படியின் முன் வந்து நின்றான். அந்த இருட்டு அறையில் அவளது முகம் நிலவென பிரகாசித்தது.

"குழந்தைக்குப் பேர் என்ன வைக்கப்போறேள்?" என்று நீலாவைப் பார்த்துக் கேட்டான் சங்கரன்.

"உங்க அம்மா சொன்னபடி 'மங்களம்'னுதான் வைக்கணும் என்றாள் நீலா.

"இல்லை அத்திம்பேரே! குழந்தைக்குப் பேரு மங்களம்னு வைக்கவேண்டாம்" என்றான் ரகுராமன்.

"அவன் சொல்றதும் சரிதான்! முதல்ல பொறந்த குழந்தைக்கே 'மங்களம்'னு பேர் வெச்சுட்டா அப்புறம் வரிசையா..." என்று ஆரம்பித்தாள் அலமு பாட்டி.

"பின்னே என்ன பேரு வைக்கணும்னு நீ சொல்றே?" என்றான் சங்கரன் ஆச்சர்யத்துடன்.

"சொல்லட்டுமா...?...ம் சொல்லிடுவேன்! ...ஹிஹ்ஹி...ஹி..." சிரித்தான் ரகுராமன்.

"சிரிக்காமதான் சொல்லேன்!" என்று ஏகோபித்த இரண்டு மூன்று குரல்கள் ஒலித்தன.

"கோவிச்சுக்கப்படாது! அத்திம்பேரே! சொல்லட்டுமா...?..."

"சொல்லுப்பா......! என்ன பேரு?..."

"நீலா...சொல்லட்டுமா...?"

"...ம்...சொல்லேன்" இலேசாகச் சிரித்தாள் நீலா.

"அதான்...! ஆமாம் அதேதான்...! 'புரூட் ஸாலேட்!' 'புரூட்ஸாலேட்' என்று சொன்னதும் அங்கு இருந்த எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

நீலாவும் சங்கரனும் ஒருவரையொருவர்பார்த்துக்கொண்டனர்.

"நான் இதோ இருக்கிறேன்?" என்று சொல்வதுபோல் 'புரூட்ஸாலேட்' க்வா—க்வா...என்று அலறியது! ★

---

**பொன்மொழி**

1. அன்பு—அன்பு வளரும் மனத்தில்தான் இரக்கம் முதலிய நற்பண்புகள் செழிக்கும். அன்பில்லாதவர் எத்தகைய கொடிய செயலுக்கும் துணிவர். பகுத்தறிவு பெற்றவன் ஒருவரிடமாவது அன்பு செலுத்தாமல் இருக்க முடியாது. அன்பு விலைக்கு வாங்கத் தக்கதல்ல.

—பன்மொழிப் புலவர்.

# "மனிதரா, நீங்கள்?"

டி. எஸ். கே.

★

"அம்மா..."

தேய்த்த பாத்திரங்களை வரிசையாக அடுக்கி வைத்துக் கொண்டிருந்த தமயந்தியின் தாயார் திரும்பிப் பார்த்தாள்.

"என்ன, குழந்தை?"

"இத்தனை நாட்களாக நீ எத்தனையோ தெய்வங்களை வேண்டிக் கொண்டிருந்தாய் அல்லவா? அதற்குப் பலன் இப்போது கிடைத்திருக்கிறது...!"

"நீ என்ன சொல்கிறாய்? உன் அண்ணாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதா?"

'அண்ணா' என்ற சொல்லைக் கேட்டதும் தமயந்தியின் உடல் முழுவதும் வெறுப்பால் கனன்றது. ஆனால், தன்னால் இயன்றவரை அதை மறைத்துக்கொண்டு, செயற்கைச் சிரிப்பு ஒன்றை வரவழைத்துக் கொண்டாள்.

"ஐயோ, அம்மா!... நீ, நல்ல அம்மா. போ!... இன்னும் மகனை ஞாபகம் வைத்துக்கொண்டு ஏங்கித் தவிக்கிறாய்!..."

"பெற்ற மனம் பித்து என்பார்களே..."

"கிடக்கட்டும். 'கிருஷ்ணா டிரேடர்ஸி'லிருந்து கடிதம் வந்திருக்கிறது. டைப்பிஸ்ட் வேலைக்கு மனுச் செய்திருந்தேன், அல்லவா? புதன்கிழமையன்று பேட்டிக்கு வரச் சொல்லியிருக்கிறார்கள்."

"பேட்டி என்றால் போட்டியும் இருக்குமோ? உன்னைப்போல் பலபேர்கள் வரமாட்டார்களா?"

"வரட்டுமே? நான் எப்படியும் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. மேலும், நான் .." என்று வாக்கியத்தைத் தொடர விரும்பிய தமயந்தி, ஏதோ நினைத்துக் கொண்டவளாய், சட்டென்று நிறுத்திக் கொண்டாள்." நான், நம்முடைய குடும்பத்தின் துன்ப நிலையை எடுத்துச் சொல்லி, பேட்டி கொடுப்பவரின் அனுதாபத்தைப்பெற முயல்வேன் என்று சொல்லத்தான் அவள் விரும்பினாள். ஆனால், 'இதைப்போய் அம்மாவிடம் சொல்வானேன்?' என்ற எண்ணமும் உடன் எழவே, வார்த்தைகளை மென்று விழுங்கினாள்.

"கடவுள்தான் கண்ணைத்திறந்து பார்க்கவேண்டும்" என்று உணர்ச்சியோடு சொல்லிப் பேச்சை முடித்துக்கொண்டாள் தாய்.

மகள் வெளியேறியதும் அவளுடைய நினைவுச் சுழல் கடந்த கால சரித்திரத்தை அள்ளிக்கொண்டு வந்து அவள் முன் கொட்டிற்று.

தமயந்தியின் தந்தை உயிரோடு இருந்தால் வாழ்க்கை இவ்வளவு சீர்கேடு அடைந்திருக்குமா? அவராவது இந்த உலகிலிருந்தே மறைந்துவிட்டார். இனி, வருந்திப் பயனில்லை. ஆனால், பத்து மாதம் சுமந்து பெற்ற மகன் இருந்தும் இல்லாததற்குச் சமானமாகத்தானே ஆகிவிட்டது?

கிடைத்த வேலையை ஏற்றுக் கொள்வதற்காக அவன் கல்கத்தாவிற்குப் புறப்பட்டபோது, அவள் கண்களில் நீர் ஆறாகப் பெருகியது. ஏன், அவனுடைய கண்களும் தான் நீரில் மிதந்தன. அவள் பாதங்களில் வணங்கிவிட்டு எழுந்திருக்கையில், கன்னங்களிலிருந்து முத்துக்கள் நழுவி கீழே விழுந்து சிதறினவே?

தாயிடம் அவ்வளவு பாசம் கொண்ட அவன், அவளுக்கு ஒரு கடிதம் கூடப் போடாதவனாக மாறி விடுவான் என்று யார் தான் எதிர் பார்க்க முடியும்? கல்கத்தாவில் யாரோ ஒரு வங்காளிப் பெண்ணுடன் சிநேகமாம். பின், அவளையே மணந்துகொண்டு விட்டானாம். கடைசியாக எழுதிய கடிதத்தில் பட்டதும் படாததுமாகத் தெரிவித்திருந்தான்.

இந்தச் செய்தியைத் தாங்கிவந்த கடிதத்திற்குப் பின் இரண்டு மாதங்களுக்குப் பணம் மட்டும் வந்தது. பின், அதுவும் நின்றுவிட்டது! வருந்தி வருந்தி எழுதிய கடிதங்களுக்குப் பதிலே இல்லை.

நான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன. பதினெட்டு வயது நங்கையாக வளர்ந்து நின்றாள், தமயந்தி. அவள் மட்டும் இல்லாதிருந்தால் மகனின் செய்கையால் மனம் உடைந்திருந்த அம்மா என்றோ தன்னை மாய்த்துக் கொண்டிருப்பாள்.

'குடியும் குடித்தனமுமாய் இருக்கவேண்டிய பெண், ஆண் பிள்ளையைப்போல் வேலை செய்து சம்பாதித்துப் பிழைக்க வேண்டியிருக்கிறதே?' என்ற நினைவு, அன்னையின் இதயத்தை வெகுவாகத் துன்புறுத்திக் கொண்டிருந்தது. ஆனால், குடியும் குடித்தனமுமாகப் பெண்ணை வைத்துப் பார்ப்பதற்கு அவளிடம் வசதி இல்லையே? தமயந்தியின் படிப்புடன். கையிலிருந்து ரொக்கம், சில நகைகள் எல்லாம் மறைந்துவிட்டன.

∴ ∴ ∴

புதன்கிழமை வந்தது. காலை பத்துமணிக்குப் பேட்டி. ஒன்பதே முக்கால் மணிக்கு, 'கிருஷ்ணு டிரேடர்ஸ்' அலுவலகத்தில் தமயந்தி நுழைந்தபோது தனக்கு முன்பே ஏறக்குறைய முப்பது பேர்கள் காத்துக் கிடப்பதைக்கண்டு திடுக்கிட்டாள். அம்மாவிடம் பேசியபோது இருந்த நம்பிக்கை மாயமாய் மறைந்தது! 'ஒரு இடத்துக்கு முப்பது பேர்கள் போட்டியா? நம்மைவிடப் படிப்பும் அனுபவமும் உடையவர்கள் எத்தனை பேரோ?'

ஹாலில் சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒரே ஒரு நங்கை உட்கார்ந்திருந்தாள். அவளருகே சென்று தமயந்தியும் அமர்ந்தாள்.

பத்து மணிக்கு அலுவலக வாசலில் ஒரு கார் வந்து நின்றது. மூலைக் கச்சமும் கோட்டும் டர்பனுமாக வயதான மனிதர் ஒருவர் இறங்கி உள்ளே நுழைந்தார். ஹாலுக்குள் நுழைந்ததும், பேட்டிக்கு வந்திருந்த அனைவரையும் ஆச்சரியம் தோய்ந்த முகத்துடன் கூர்ந்து பார்த்தார். பார்வை பெண்களின்மேல் விழுந்ததும் ஒரு நிமிஷம் தயங்கிற்று. நங்கையர் இருவரும் அந்தப் பெரியவரின் தீட்சண்யமான பார்வையைத் தாங்க மாட்டாமல் தலையைக் கவிழ்த்துக் கொண்டனர். கூடியிருந்த வாலிபர்களிடையே கேலிப் புன்னகையும் கண்சிமிட்டும் அலையாகப் பாய்ந்தன. ஹாலிலிருந்து அவர் தலை மறைவதற்குள்ளாகவே, 'கிழத்தின் நப்பாசையைப் பாருங்கள், பிரதர்!... சரி, நம்மில் எவருக்கும் வேலை கிடைக்கப்போவதில்லை!' என்று, சற்று உரத்த குரலிலேயே விமர்சித்தான் ஒரு அரட்டைக்கல்வி. மற்றொரு பெண்ணின் மனநிலை எப்படியோ, தமயந்தி உடல் குறுகிப் போய்விட்டாள்.

'வேலையாவது, வெட்டியாவது!...அம்மா சொல்கிறபடி...' என்ற எண்ணம் சிறிது தலைதூக்கியது.

'பண்புடனும் நேர்மையுடனும் ஒரு இளம்பெண் தனியாக வாழ்வதற்கு இந்த உலகம் இடம் கொடுக்காதா?'

'கழுகுகளின் பார்வைக்கு அஞ்சி வாழ்வதைவிட பட்டினி கிடந்து சாவதே மேல்!'

'நான் மட்டும் தனியாக இருந்தால் சரி. அம்மா!... அவளைக் கொஞ்ச காலத்திற்காவது நல்ல நிலைமையில் வைத்துப்பார்க்க நான் ஒரு வேலையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.'

தமயந்தி ஒரு முடிவுக்கு வந்தாள். 'அந்தக் கிழத்தின் பார்வை எப்படி வேண்டுமானாலும் இருந்து தொலையட்டும். எப்படியேனும் அவர் இதயத்தைக் கரைத்து டைப்பிஸ்ட் வேலை கிடைக்கும்படி செய்துகொள்ள வேண்டியதுதான்.'

பியூன், ஒவ்வொருவராகத் தலைமைக் குமாஸ்தாவான டர்பன் கிழவரிடம் அனுப்பிக்கொண்டிருந்தான். உள்ளே போன ஆண்கள் எவரும் இரண்டு நிமிஷத்திற்குமேல் தங்கவில்லை. தமயந்தியைத் தவிர்த்து இருந்த மற்றொரு பெண் மாநிறம்; வலது கையில் இரண்டு பவுன் வளையல்; இடது கையில் கெடிகாரம்; கழுத்தில் ஒற்றைவடச் சங்கிலி; நைலான் சேலை; ஆர்கண்டி சோளி தலைமைக் குமஸ்தாவுடன் ஐந்து நிமிஷம் உரையாடிவிட்டு வந்தாள். அவள் வெளியே வரத் தாமதம் ஆனதும் ஆண்கள் கசமுசத்தார்கள். 'ஐயோ, நான் பெண்ணாகப் பிறக்காமல் போய்விட்டேனே !' என்று அங்கலாய்த்தான், ஒரு ஆண் சிங்கம்.

தமயந்தியின் மனம் கவலைப்பட்டது; கலங்கவில்லை.

'அம்மா...' என்று அழைப்புக் கொடுத்துத் தமயந்தியை சுயகினைவுக்குக் கொண்டுவந்தான் பியூன்.

தலைமைக் குமஸ்தாவின் அறைக்குள் நுழையும்போதே தமயந்தி அழத் தயாரானாள். 'அப்பாவின் சாவு. அண்ணாவின் பிரிவு, அம்மாவின் துயரம்...நீங்கள் தான் ஸார் காப்பாற்ற வேண்டும்' என்று நெஞ்சு உருப்போட்டது.

'டர்பன்' எதிரே நின்றாள், அவள்.

"உட்காரலாமே..."

தமயந்தி நாற்காலியில் உட்கார்ந்தாள். 'உன் பார்வையில் தியை வைக்க! குரலில் இந்தக் குழைவு ஏனோ ?' என்று உள்ளம் பொருமிற்று.

"தந்தை இல்லை என்று மனுவில் குறிப்பிட்டிருக்கிறாயே, சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள் அல்லவா ?"

"ஒரே ஒரு அண்ணா இருக்கிறான். ஸார்..."

"குட்" வேலையில்தானே இருக்கிறார் ?"

"ஆமாம்."

"வெரிகுட். அப்படியானால் நீயும் வேலைக்கு வருவானேன்? உன்னை விட ஆதரவற்ற நிலையில் இருப்பவர்களுக்கு விட்டுக் கொடுப்பது நியாயமல்லவா ?"

தமயந்தி இத்தகைய சந்தர்ப்பத்தைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். கிடைத்ததும், கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். கல்லும் கசிந்துருகும் வண்ணம் தன் சோகக் கதையை எடுத்துரைத்தாள். அவள் சொல்லி முடிக்கும்வரைத் தன் தலையை அசைக்கவில்லை, அவர். அனுதாப ஆர்வத்தால் அப்படி அசைவற்றிருந்தாரா அல்லது அவள் அழகை அள்ளி அள்ளிப் பருகிக்கொண்டிருந்ததால் அசைவற்று இருந்தாரா என்பதைத் தமயந்தியால் தீர்மானிக்க முடியவில்லை. எப்படி இருந்தால் என்ன ? வேலை கிடைத்தால் சரி. யாரும் தன்னிடம் அத்துமீறிப் போய்விட முடியாது என்ற உறுதி தமயந்திக்கு உண்டு.

தன் சோகக்கதைக்கு ஏற்றாற்போல், முடிக்கும் தறுவாயில் குரலைத் தழத்தழக்கப் பண்ணிக்கொண்டாள். 'நமக்கு இவ்வளவு நன்றாக நடிக்க

வருகிறதே! சினிமாவில் நடிப்பதற்கு வாய்ப்புக்கிடைத்தால், பேசாமல் சேர்ந்து விடலாம்' என்று தன்னுள் எண்ணிக் கொண்டாள் அவள்.

'கிழம்' உண்மையிலேயே கரைந்துவிட்டது!

"இந்த இளம் பிராயத்திற்குள் எத்தனையோ இன்னல்களை அனுபவித்துவிட்டாய். எதிர்காலத்தில் எத்தகைய அனுபவங்கள் காத்திருக்கின்றனவோ?" என்று 'அது' கூறிற்று.

"நீங்கள் பெரிய மனதுடன் இந்த வேலையை..."

"நீ இப்போது போகலாம். ஆர்டர் தேடிக்கொண்டு வரும்."

"நன்றி. நான் உங்களுக்கு ரொம்பவும் கடன்பட்டவளாகி விட்டேன்."

தலைமைக் குமஸ்தா ஒரு குறுஞ்சிரிப்பை உதட்டோரமாகச் சிந்தினர். 'போகலாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தார்.

தமயந்தி அவருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு வெளியே நடக்கத் தொடங்கினாள். அறையின் வாசற்கதவைக் கடந்து செல்கையில் தலையைத் திருப்பி அவரைப் பார்த்தாள். அவள் பாதையிலேயே கண்கள் பதிந்திருந்தன. 'சே! இளங்காளைகள்கூட இவரைவிடத் தேவலை. கொஞ்சம் கூட நாகரீகம் இல்லாமல் இப்படி வெறிக்க வெறிக்கப் பார்க்க மாட்டார்கள்.'

இந்த எண்ணங்களையெல்லாம் துடைத்தெறிந்து விட்டு முகத்தில் மகிழ்ச்சியைப் பூசிக்கொண்டு அவள் வீட்டிற்குள் நுழைந்தாள். அம்மாவின் அருகே வந்து ஒரு நிமிஷம் பேசாமல் நின்ருள். ஆனல், அவள் தோற்றத்திலிருந்த மலர்ச்சியே செய்திக்குக் கட்டியம் கூறிவிட்டது.

"எனக்கு வேலை கிடைத்துவிட்டது அம்மா!" இதைச் சொன்னதும் அம்மாவைக் கட்டிக்கொண்டு குதிக்கவேண்டும் போலிருந்தது, தமயந்திக்கு. ஆனல், அம்மாவோ பதில் கூருமல் கண்ணீர் வடிக்கிருளே?

"ஏன், அம்மா?"

"...'அவர்' இருந்து பார்க்கக் கொடுத்துவைக்க வில்லையே..."

தந்தையின் நினைவு தமயந்தியையும் துக்கத்திற்கு ஆளாக்கியது. அவர் இருந்திருந்தால், தலைமைக் குமஸ்தாவின் வயது ஆகியிருக்கும். ஆனல், அவர் எவ்வளவு நல்லவராக இருப்பார்? இந்த டர்பன் கிழத்தைப் போலவா?......

தலைமைக் குமஸ்தாவைப்பற்றி முன்னதாகவே தாயிடம் தெரிவித்து விடுவது நலம் என்று தோன்றிற்று, தமயந்திக்கு. "நீ இந்த ஆபீஸில் வேலைக்குப் போகவேண்டாம்.

இன்னும் சிறிது காலம் காத்திருந்து நல்லவர்கள் வேலை செய்யும் இடமாகப் பார்'' என்று அவள் சொல்லி விட்டால்?

''சம்பளம் எவ்வளவு, தமயந்தி?''

''ஆரம்பத்தில் எல்லாமாகச் சேர்ந்து, நூற்றிப் பதினைந்து ரூபாய் கிடைக்கும்.''

அடேயப்பா. நூற்றிப் பதினைந்து ரூபாய்! இத்தனை ரூபாயைச் சேர்ந்தாற்போல் பார்த்து எவ்வளவு ஆண்டுகள் ஆகிவிட்டன!...

∴ ∴ ∴

ஒரு நாள்.

''அம்மா, தமயந்தி...''

இடத்தில் இருந்தபடியே அவள் தலை நிமிர்ந்தாள். தலைமைக் குமாஸ்தாவின் கைகளில் சற்று முன் அவள் டைப் அடித்திருந்த காகிதங்கள் தென்பட்டன. 'ஐயோ. ஏதாவது தவறு நேர்ந்துவிட்டதா? இந்தக் கிழம் எரிந்து விழாமல் இருக்கவேண்டுமே?'

''ஸார்...''

''உன் தந்தையின் பெயர் என்னவென்று சொன்னாய்?''

''நான் இதுவரை உங்களிடம் சொன்னதில்லையே!...''

''ஓ!...ஆமாம். இப்போதுதான் சொல்லலேன்.''

''வேதாசலம்.''

''சொந்த ஊர்?''

''தஞ்சை ஜில்லா.''

''எந்த ஊர் என்று கேட்டேன்...''

''கும்பகோணம்.''

''அங்கே...?''

அந்தக் கிழத்தை மனதிற்குள் சபித்துக் கொண்டே, ''மேலக் காவேரியில்வீடு இருந்தது. அதை விற்று விட்டு ரொம்ப நாட்களுக்கு முன்பே இங்கே வந்துவிட்டோம்.'' என்றாள்.

''ஓஹோ...எதற்காகக் கேட்டேனென்றால் கும்பகோணத்தில் எனக்குத் தெரிந்தவர்கள் நிறையப்பேர்கள் இருக்கிறார்கள். அடிக்கடி அங்கே வந்திருக்கிறேன்...''

அவள் பதில் சொன்னால் அவர் தொடர்ந்து பேசுவார் போலிருந்தது. தமயந்திக்கோ நெஞ்சில் உதைப்பு. அவள் பேசப் பேச அவருக்கு 'இடம்'கொடுத்தமாதிரி ஆகிவிடுமே?

தமயந்தி வேலையை ஏற்றுக்கொண்டு ஒரு வாரம் ஆகிறது. அதற்குள்ளாகவே அவளுக்கு அலுப்பு ஏற்பட்டுவிட்டது! காரியாலயத்தில் அவளைத் தவிர மற்றவர்களெல்லாம் ஆண்கள். அவர்களுடன் நெருங்கிப் பழக அவளுக்கு அச்சமாக இருந்தது. யாருடனும் பேசாமல் நீண்ட நேரம் மௌனமாக இருப்பதும் கஷ்டமாக இருந்தது. என்னதான் செய்வாள், அவள்? இந்த இக்கட்டான நிலை போதாதென்று தாமோதரன் வேறு அவளுடைய கவலைக்கும் பயத்துக்கும் காரணமாக அமைந்தார். மற்றக் குமஸ்தாக்கள் சிறு தவறுகள் செய்தாலும்

காச்சு,மூச்சென்று இறைவார். ஆனல், அவள் எத்தனை பெரிய பிசகு செய்தாலும் அதைப்பற்றி அவர் மூச்சுக்கூட விடுவதில்லை! இது, ஏன்?

தாமோதரன் இல்லாத சமயங்களில், 'கடுவன் பூனை' என்ற குறிப்புச் சொல்லை உபயோகப்படுத்தித் தமக்குள் பேசிக்கொள்வார்கள். மற்றக் குமஸ்தாக்கள்.

"ஆமாண்டா, உனக்கும் எனக்கும் தான் கடுவன் பூனை. சில பேர்களிடம் பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடக்கிறார்!"— தமயந்தியின் செவிகளில் விழவேண்டுமென்றே உரக்கச் சொன்னன் லெட்ஜர் கிளார்க் வேதகிரி, ஒரு தடவை.

தமயந்தி துணுக்குற்றாள்.

"பின்னே? பெண்டாட்டி செத்து பத்து வருஷம் ஆகிறதாம். சமையற்காரனின் சமையல் அலுத்திருக்குமே!...வீட்டில் தனிக்கட்டை. பெண், பிள்ளை எல்லாம் எங்கெங்கோ இருக்கிறார்கள்..."

சொரேரென்றது, தமயந்திக்கு. குமஸ்தாக்களின் பேச்சு அவளுக்கு விடப்படும் அபாய அறிவிப்பா? அல்லது, வெறும் அரட்டைப்பேச்சு தானா?...

நான்கு நாட்கள் கடந்தன.

அன்று அவள் ஒரு 'ஸ்டேட்மெண்ட்' டைப் செய்திருந்தாள். தாமோதரனின் பார்வைக்குப் போய்விட்டுக் கையெழுத்தாகாமல் திரும்பி வந்தது, அது. ஓரத்தில் எழுதியிருந்த குறிப்பு கண்களில் பட்டதும் பரபரப்புடன் படித்தாள். 'மீண்டும் டைப் செய்யவும். ஸ்டேட்மெண்ட் முழுவதும் ஒரு பத்தி தள்ளி தவறுதலாக அடிக்கப்பட்டிருக்கிறது' என்று தாமோதரன் எழுதியிருந்தார். இந்தத் தவற்றுக்காக அவர் அவளை மிகக் கடுமையாகக் கோபித்துக் கொண்டிருந்தால்கூட அவள் வருந்தியிருக்கமாட்டாள். வேறு ஒருவர் இத்தகைய தவற்றைச் செய்திருந்தால், அவர்மீது வசை பாணங்கள் தொடுத்திருப்பார்.தமயந்தியிடம் அதைப்பற்றி ஒரு வார்த்தைக்கூடக் கேட்கவில்லையே? அவளும் மற்றவர்களைப்போல் மாதச் சம்பளம் வாங்கும் குமாஸ்தா தானே? அவளைக் கடிந்து கொள்ளாதது மட்டுமல்லாமல், அவளிடம் அன்பு பாராட்டுபவர் போலல்லவா நடந்து கொள்கிறார்? இந்த ஒருதலைப் பட்சமான அன்புக்கு மாறாக அவளிடமிருந்து அவர் என்ன எதிர்பார்க்கிறார்?

தமயந்தி திணறினாள்; குழம்பினாள்; கலங்கினாள்.

∴ ∴ ∴

வீட்டுக்குள் நுழையும்போதே அவள் மிகவும் சோர்வாகக் காணப்பட்டாள்.

"உடம்புக்கு என்ன, தமயந்தி?" தாய் பதற்றத்துடன் கேட்டாள்.

"ஒன்றுமில்லை, அம்மா..."

"முகம் வாடிக்கிடக்கிறதே?..."

தமயந்தி ஒரு நிமிஷம் தயங்கினாள். உண்மையைக் கூறிவிட அவள் மனம் துடித்தது. தன் மனத்துடிப்பை அவள் வெளியிட்டு விட்டால் அவளுடைய அன்னையின் மனம் நிலையின்றித் தவிக்க ஆரம்பித்து விடும். எனவே, அணை போட்டுக்கொண்டாள்.

"இன்றைக்கு வேலை அதிகம். ஒரே அலுப்பாக இருக்கிறது..." புன்னகைக்க முயன்ற அவளை உணர்ச்சி வென்று விட்டது! உயிரில்லாத உதட்டசைவே தோன்றி மறைந்தது!

"தமயந்தி என்னிடமா... மறைக்கிறாய்...?"

அவளால் இந்தக் கேள்வியைத்தாங்க முடியவில்லை. தாமோதரனைப் பற்றிய எல்லா விபரங்களையும் மட மடவென்று ஒப்புவித்தாள். கடைசி

யாக. அன்றைய தினம், அவள் வீட்டுக்குச் செல்லும் வழியையும் தூண்டித் துருவி அவர் தெரிந்து கொண்டதையும் தெரிவித்தாள்.

"அம்மா, அவரே இன்னும் இரண்டொரு நாளில் இங்கே வந்தாலும் வருவார். வந்து எக்கச்சக்கமாக ஏதாவது கேட்டாலும் கேட்பார். நீ...நீ..."

"பயப்படாதே நான் பார்த்துக் கொள்கிறேன்..."

"அவர் நல்லவராகவும் இருக்கலாம். இரண்டு மாத காலமாகப் பழகியும் அவரைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னல். ஆனல், அவரைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு வெறுப்புத் தான் தோன்றுகிறது..."

"நீ இனிமேல் அங்கே வேலைக்குப் போக வேண்டாம்!"

அம்மா இதைச்சொல்லி வாய் மூடவில்லை, வாசலில் தாமோதரத்தின் தலை தெரிந்தது!

"தமயந்தியின் வீடு இது தானே...?"

வாசற்புறத்தில் குரல் கேட்டதும் உள்ளே நின்று கொண்டிருந்த தமயந்தி திடுக்கிட்டாள். அவருக்கு எம்மாதிரியான வரவேற்புக்கொடுப்பது என்றே புரியவில்லை. இவ்வளவு விரைவை அவள் அவரிடம் எதிர்பார்க்கவில்லை! எனினும் நிலைமையைச் சமாளிப்பதாக வெளியே வந்தாள்.

"வாருங்கள், ஸார்!..."

அவர் உள்ளே வந்தார். அவர், உள்ளே நுழைவதில் அம்மாவுக்கு இஷ்டமில்லை என்ருலும் தமயந்தியின் பொருட்டு பொருத்துக் கொண்டாள்.

"அம்மா, இவர் எங்கள் ஆபீஸ் தலைமைக் குமாஸ்தா"...என்ருள் தமயந்தி, அறிமுகம் செய்து வைக்கும் தோரணையில்.

பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார், தாமோதரன்.

"ஆபீஸிலிருந்து நேரே இங்கே வருகிறீர்களா, ஸார்?"

"ஆமாம். உன் தாயாரைப் பார்த்துப் பேச வேண்டியிருந்தது. அவசரமான விஷயம்! அதனல், நேரே வந்துவிட்டேன்."

"ஓகோ" அம்மாவிடம் ஜாடை காட்டிவிட்டு, ஏதோ காரியம் இருப்பதைப் போலக் கொல்லைப்புறம் சென்ருள், தமயந்தி.

"அம்மா, உங்கள் பெண் தமயந்தி ரொம்ப நல்ல பெண். இரண்டு மாதமாகப் பார்த்து வருகிறேனே, ரொம்ப அடக்கம்! புத்திசாலியும் கூட".

"ஆமாம்." உள்ளுக்குள் பொறுமிக் கொண்டிருந்த அம்மாவுக்கு வேறு வார்த்தை கிடைக்கவில்லை!

"தமயந்தியிடம் படிப்பு, நாகரீகம் எல்லாம் இருக்கின்ற.... குடும்பப் பாங்காகவும் இருப்பாள் என்று தோன்றுகிறது. என் எண்ணத்தில் பெண் எல்லோரும் குடும்ப நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமே யல்லாது, ஆபீஸ் பொறுப்பை மேற்கொள்ளக்கூடாது. என்ன சொல்கிறீர்கள், நீங்கள்?"

"நியாயம் தான். சில குடும்பங்களில்..."

"அது கிடக்கட்டும். தமயந்தியை எடுத்துக்கொள்ளுங்கள். அவள் மணம் செய்து கொள்ளாமல் வேலை தேடிச் சென்றதற்குக் காரணம் குடும்ப நிலை என்பீர்கள், நான் ஒன்று கேட்கிறேன், உங்களுக்கு எவ்

விதச் செலவும் இல்லாமல் தமயந்தியை மணக்க ஒருவன் முன் வந்தால் நீங்கள் மறுப்பீர்களா ?''

''மாட்டேன். ஆனால், தமயந்திக்கு அவனைப் பிடித்திருக்க வேண்டுமே !''

''கட்டாயம் !...ஆமாம் ... அதையும் யோசிக்கத்தான் வேண்டும்... இருந்தாலும், நீங்கள் பெரியவர், தாயார். அவளுக்கு நன்மை என்று பட்டதை எடுத்துச் சொல்லலாம்...''

தமயந்தியின் தாய் தன்னுள் கொதித்துக் கொண்டிருந்தாள். ''இந்த வயசில் உமக்குக் கல்யாண ஆசையா!...நான் வேறு அவளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமாமே !...''

''...சரி, இரண்டு நாளில் மறுபடியும் வருகிறேன். அதற்குள், தமயந்தியை...''

'' ஐயா, நீங்கள் இனி வரவேண்டாம் !''

நாற்காலியிலிருந்து எழுந்தவர், நெற்றிப் பொட்டில் அடிபட்டவரைப் போல், நின்றார்.

'' அவள் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது !''

'' என்ன சொன்னாள் ?''

''ஆபீஸில் உங்கள் அட்டகாசத்தைப் பற்றிச் சொன்னாள் ! விழுங்கி விடுவதைப் போல் பார்க்கிறீர்களாமே, அவளை? ... காலம் கடந்தபின் நீங்கள் எதற்கு வேண்டுமானாலும் ஆசைப்படலாம். அதற்காக என் மகளின் வாழ்வைப் பலியிடத் தயாராக இல்லை, நான்...''

வேரோடி நின்றார், தாமோதரன். நா அடைத்துக்கொண்டு, தன்னுள் விக்கினார்.

''நீங்கள் என்னம்மா சொல்கிறீர்கள் ? நான் ஒன்றும் அப்படித் தவறுதலாக...''

''...நீங்கள் இங்கே...''

''...நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள். தமயந்தி தன் குடும்ப நிலையை விளக்கியதுமே அவளிடம் எனக்கு அனுதாபம் ஏற்பட்டு விட்டது. அதனால் தான் வேலை கொடுத்தேன். அவளுடைய குண குணங்களையும் நடையுடைகளையும் கண்காணித்தேன். அவளிடம் பேச்சுக்கொடுத்து அநேக விபரங்கள் அறிந்தேன். அவளை எனக்கு எல்லாவிதத்திலும் பிடித்து விட்டது ! இன்றைய தினம் உங்களை நேரில் கண்டு பேசிவிட்டு போகலாமென்று...''

தமயந்தியின் தாய்க்கு ஆவேசமே வந்துவிட்டது. பொரிந்து தள்ளினாள்; மனிதரா, ஐயா, நீங்கள் ? எவ்வளவு துணிச்சல் உங்களுக்கு ? 'அந்தப் பசுங்கிளியை எனக்குத் திருமணம் செய்து வை' என்று கேட்க உங்கள் நா கூச வில்லை?...''

அவர் திடுக்கிட்டுப் போனார் ! ''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? எனக்குத் திருமணமா !...''

''பின்னே !...உங்கள் தமையனுக்கா ?''

தாமோதரனின் தொண்டை கர கரத்தது.

''இல்லையம்மா. என் மகனுக்கு !...''

அம்மாவின் புருவங்கள் வியப்பில் விரிந்தன.

''என் பையன் ஒருவன் பூனாவில் இஞ்சினீயராக இருக்கிறான். ஒரு மாத லீவில் இங்கே வந்திருக்கிறான். அவன் பூனா திரும்புவதற்குள் ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்க்க வேண்டுமென்று ஆசை. அவன் அம்மா உயிரோடு இருந்தால் இத்தனை நாள் அவனைத் தனியாக இருக்க விட்டிருக்க மாட்டாள். அவனுக்குத் தமயந்தியைக் கொடுப்பீர்களா என்று கேட்கத் தான் வந்தேன்...''

அம்மாவின் நெஞ்சு பாகாய் உருகியது. ''மனிதரா நீங்கள் ? இல்லை. தெய்வம் !''

உள்ளே நுழைந்த தமயந்தி 'கடுவன் பூனை'யை ஏறிட்டுப்பார்த்தாள். அங்கே பூனையைக் காணோம். கருணையின் உருவம் நின்று கொண்டிருந்தது !

★

## இசையுலகில் புது முகம்

★

சமீபத்தில் திருச்சி வானொலியில் சிறுவர்களுக்கென அமைக்கப்பட்ட பகுதியில் சிறப்பாக பாடினார் குமாரி G. K. இராஜேஸ்வரி. இவர் கர்நாடக சங்கீதத்தை நல்ல முறையில் பயின்றிருப்பதால் சங்கீத ஞானம் குன்றாமல் இனிமையாகப் பாடுகிறார். இவருடைய குரலும் கணீரென ஒத்துழைக்கிறது. சங்கீத உலகில் பெரும் புகழ்பெறக் கூடுமென்பதற்குச் சில புது அம்சங்களும், பாணிகளும் இவரிடம் அமைந்துள்ளதை வரவேற்கக் கூடியதே. இவர் பல இடங்களில் தக்க பக்க வாத்தியங்களுடன் கச்சேரி செய்து வருவதாயும் தெரிகிறது. குமாரி G. K. இராஜேஸ்வரி சங்கீதவானில் ஒரு நக்ஷத்திரமாக விளங்குவார் என்றே கருதுகிறோம்.

# வேலி

**விக்கிரமன்**

"பாலு" என்று கூப்பிட்டாள் பட்டுப்பாட்டி. அவளுக்குப் பல் மட்டும் இருந்தால் கடித்திருப்பாள்.

"அடேய், பாலு" என்று மீண்டும் கூப்பிட்டாள். பாலு குடித்தனக்காரர்கள் பகுதியிலிருந்து வந்தான்.

"என்ன பாட்டி கூப்பிட்டாயா?" என்று கேட்டுக்கொண்டே பாட்டி பின் அருகே வந்தமர்ந்தான்.

"ஆமாம்; கூப்பிட்டேன். கூப்பிடாவிட்டால் வருவாயா? அங்கே உனக்கு என்ன வேலை. அவா ஏதாவது பேசிக் கொள்வார்கள் ஆயிரம் விஷயம் அவர்களுக்கு உண்டு. உனக்கென்ன வேலை?" என்று சற்றுக் கடிந்தே கூறினாள்.

"எனக்கு என்ன பாட்டி. வந்து, அவருக்கு உடம்பு சரியில்லை. தலை வலி பிளக்கிறதாம். தைலம் தேய்க்க அவர் அகமுடையாளுக்குத் தெரியவில்லை."

"நீ போய்த் தேய்த்தாயாக்கும். நன்றாயிருக்கு. உனக்கு ஆபீசுக்கு நாழி ஆகலையா?" என்று சற்றுக் கோபமாகவே கேட்டாள் பாட்டி.

தன் பேரன் அடிக்கடி குடித்தனக்காரர்கள் பக்கம் போய்ப் பேசுவதும் பழகுவதும் அவளுக்குப் பிடிப்பதில்லை. தன் பேரன் பாலுவின் குணம் அவளுக்குத் தெரியும். இதற்கு முன்பு இருந்த குடித்தனக்காரர்களுடன் இப்படித்தான் பழகினான். கடைசியில் என்ன ஆனது தெரியுமா? அவர்கள் வீட்டுப் பெண்ணை பாலுவுக்குக் கொடுக்கிறேன் என்று ஜாதகத்துடன் வந்துவிட்டார்கள். தனக்கிருக்கும் ஆஸ்திக்கு ஆசைப்பட்டுத்தான் இப்படித் தன் பேரனைக் கைக்கொள் போட முயல்கிறார்கள் என்று கோபத்துடன் பாட்டி அந்த வரனை ஏற்கவில்லை. அத்துடன் அவர்களைக் காலி செய்து போகும்படியும் கூறிவிட்டாள். வரும் குடித்தனக்காரர்களுக்குக் கலியாண வயதுப் பெண் இருந்தால் வாடகைக்கு விடுவதில்லை என்ற நிச்சயம் கொண்டாள். பாலுவுக்குப் பாட்டி மீது கோபம்தான். கோபித்து என்ன பயன். பாட்டியன்றோ அவனை எடுத்து வளர்த்து இந்த உயர் நிலைக்குக் கொண்டு வந்தது.

பட்டுப் பாட்டியின் மகள் வயிற்றுப் பேரன் பாலு. அவன் தந்தை உயிருடன் இருந்தவரைத் தன் மனைவியைப் படாதபாடு படுத்தி வைத்தார். பாடு தாங்காமல் அந்த மகராஜி மஞ்சள் குங்குமத்துடன் போய்ச் சேர்ந்தாள், பாலுவைப் பெற்றெடுத்து விட்டு. இரண்டு மாதத்தில் அவரும் விபத்தொன்றில் சிக்கி உயிர் நீத்தார். பாலுவைப் பட்டுப்பாட்டி எடுத்து வந்து வளர்த்தாள். காத்தாள். பெரியவனாக்கினாள். அவள் மார் மேலும், மடிமீதும், தோள்மீதும் தவழ்ந்து வளர்ந்த பாலு அழகான பெண்களைக்கண்டு 'ஹிஹி' என்று பல்லைக் காட்டும்போது அவளுக்கு ஆத்திரம் பொங்குவரும். காலாகாலத்தில் கலியாணம்பண்ண ஆசைதான். ஆனால் வரன் சரிவரக் கிடைக்கவில்லையே. கலியாணத்துக்குப் பிள்ளை இருக்கிறான் என்று அறிந்து, தனக்கிருக்கும் சொத்துக்கும் ஆஸ்திக்கும் ஆசைப்பட்டு தன் பெயரனை மயக்கி விடுகிறார்கள் என்று பட்டுப்பாட்டி எண்ணுவாள்.

அந்தக் குடித்தனம் போனபிறகு கணவன் மனைவி மட்டும்கொண்ட புதுக் குடித்தனக்காரர் வந்தனர். அப்பாடா கவலையில்லை என்று எண்ணிய பட்டுப்பாட்டிக்கு குடித்தனக்காரப் பெண் 'பாலு பாலு' என்று பெயரிட்டழைப்பதும் களுக்

என்று சிரிப்பதும் பாட்டிக்குப் பிடிக்கவில்லை. கணவன் மனைவி பேசிக்கொண்டிருக்கும் போது பாலுவும் அவர்கள் பேச்சில் கலப்பதில் அவர்கள் தடை கூறுவதில்லை. பட்டுப்பாட்டி ஆத்திரப் படுவாள்.

ஒண்ணுந்தேதி பிறந்தவுடன் பட்டுப்பாட்டி குடித்தனக்காரரைக் கூப்பிட்டுச் சொல்லிவிட்டாள். அடுத்த முதல்தேதி வேறு வீடு பார்த்துப் போகுமாறு. பாலுவுக்குக் கோபம்தான். இருந்தாலும் அவனால் ஏதும் செய்ய முடியவில்லை.

⁂ ⁂ ⁂

'வாடகைக்கு விடப்படும்' போர்டு வீட்டின் வெளியே தொங்கியது. வீடுபார்க்க வருபவர்களிடம் பட்டுப்பாட்டி கேட்கும் முதல் கேள்வி "நீங்கள் எத்தனைபேர்? குழந்தைகள் இருந்தால் எவ்வளவு வயது?" என்பதே.

"நான், என் ஒய்ப், என் பெண்" என்று கூறுவார் ஒருவர்.

"இல்லை, வாடகைக்கு விடப் போவதில்லை" என்று கூறிவிடுவாள் பாட்டி. பெண் குழந்தைக்கு 3 வயதுதான் இருக்கும். பெண் என்றவுடன் இரட்டைப் பின்னல் போட்டு முந்தானையை முழங்காலை விட்டுத் தள்ளித் தள்ளி நடந்து கழுத்தை உடைத்து உடைத்துத் திரும்பிப்பார்க்கும் குமரி ஞாபகமே பாட்டிக்கு வந்துவிடும். பேரனுக்கு பலமான வேலியைப் போட முயன்றாள் பாட்டி.

⁂ ⁂ ⁂

**வீடு** காலியாகவே இருந்தது. 'ஹோ' என்று வெறிச்சோ எனக் காட்சியளித்தது. சலசலப்பு இல்லாத அந்த வீட்டைப் பார்க்கும் போது பாலுவுக்கு எரிச்சலாக இருக்கும். எதிர் வீட்டு ஜன்னலை யாவது ஒருமுறை பார்க்கத் தன் ஜன்னலை திறப்பான். கிழவர் ஒருவர் வழுக்கைத் தலையை வாறி விட்டுக் கொள்வார், 'சட்' என்று புத்தகத்தால் முகத்தை மூடிக் கொள்வான்.

**வீடு** காலியாகவே இருந்தது வீட்டிற்கு வருபவர்களைக் கேள்வி மேல் கேள்வி கேட்பதால் யாரும் பார்க்கக்கூட வருவதில்லை. கடைசியில் ஒருநாள் ஒரு குடும்பத்தவர் வாடகைக்கு வீடு கேட்க வந்தனர். கட்டுக் குடுமியுடன் வந்தவரும், அவரது சகதர்மிணி பழையகால மோஸ்தர் புடவை கட்டிக் கொண்டும் வந்தனர். அவர்களுடன் ஒரு பெண் வந்தாள். பாட்டி வரும் போதே அந்தப் பெண்ணைதான் ஒரு முறை கவனித்தாள். இப்படிக் கூட ஒரு பெண் சிருஷ்டியிருக்குமோ என்று பாட்டி மனதுக் குள்ளேயே வியந்தாள். கறுப்பு என்றால் அட்டைக்கரி. பாட்டி முகத்தைத் திருப்பிக்கொண்டாள். எப்படித்தான் கலியாணமாகப் போகிறதோ என்ற கவலை! அவள் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் தன் பேரன் பிழைத்தான் என்ற சந்தோஷத்தில் ஏற்பட்ட கவலை அது.

வந்தவர்களுக்கு வீடு பிடித்து விட்டது. பாட்டிக்கும் அவர்களைப் பிடித்துவிட்டது. பாலு யார் வந்தார்கள் போனார்கள் என்று காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை.

குடித்தனம் வந்த இரண்டு நாட்கள் கழித்து ஒருநாள் காலை இனிய பாடலின் ஒலி எழுந்தது. பாலு மெல்ல எட்டிப்பார்த்தான். குழாயடியில் முதுகுப்புறம் தெரியும் வண்ணம் இளமங்கை தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தாள். அவள் தான் அம்பாள்மீது ஸ்தோத்திரப் பாடலொன்று பாடுகிறாள் போலிருக்கிறது. புதிய புடவை அவள் அணிந்திருந்ததும் குரலின் இனிமையும் சேர்ந்து அவள் யாரோ பேரழகி என்ற எண்ணத்தைப் பாலுவுக்கு உண்டாக்கியது.

பாலு ஒருமுறை குழாயடிப்பக்கம் ஏதோ பிரமாதமான வேலை இருப்பதுபோல் சென்றான். திரும்பவும் ஒருமுறை அந்தப்பக்கம் திரும்பி வந்தான். அவளும் ஒருதடவை திரும்பிப் பார்த்தாள்.

பாலு சட்டென முகத்தைத் திருப்பிக்கொண்டான். இனிய

குரலைப் படைத்திருக்கும் ஆண்டவன் இன்னும் களையான முகத்தைப் படைத்திருக்கக்கூடாதா? பாலு தன் அறைக்குப் போய் விட்டான்.

பாட்டிக்கு ரொம்பவும் நிம்மதி. பாலு குடித்தனக்காரர்கள் வீட்டுப் பக்கமே திரும்புவதில்லை. அதனால் பாட்டி அவர்கள்பால் அதிக சிரத்தை கொண்டாள். அவர்களிருக்குமிடம் சென்றமர்ந்து அவர்கள் க்ஷேமலாபங்களை விசாரிப்பாள். அந்தப் பெண் பக்கம் பாட்டியின் கவனம் திரும்பும். அவள் தலையை வாரிக்கொண்டு கையில் நோட்டுப் புத்தகத்துடன் எங்கோ கிளம்ப ஆயத்தமாவாள்.

"உன்பெண் பள்ளிக்கூடத்தில் படிக்கிறாளா?" என்று அந்தப் பெண்ணைப் பார்த்தபடியே கேட்டாள்.

"இல்லே, பாட்டி. அவள் டைப் ரைட்டிங் கிளாஸில் சேர்ந்திருக்கிறாள். பொழுது போகவேண்டுமல்லவா?" என்பாள் குடித்தனக்கார மாமி.

''ஆமாம்டி. டைப்ரேட்டிங், கத்துண்டு ஏதாவது வேலைக்குப் போகணும். அதுகிடக்கட்டும். நான் கேட்கிறேன்னு கோவிச்சுக்காதே. கலியாணத்துக்கு என்ன ஏற்பாடு செய்திருக்கே! ஆனபட்டவாளுக்கெல்லாம் நல்ல வரன் குதிர மாட்டேன் என்கிறது..."—பாட்டி அந்தப் பெண் கறுப்பாய் இருப்பதைச் சொல்லாமல் சொன்னாள்.

''ஆமாம் பாட்டி அவளுக்குன்னு ஒருத்தன் எங்கே வளர்கிறானோ'' என்று அலுத்துக்கொண்டாள். அவளுக்கும் பாட்டியை ஒரு வார்த்தை கேட்டுவிட ஆசை. ''பாட்டி உங்க பேரனுக்கும் வயசாகிண்டே போறதே எப்போ கலியாணம் செய்யப் போறீங்க'' என்று அந்தக் கேள்வியை அவள் கேட்கும் முன்னதே பாட்டி முந்திக் கொண்டாள். ''என் பேரனுக்கும் வரன் வருகிறது. எனக்கு மனசுக்குப் பிடிக்கவில்லை. மூக்கும் முழியுமா ராஜாத்தி மாதிரி வரணும்னு எனக்கு ஆசை. சிலர் அவனுக்கு இருக்கிறசொத்துக்கும் அவன் அழகுக்கும் அவனை எப்படியாவது மயக்கிடணும்னு பார்த்தா, நானா விடுவேன். அவனைச்சுத்தி வேலியா போட்டுட்டேன்'' என்று தன் ஓரிரண்டு பற்கள் வெளியே தெரிய சிரித்தாள்.

"ஆமாம் பாட்டி இந்தக் காலத்தில் காதல்தானே முக்கியமாய் போயிடுத்து! பெற்றவர்களைக் கேட்காமலேயே கலியாணம் நடந்துடறது..." என்று அந்த அம்மாளும் மெல்ல நகைத்தவாறு கூறினாள்.

பாலு வீட்டில் அதிக நேரம் தங்குவதில்லை. தங்கும் அந்தச் சிறு நேரமும் தாழ்வாரத்திற்கும் அறைக்கும் குறுக்கும் நெடுக்குமாக இரண்டு முறை அலைவான். அப்போது பாட்டி அவனைச் சுட்டிக் காட்டி குடித்தனக்காரரிடம் "ஏன் நீங்களே சொல்லுங்கோ, என் பேரன் ராஜா மாதிரி இல்லை. இவனுக்கு வரவளும் ராணி மாதிரி இருக்கவேண்டாமா? இவன் என்னடா என்றால்...பாட்டி வர வரன்களையெல்லாம் தள்ளி வருவதாகக் குறை கூறுகிறான்..." என்று சிரித்தவாறு கூறுவாள்.

பாட்டிக்கு ரொம்ப நிம்மதி. குடித்தனக்காரர்களால் எந்தவிதத் தொந்தரவும் கிடையாது என்று. அந்தப்பெண் அழகாயில்லாததால் தானே பாலுவும் அந்தப் பக்கமே திரும்பிப்பார்ப்பதில்லை. பாட்டி அந்தக் குடித்தனக்காரப்பெண்ணை மிக வாழ்த்தினாள். ஒரு நாள் அந்தப் பெண் புதுப் புடவை ஒன்று உடுத்திக் கொண்டு பாட்டிக்கு

நமஸ்காரம் செய்தது. ஏதோ பகவான் அழகு கொடுக்கவில்லை என்பதற்காகக் கவலைப்படாதே. நல்ல இடத்தில் உனக்குக் கல்யாணமாகி மகராசியா வாழ்வாய் என்றாள்.

★

ஒருநாள் காலையில் குடித்தனக்காரர் பாட்டியிடம் வந்தார். "பாட்டி நாளைய தினம் வீட்டைக் காலி செய்து விடலாம் என்று எண்ணியிருக்கிறேன். இந்த வீட்டிற்கு வந்த முகூர்த்தம் எனக்கு வேலை உயர்ந்திருக்கிறது. தொழிற்சாலையில் என்னை மாற்றி விட்டார்கள். அதனால் நான் அம்பத்தூருக்குக் குடித்தனம்போகிறேன், என்றார்."

பாட்டிக்கு வேதனையாக இருந்தது வீட்டைக் காலி செய்கிறேன் என்று கூறுபவர்களிடம் அவள் வேதனைப்பட்டது கிடையாது. இப்போது ஏனோ பாட்டிக்குத் துயரம் இதயத்தில் ஆழ்த்தியது. அடுத்து வருபவர்கள் எப்படி இருப்பார்களோ? பாலுவுக்குத் தான் கட்டிய வேலி முறிந்து விடுமோ...

அதே போல் பாலுவை நான்கு நாட்களாகப் காணவில்லை. ஒரு நாள் வராதபோது பாட்டி கவலைப் படவில்லை. சிநேகிதன் வீட்டிற்குப் போயிருப்பான் என்று எண்ணினாள். குடித்தனக்காரர்களும் இல்லாமல் அந்த வீட்டில் இருப்பது அவளுக்கே கஷ்டமாக இருந்தது. சீக்கிரம் பேரனுக்கு கல்யாணத்தை முடித்து விடவேண்டும் என விரும்பினாள்.

நான்காம் நாள் காலையில் பாலு வீட்டிற்கு வந்தான். அவன் பின்னால் அந்தக் குடித்தனம் இருந்து விட்டுப் போன பெண்ணும் வந்தாள்.

பாலுவைப் பார்த்தவுடன் பாட்டிக்கு அழுகை வந்தது.

"பாலு எங்கேடா கண்ணு நாலு நாட்களாகக் காணவில்லை. சொல்லாமல் போகலாமா வீட்டிலும் குடித்தனக்காரர்கள் இல்லை. அந்தப் பெண் இருந்தால் ஏதோ சதா பாட்டு என்று படித்துச் சொல்லும். பொழுது போகும்" என்றாள்.

"பாட்டி உங்களுக்கு எப்போதும் கதையும் பாட்டும் படித்துச் சொல்ல அவளை அழைத்து வந்திருக்கிறேன்" என்றான். பாலு குறும்புச் சிரிப்பு மிளிர.

"அழைத்து வந்திருக்கிறாயா? கமலியையா? கமலி நீ தினமும் எப்போதாவது ஒரு வேளை இங்கு வந்து போயேன். எனக்கும் நிம்மதியாயிருக்கும்" என்றாள் பாட்டி.

"எப்போதாவது ஒரு வேளை என்ன பாட்டி இனி எப்போதும் உன் அருகே இருந்து பணி விடை செய்வதே அவள் வேலை" என்றான் பாலு.

பாட்டிக்குப் புரியவில்லை குடித்தனம் இருந்து விட்டுப் போன தம்பதிகள்—கமலியின் பெற்றோர் கையில் வெற்றிலை பழம் சகிதம் அங்கு வந்தார்கள்.

"ஆமாம் பாட்டி; இனி கமலி உங்களுடையவள். ஏதோ ராஜாவுக்கு ஏற்ற ராணி வரவேண்டும் என்று ஆசைப்பட்டீர்கள். கறுப்புப் பெண் தான். ஆனால் நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டு மகராஜியா இருக்கணும்னு ஆசீர்வாதம் செய்தேள். உங்கள் வாக்கு பலித்தது. என் பெண்ணை உங்கள் பேரனுக்குப் பிடித்து விட்டது. அவளது பாட்டுத் திறமை அவனை மயக்கி விட்டது. தினமும் இருவரும் இன்ஸ்டிடியூட் போகும் போது சந்தித்து மனம் விட்டுப் பேசிக் கொள்வர். முடிவு— பாட்டி ஆசீர்வாதம் செய்யுங்கள்; அடுத்த முகூர்த்தத்தில் திருத்தணியில் கலியாணத்தை முடித்துவிடுவோம்..." என்றார் கமலியின் தகப்பனார்.

பாட்டிக்கு ஏதும் புரியவில்லை. தான் போட்டிருந்த வேலியைத் தானே எடுத்து விட்டோமே என்று எண்ணினாள். அவள் கரங்கள் ஆசீர்வதித்தன.

★

# பிரகத்தன்

**தி. நா. சுப்பிரமணியன்**

வடநாட்டிலிருந்து ஆரிய அரசன் பிரகத்தன் என்னும் மன்னன் ஒரு சமயம் தமிழ் நாட்டுக்கு வந்திருந்தானாம். மதுரைமா நகருக்கு வந்து பாண்டியமன்னனைக் கண்டு அங்கே சில காலம் தங்கினன். பாண்டியன் பெரும்புலவர்கள் பலரைக் கூட்டித் தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவித் தமிழ் வளர்த்து வருவதைக் கண்டு மகிழ்ந்தான். அவனுக்கும் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று.

அவன் ஆசையை நிறைவேற்றச் சிறந்த புலவராக விளங்கிய கபிலர் ஆசிரியராக அமர்ந்தார். ஆனல் சிறு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லுவதுபோல அவனுக்குக் கற்பிக்க முடியுமா? ஆகவே அவர் புதிய முறை ஒன்றைக் கையாண்டார். தமிழில் எது சிறந்ததோ அதை அவனுக்கு அறிவித்துத் தமிழின் சிறப்பை எடுத்துக்காட்ட அவர் கருதினர்.

தமிழ் இலக்கண வரம்புகொண்ட மொழி. எழுத்து, சொல், பொருள் என்று அதன் இலக்கணம் மூன்று பிரிவாக அமைந்தது. அவற்றுள் பொருட் இலக்கணம் தமிழுக்கே சிறப்பாக அமைந்தது. அது அகம், புறம் என இருவகைப்படும். அந்த இரண்டிலே அகமே சிறந்தது. அதுவும் களவு, கற்பு என்று இரு பிரிவு கொண்டது. அந்த இரண்டில் களவு சிறந்தது. ஒருவனும் ஒருத்தியும் தாங்களாகவே சந்தித்துக் காதல் கொள்ளுவதை எடுத்துரைப்பது களவு ஆகும். அதனல் களவுக் காதலைப் பற்றியதை எடுத்து உரைத்தால் அதுவே தமிழின் சிறப்பை எடுத்துரைப்பதாக ஆகும். அதனல் பிரகத்த மன்னனும் தமிழின் சிறப்பை அறிந்துகொண்டோம் என்ற நினைவு ஏற்படும். இவ்விதம் எண்ணிய கபிலர் குறிஞ்சிப்பாட்டு என்னும் களவுக் காதல் இலக்கியத்தைப் படைத்தார்.

சங்க நூல்களுள் ஒன்றுன பத்துப் பாட்டில் அடங்கிய குறஞ்சிப் பாட்டு தோன்றிய வரலாற்றைத் தமிழாசிரியார் ஒருவர் இவ்விதம் கற்பனை செய்து சுவைபடக் கூறுகிருர். இது முழுவதும் கற்பனை அல்ல. குறிஞ்சிப்பாட்டின் முடிவிலே 'ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவிக்கக் கபிலர் பாடியது' என்று காணும் தொடரே அதற்கு ஆதாரம்.

ஆரியர் என்னும் சொல் பொதுவாக வடநாட்டவரைக் குறிப்பதாகவே சொல்லப்படும். வடவாரியர் என்ற சொல்லும் சங்க நூல்களிலே பல இடங்களில் காணப்படுகிறது. சிலப்பதிகாரக் கதை நடந்த காலத்திலே மதுரையிலே பாண்டிய மன்னனுக ஆட்சி புரிந்த நெடுஞ்செழியனும் வடவாரியர்களைப் போரில் புறங்கண்டவன்.

''வடவாரியர் படைகடந்து
தென்றமிழ் நாடு ஒருங்கு காணப்
புரைதீர் கற்பிற் றேவிதன்னுடன்
அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன்''

என்று வரும் சிலப்பதிகார அடிகள் இதை விளக்கும். இதனல் அவன் 'ஆரியப்படை கடந்த' என்னும் சிறப்பு அடைமொழியையும் பெற்றுன்.

அதே போல இமயவரம்பன் நெடுஞ் சேரல் ஆதன் என்பானும் வடவாரியரை வெற்றி கொண்டவன் என்று பதிற்றுப் பத்துப் பாடல்கள் கூறுகின்றன. அவற்றுள் வடவாரியர் என்று பொதுவாகக் கூறப்பட்டிருப்பினும் அவன் கடம்பர்களை எறிந்த செய்தியே சிறப்பாகக் காணப்

படுகிறது. கடம்பர்கள் துளுநாட்டு பகுதியில் இருந்தவர்கள். அந்தப் பிரதேசத்துக்கே ஆரியதேசம் என்ற பெயர் இருந்ததென்றும் தோன்று கிறது. அது டாலமி, பெரிபுளூஸ் போன்ற யவன ஆசிரியர்களின் பூகோள நூல்களிலிருந்து தெரிகிறது.

இந்தியாவின் மேற்குக் கடற்கரையை விவரித்து வரும்போது நித்ரா என்னும் இடத்தை ஆரியகத்தின் (Ariake) கடைசித் துறைமுகமாகக் கூறுகிருர்கள். அதைத் தொடர்ந்து லிமிரிகே அல்லது தமிரிகே, அதாவது தமிழகத்தின் துறைமுகங்களாக நௌர, திண்டிஸ் என்பன கூறப் பட்டுள்ளன. திண்டிஸ் அல்லது தெண்டிஸ் என்பது சேரமன்னனுக்கு உரித்தான தொண்டி என்னும் துறைமுகப்பட்டினமாகும். ஆனல் நௌர தொண்டி என்பவை மலேயாளக் கரையின் வடபகுதியில் இருந்தவை என்பதைத் தவிர இப்போது அவை எந்த ஊர்களாகுமென்பதை நிச்சயிக்க முடியவில்லே. எனினும் நித்ரா என்பது எது என்று ஓர் அளவு நிச்சயமாகக் கூறலாம். நேத்ராவதி என்னும் ஆறு கடலுடன் கலக்கும் இடத்தில் அமைந்திருந்த பட்டினமே என்னலாம். அது இப்போது தென் கன்னடம் ஜில்லாவில் உள்ள மங்களூர்ப் பகுதியைக் குறிக்கும். அதனல் அந்நாளில் அந்த இடமே தமிழகத்துக்கும் ஆரிய அகத்துக்கும் எல்லேயாக அமைந்திருந்தது என்னலாம். இன்னும் ஆரியகம் என்பதும் வட இந்தியா முழுவதையும் குறிக்காமல், கர்நாடக தேசத்துப் பகுதியையே குறித்து வந்தது என்றும் கொள்ளலாம்.

தவிர ஆரியர் என்ற சொல் வடநாட்டு மக்களேப் பொதுவாகக் குறிக்காமல் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்த மக்களேயே உணர்த்தி வந்தது என்பது சாசனங்களாலும் தெரிகிறது. கி. பி. 1251-ஆம் ஆண்டு மதுரையில் சிங்காதனம் ஏறிய ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் புகழை விரித்துரைப்பதாக 'பூமலர் வளர்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியிலே அவனுக்கு,

> **''குச்சரரும் ஆரியரும் கோசலரும் கொங்கணரும்**
> **வச்சிரரும் காசியரும் மாகதரும்**
> **அருமணரும் சோனகரும் அவந்தியரும் முதலாய**
> **இருநிலமா முடிவேந்தர் இறைஞ்சிநின்று திறை''**

காட்டினர் என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலிருந்து கோசலர், கொங்கணர், மாகதர் என்பார்போல ஆரியர் என்பாரும் ஒரு தனி நாட்டவர் என்பது நன்கு விளங்கும். அம்மன்னனே அடுத்துப் பாண்டிய சிங்காதனம் ஏறிய மாறவர்மன் குலசேகரன் ஆட்சிக் காலத்திலே ஆரியச் சக்கரவர்த்தி என்பான் ஒருவன் மன்னனுக்கு மந்திரியாகவும் படைத் தலேவனுகவும் இருந்திருக்கிறன். அவன் முழுப் பெயர் மதிதுங்கன் தனி நின்று வென்ற பெருமாளாகிய ஆரியச் சக்கரவர்த்தி என்பதாகும். அவன் பாண்டி மண்டலத்துச் செவ்வக்கரை நாட்டுச் சக்கரவர்த்தி கல்லூர் என்னும் ஊரைச் சேர்ந்தவன். அவன் அரசனுக்காக இலங்கையின்மீதும் படை நடத்திச்சென்று வெற்றி கொண்டிருக்கிறன். இலங்கைச் சரித்திரமான மஹா வமிசத்தில் அது பின்வருமாறு வருணிக்கப் பட்டுள்ளது. "பிறகு (இலங்கை) நாட்டிலே கொடிய பஞ்சம் ஏற்பட்டது. பிறகு பாண்டிய ராஜ்யத்தை ஆண்ட பஞ்சவர் (ஐவர்) திறமையும் செல்வாக்கும் மிகுந்த மஹாமந்திரி ஒருவன் தலேமையில் பெரிய சேனே ஒன்றை அனுப்பிவைத்தார்கள். அவன் ஆரியன் அல்லன் ஆயினும், தமிழர்களிலே முக்கியமான அவனுக்கு ஆரிய சக்கரவர்த்தி என்று பெயர்.'' பின்னல் இலங்கையின் வட பகுதியான யாழ்ப்பாணத்தில் 'ஆரிய சக்கரவர்த்தி' என்ற பட்டம் தாங்கி தமிழ் மன்னர்கள் ஆண்டிருக்கிருர்கள். அவர்கள் இவன் வழி வந்தவர்களே போலும். ஆரிய சக்கரவர்த்தியைப் போலவே அந்நாளில் பாண்டி நாட்டுப் பகுதியிலே

மாளவச் சக்கரவர்த்தி என்பானும் சாமந்தனுக இருந்திருக்கிருன். ஆரிய சக்கரவர்த்தி, மாளவ சக்கரவர்த்தி என்பார் அந்தந்த அரசுக்கு உரிமை பெற்றிருந்தும் பதவியை இழந்ததாலோ வேறு காரணத்தாலோ தமிழ் நாட்டில் வந்து தங்கியவர்களுடைய வழி வந்தவர்கள் என்றும், அவர்கள் தங்கள் பெருமைக்கேற்பக் குறுநில மன்னர்களாகவும் அரசாங்க அதிகாரிகளாகவும் வாழ்ந்து வந்தனர் என்றும் கொள்ளலாம்.

இன்னும் 'வட வாரியர்' என்னும் சொல்லைக்கொண்டு தமிழ்நாட்டின் வடக்கில் மட்டும் அல்லாமல் வேறு திசைகளிலும் ஆரியர் வாழ்ந்து வந்தனர் என்றும் கொள்ளலாம். உண்மையில் திவாந்தரப் பிரதேசத்திலும் ஆரிய தேசம் என்று ஒரு பகுதிக்குப் பெயர் வழங்கி வந்ததாகத் தெரிகிறது. நம் நாட்டிலிருந்து கடல் கடந்து திவாந்தரப் பிரதேசங்களுக்குச் சென்றவர்கள் அங்கேயும், மாளவம், சம்பா, காம்போஜம், துவராபதி, ஸ்ரீக்ஷேத்திரம் என்பனபோன்ற பெயர்களைப் பிரதேசங்களுக்கு வழங்கியிருக்கிருர்கள். ஆரியதேசம் என்பதும் அப்படிப்பட்டவற்றுள் ஒன்று போலும். இலங்கைச் சரித்திரமான மஹாவமிசத்திலும் ஆரிய தேசத்தைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டின் ஆரம்ப காலத்தில், அதாவது தமிழ் நாட்டை ஆண்டுவந்த முதற் குலோத்துங்க சோழனுடைய ஆட்சிக் காலத்தின் இறுதி நாளில் இலங்கையை ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்து ஆண்ட விஜயபாஹு என்பான் இறந்தான். அதன்மேல் சிங்காதனத்துக்காக அவன் மகன் விக்கிரமபாஹு, இறந்தவன் தம்பியான ஜயபாஹு ஆகிய இருவருக்கிடையில் பெரும்போர் மூண்டது. அந்தச்சமயம் வீரதேவன் என்பானும் தன் படைகளோடு இலங்கைக்கு வந்து போர் புரிந்திருக்கிருன். மஹாவமிசத்திலே அவன் ஆர்ய தேசிகன் (அதாவது ஆர்யதேசத்து ஈசன் அல்லது அரசன்) என்றும், பலந்திபம் என்னும் பிரதேசத்தின் ஏக சத்திராதிபதி என்றும் விவரிக்கப்பட்டிருக்கிருன். பலந்திபம் என்று பாளி மொழியில் உள்ளது, பழந்திவு என்பதன் வேறு வடிவமே. சோழ மன்னர்களான முதலாம் இராஜ ராஜனும் அவன் மகன் முதலாம் இரா ஜேந்திரனும், அந்தப் பிரதேசத்தை வெற்றிகொண்டிருக்கிருர்கள். இராஜ ராஜனுடைய மெய்க்கீர்த்தியில் 'முன்னீர்ப் பழந்திவு பன்னீராயிரம்' என்றும், அவன் மகனுடைய மெய்க்கீர்த்தியிலே 'சங்கதிர் வேலைத் தொல்பெருங்காவல் பல்படிந்திவு' என்றும் அந்தப் பிரதேசம் குறிக்கப் பெற்றுள்ளது. முன்னுளிலே கொடுந்தமிழ் பேசப்பட்டு வந்த பிரதேசங்களைத் தொகுத்துக் கூறும் பழம் பாடல் ஒன்று நன்னூல் மயிலைநாதர் உரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. அதிலே இந்தப்பிரதேசம் 'கன்னித் தென்கரைக்கட் பழந்திவம்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதை மால்திவ் என்னும் மலையத் திவுகளாக ஆராய்ச்சியாளர்களில் சிலர் கருதுவர். அது சரியல்ல ஜாவா, சுமத்திரா முதலிய கிழக்கிந்தியத் திவுகளின் கூட்டத்தையே அது குறிக்கும். ஜாவாவில் ஆண்ட அரசர்களிலும் சிலர் ஆரியதேசத்தை வென்றதாகவும், ஆரிய நாட்டோடு தொடர்பு கொண்டிருந்ததாகவும் கூறிக் கொள்கிருர்கள். கி. பி. பதினேரும் நூற்ருண்டின் முற்பகுதியிலே ஜாவாவை ஆண்டு வந்த (Air-Langa) ஐர்லங்கன் அல்லது ஏர் லங்கன் என்பான், சம்பா கமிர் அல்லது காம்போஜம், ஆர்யம், ரெமன் அதாவது அருமனம் என்னும் ராமஞ்ஞ தேசம் முதலியவற்றை வெற்றி கொண்டதாகப் புகழப்பட்டிருக்கிருன். இவ்விடம் குறிக்கப்பட்ட நாடுகள் எல்லாம் திபாந்தர பிரதேசத்தில் உள்ளவை. கி. பி. பதிநான்காம் நூற்ருண்டில் சுமத்திராத் திவில் மலையூர் நாட்டு அரசனிடம் மந்திரியாக இருந்தவனும் ராஜபத்னியின் உறவினனுமான ஆதித்திய வர்மதேவன் என்பான் தன்னை ஆரிய வம்சாதி ராஜன் என்று கூறிக்கொள்கிருன். அவன் பெயர் விருத்த மந்திரி ஆர்ய தேவராஜ ஸ்ரீ ஆதித்தியன் என்று வேருெரு கல்வெட்டில் காணப்

படுகிறது. அவனும் ஆரிய நாட்டு அரச பரம்பரையைச் சேர்ந்தவன் என்பது நன்கு விளங்கும்.

இவற்ருல் திவாந்தரப் பிரதேசத்திலும் ஆர்யதேசம் என்ற பெயர் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்கு வழங்கப்பட்டு வந்தது என்று தெரிகிறது.

அவ்விதமாஞல் குறிஞ்சிப் பாட்டை இயற்றிக் கபிலர் தமிழ் அறிவித்த ஆரிய அரசன் பிரகத்தன் எந்தப் பகுதியைச் சேர்ந்தவன் என்னும் சந்தேகம் ஏற்படுகிறது இயற்கையே.

பிரகத்தன் என்ற பெயர் இராமாயணத்திலே இராவணனுடைய முக்கிய படைத்தலைவன் பெயராக வருகிறது. முன்னளிலே வால்மீகி ராமாயணம் திவாந்தரப் பிரதேசங்களிலே பெரிதும் போற்றப்பட்டு வந்திருக்கிறது. வால்மீகி முனிவருக்கு அங்கே கோயிலும் இருந்திருக்கிறது. பிரகத்தன் போன்ற பெயர்களும் அங்கே பிரபலம்.

திவாந்திரப் பிரதேசத்திலே இந்தியா நாகரிகம் பரவியிருந்த நாடுகளைப் பற்றிச் சீன தேசத்துச் சரித்திரங்களிலே பல இடங்களில் விவரங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் கி. பி. ஆரும் நூற்ருண்டின் முற்பகுதியில் சீனவை ஆண்ட லியாங் (Liang) வமிசத்தின் வரலாற்றைக் கூறும் நூலில் லங்-கா-ஸு (Lang-Ga-Su) என்னும் நாட்டைப்பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''அந்நாட்டு மக்கள் தங்கள் ராஜ்யம் நானூறு ஆண்டுகளுக்கும் முன்னதாக நிறுவப்பட்டது என்று சொல்லுகிருர்கள். பின்னல் வந்த அரசர்களின் ஆட்சியிலே அது வலிமையை இழந்துவிட்டது. அரசனுடைய உறவினர்களுள் ஒருவன் நல்ல சாமார்த்திய சாலியாகவும் சிறந்தவனுகவும் இருந்தான். அதனல் நாட்டு மக்கள் அவனைப் பெரிதும் போற்றினுர்கள். அதைக்கேட்ட அரசன் அவனைச் சிறையிலிட்டான்; எனினும் விலங்குகள் அவைகளாகவே தெறித்துவிட்டன. அதன்மீது அரசன் அவனிடம் ஏதோ சக்தி இருக்கிறதென்று எண்ணி அவனைத் துன்புறுத்தத் துணியவில்லை; ஆயினும் அவனைத் தன் தேசத்தினின்றும் துரத்திவிட்டான். நாடு துறந்த அரசகுமாரன் இந்தியாவைப் புகலிடமாகக்கொண்டு அங்கே சென்று அந்த நாட்டு அரசனுடைய மூத்த குமாரியை மணந்து அவ்விடத்திலே தங்கிவிட்டான். அப்பால், லங்-கா-ஸு நாட்டு அரசன் திடீரென்று இறந்துவிடவே, பிரதான அதிகாரிகள் அந்த ராஜகுமாரனைத் திரும்பவும் அழைத்துவந்து அரசனுக முடி சூட்டினுர்கள். அவன் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டபிறகு இறந்து போனுன். அவனுக்குப் பின் அவன் மகன் ப-க-த-தொ (pa-ka-da-to) என்பவன் சிங்காதனம் ஏறினுன். கி. பி. 515 ஆம் ஆண்டில் அவன் சீன தேசத்துச் சக்கரவர்த்திக்கு அச்சுதன் (A-cha-to) என்ற தூதுவனை ஒரு கடிதத்துடன் அனுப்பினுன்.''

அந்தக் கடிதம் சீன மொழியிலே பெயர்க்கப்பட்டு அந்நாட்டுச் சரித்திர நூலில் காணப்படுகிறது. அதிலே அவனுடைய நாட்டிலே ஸம்ஸ்கிருத மொழி பெரு வழக்கிலிருந்ததென்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைக் கவனிக்கும்போது அவனுடைய நாட்டிலே நம் நாட்டுக் கலாசாரம் நன்று பரவியிருந்ததென்பது விளங்கும்.

இவன் பெயரைப் பகத்தன் அல்லது பிரகத்தன் என்று சொல்லலாம். லங்-கா.ஸு என்று சீன சரித்திரத்திலே குறிக்கப்பட்டிருப்பது இலங்கா சோகம் என்று தமிழ்க் கல் வெட்டுக்களில் குறிக்கப்படுவதாகும். முதலாம் இராஜேந்திர சோழன் கடாரத்தின் மீது படையெடுத்துச்சென்ற காலத்தில் அதை வெற்றி கொண்டிருக்கிருன். அது மலாய் நாட்டில் ஒரு பகுதியாகவே இருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவர்.

அப்படியானால் சீன சரித்திரத்தில் காணும் பிரகத்தனே தமிழ்ப் புலவர் கபிலருடைய மாணவனாக இருக்க முடியுமா ?

சங்க இலக்கியத்திலே ஆரிய மன்னர் பொதுவாகப் பல இடங்களில் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயினும் அவர்களில் இருவரே பெயர் குறிக்கப்பெற்றவர். யாழ் பிரமதத்தன் ஒருவன். அவன் பெயரைக் கொண்டே அவன் யாழ்வாசிப்பதில் வல்லவன் என்பது விளங்கும். அவன் ஒரு புலவனும் ஆவன். அவன் பாடியதாகக் குறுந்தொகையிலே ஒரு பாடல் காணப்படுகிறது. மற்றவன் கபிலரால் பாடப்பெற்ற பிரகத்தன். அவர்கள் இருவருமே தமிழ் நாட்டில் நீண்டகாலம் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. இவற்றைக் கவனித்தால் சீன சரித்திர நூல்களில் குறிக்கப்பட்டவர் இவ்விருவருமே என்று எண்ணத் தோன்றுகிறது.

யாழ் பிரமதத்தனே காடு கடத்தப்பட்ட இலங்கர் சேரகத்து இராஜ குமாரன் என்றும், அவன் பாண்டிய நாட்டை அடைந்து அவ்விடம் தங்கி பாண்டியன் மகளை மணந்து பெற்ற மகனே பிரகத்தன் என்றும் கொள்ளலாம். அந்தப் பிரகத்தனுக்குத் தமிழ் கற்பிக்கவே கபிலர் குறிஞ்சிப்பாட்டைப் பாடினார் போலும்.

குறிஞ்சிப் பாட்டிலே பாட்டுடைத் தலைவனைப்பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. எனினும் அதன் கடைசியில் சேர்த்துள்ள வெண்பாவிலே அவன் 'மலைநாடன்' அதாவது மலைநாட்டுக்கு அரசன் என்றும் குறிக்கப் பெற்றிருக்கிறான். மலாயா நாடே மலைநாடு என்பதன் திரிபே. இன்றைக்கும் அதை மலைநாடு என்றே தமிழர் வழங்குவார். இதுவும் மேற் கண்டதை வலியுறுத்துவதாகவே கொள்ளலாம்.

SRI GANESHRAM'S 777 BRAND FOOD PRODUCTS · MADRAS·1·S·INDIA

மூன்றே நிமிஷத்திலா ?

ஆம் !

திடீர் இட்லி

திடீர் தோசை

திடீர் போண்டா

திடீர் தக்காளி சாம்பார்

திடீர் தக்காளி ரசம்

ஸ்ரீகணேஷ்ராம் & கோ., சென்னை—1.

வாசகர்களே !

உங்கள் வாழ்க்கையின் சமீப எதிர்காலத்தைப் பற்றி இரண்டு கேள்விகளுக்கு நமது "கணபதி" ஜோஸ்யர் இனமாகப் பதில் தருகிறார்.

இதோ, மேலிருக்கும் "ஸ்ரீ மகா கணபதி" மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தி. உச்சிஷ்ட மகா கணபதியாகும். இவரை ஆராதித்து உபாஸனை செய்துவரும் நமது "கணபதி ஜோஸ்ய"ரின் வாக்கு மிகவும் பலிதமாகவே இருக்கிறதென்று அனைவரும் அனுபவத்தில் கூறுகிறார்கள். ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ள வாசகர்கள் மட்டும் கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து தனித்தாளில் கேள்விகளையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். ஜாதகம் இருந்தால் அவசியம் அனுப்பி வைக்கவும். கூப்பன் இல்லாது வரும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. அந்தந்த மாதக் கூப்பனை பூர்த்தி செய்து பிரதி மாதம் 30-ம் தேதிக்குள் அனுப்பிவிடவேண்டும். பின்னர்வரும் கூப்பன் கவனிக்கப்படமாட்டாது.

—ஆசிரியர்,

இங்கே கூப்பனைக் கத்தரிக்கவும்.

1960 ஏப்ரல் மாதக் கூப்பன்

என் சமீப, எதிர் காலத்திய 2 கேள்விகளைத் தனித்தாளில் எழுதி இத்துடன் வைத்துள்ளேன்.

என் பெயர் ........................................

தற்போதைய விலாசம் ........................................

உத்தியோகம் ........................................

கேள்விகள் எழுதின தேதி ........................................

,, ,, நேரம் ........................................

நான் விரும்பும் புஷ்பம் ........................................

108-க்குள் நான் கூறும் எண் ........................................

(நக்ஷத்திரம் தெரிந்தால்) ........................................

என் பிறந்த நக்ஷத்திரம் ........................................

என் தற்போதைய வயது ........................................—

கூப்பன் அனுப்ப வேண்டிய விலாசம் :

**கணபதி ஜோஸ்யர், c/o "மாலா"**

சதர்ன் அவின்யு, ஆழ்வார்பேட்டை, மதராஸ்-18.

# சார்வரி வருஷ ராசி பலன்

(கணபதி ஜோஸ்யர்: 18. ப்ராம்மணத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15)

**மேஷ ராசி :** அசுவதி பரணி கார்த்திகை 1ம் பாதம் கண்ணிழந்தவன் கண்ணைப்பெற்றது போலும், தவறித் தரையையடைந்த மீன் தெய்வானுகூலத்தால் தண்ணீரில் திரும்ப துள்ளி விழுந்து புனர்ஜன்மம் பெற்றது போலும் ஆனி ஆவணி புரட்டாசி தை மாசி மாதங்களில் நன்மையும் மேன்மையும் எதிர்பார்க்கலாம். தேக சுகமுண்டு. உத்யோகம் இதர தொழில் விருத்தியடைய வ்யாபாரம் வலுவடையும் கார்யத்தில் சித்தி. விவகாரத்தில் வெற்றி. விவாஹம் நடைபெறும். தாமதம், எதிர்ப்பு, ஏமாற்றம் இனி இராது. உதவி பெற்று; பதவி பெற்று உற்சாகமாயிருக்க நேரும். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரிமூலம் நன்மையுண்டு. அரசாங்க பிரைஸ் பாண்டு வாங்கலாம். நன்றே. ஏஜென்ஸி கண்ட்ராக்ட் மூலம் லாபம். முடங்கிய தனம் பெறலாம். மேல் படிப்பு வரும். போட்டி பரீக்ஷை தேறும். வெளிநாடுகள் செல்ல நேரும். மாசி மாதம் வாங்கலாம் காரும். தம்பி தங்கைக்கு மணம் புரிய நேரும். புத்ரர்களின் முன்னேற்றத்தால் மேலும் சந்தோஷமதிகம். மனைவிக்கு இவ்வாண்டு சிறு பிரயாணங்களதிகம் செய்ய நேரும். பிதாவுக்கு ஓரளவே சுப பலன். தமயனும் நண்பரும் எதிர்பாராத லாபமும் யத்தன பலிதமும் பெற்று மகிழ்வார்.

**ரிஷப ராசி :** கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் ரோஹிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் கண்ணில் காட்ராக்ட் வளர்ந்து வர, பார்வை குறைய, வேதனையுடன் கண் சிகிச்சை செய்பவரை அணுக, மேலும் சில மாதங்கள் கழிந்த பின்பே, சிகிச்சை செய்யலாம். பூர்ண குணமுண்டு என்று சொல்வது போல இந்த ராசிக்காரர்களுக்கு வருகிற பங்குனி மாதம் முதலே நன்று. அதுவரை எக்கார்யத்திலும் எச்சரிக்கையுடனிருக்கவும். தன் செய்கையாலேயே தீங்கை வரவழைத்துக் கொள்ளக்கூடாது. சுகாதாரத்தை கவனித்து வரவும். தொத்து வியாதி வராமல், தடுக்கும் மருந்துகளை தக்க காலத்தில் எடுத்துக்கொள்வது நன்று. மேலதிகாரியை எதிர்க்காமலும், யாவரையும் பகைக்காமலும். கோபத்தை அறவே விட்டு, நயத்துடன் காலம் தள்ளி வரின் வருஷ முடிவில் ஜயத்தையடையலாம். விவாஹம் தடை படலாம். விவகாரம் நீடிக்கலாம். மனைவி மதிக்காமல் மறுத்துப் பேசலாம். புத்ரர்கள் படித்த வகுப்பிலேயே மறுமுறையும் படிக்க நேரம். பிதா வெளிநாடு செல்லவும், அலைச்சலாலும், அலுப்பாலும் தேக சுகம் பாதிக்கப்படலாம். தமயன் நண்பர்கள் கஷ்டப்படவே, தான் அவர்களுக்கு உதவ நேரும். தம்பி தங்கைகளுக்கு முயற்சியில் வெற்றி கிடைக்க தாமதம். இவ்வாண்டு எதிர்பாராத லாபம் இருக்க ந்யாயமில்லை.

**மிதுன ராசி :** மிருக சீரிஷம் 3,6 பாதங்கள். திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் கார்த்திகை மாதம் வரை மிக நன்று அப்பால் இவ்வாண்டில் நற்பலன் குறைவு. முதலில் தேக சுகமும், யத்தன பலிதமும், தாமதித்த தெல்லாம் ஜயமாக முடிவடையும். உத்யோகத்தில் பொறுப்பு மதிகமாக, மேற்பதவி பெறவும், தொழிலில் நூதன கூட்டாளி சேர, அரசாங்கத்திலிருந்து நற்செய்தியடைய-வ்யாபாரம் வலுவடையவும் முடங்கிய தனத்தை ஆவணி மாதம் பெறவும், விவாஹமே நடை

பெருமல் வேதனையடைந்தவர்களுக்கு இவ்வாண்டு இல்லற வாழ்க்கை யளிக்கவும், புத்ரரேயின்றி ஏங்கியவர்களில் பலருக்கு புத்ரப்ராப்தி உண்டாகவும், வரி மூலம் ஸ்ரமம் குறையவும், நூதன மனை வாங்கி அதில் வீடு கட்டவும், உறவினர்கள் மூலம் உதவி பெற்று இவ்வளவு நாட்களாக யோஜனை செய்தவைகளை, செய்ய ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தவும். மிக நன்று.

**கடக ராசி :** புனர்பூசம் 4ம் பாதம் பூசம். ஆயில்யம் இவ்வாண்டு முற்பகுதியில் நிம்மதியிராமல், யத்தனங்களில் பற்பல தடையிருக்க, மிகத் தாமதித்து மேலும் முயற்சி செய்ய நேரும். தேக சுகமும் ஓரளவு பாதிக்கப்படும். நீண்ட நோயால் பாடுபட்டவர்கள் சிகிச்சை யெடுத்துக் கொண்டு, நல்ல ஆரோக்யத்துடனிருக்க பிற்பகுதி நன்று. உத்யோகத்தில் ஜூன் அல்லது அக்டோபர் ஆரம்பத்தில் மேன்மையிருக்கலாம். சிலருக்கு இடப்பெயர்ச்சியிருக்கும். தொழில் செய்யும் ஸ்தலம் மாறவும், கூட்டாளி மாறவும் நேரும். மனஸ்தாபமும், விவகாரமும் இருக்க அனுவசிய செலவுகளும் எதிர்பார்க்கலாம். வ்யாபாரத்தில் முடங்கிய தனத்தை பெறலாம். இவ்வாண்டில் வ்யாபாரம் மந்தம். பழைய பாக்கி வசூல் ஜரூராக நடத்த சந்தர்ப்பமிருக்கிறது. ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி மூலம் விசேஷமாக சுப பலனிராது. விவாஹம் மே, ஜூன் மாதங்களில் நடைபெறலாம். ஜனன காலத்தில் மேஷம், சிம்மம், துலாம், விருச்சிகம், கும்பம் இவற்றில் குரு சனியிருக்க பிறந்தவர்களுக்கு இவ்வாண்டில் மிகச் சுப பலனே நடைபெறும். மற்றவர்களுக்குத் தான் மேற்கூறிய கலந்த பலன் எதிர்பார்க்கவும்.

**சிம்ம ராசி :** மகம் பூரம் உத்ரம் 1ம் பாதம். பல காலமாக கிணறு எடுக்க முயன்றவருக்கு, திடீரென தண்ணீர் தென்பட்டது மன்றி, ஆர்டீஸியன் கிணறுபோல் பாயவும் ஆரம்பிப்பதுபோல், இவ்வளவு காலம் வேதனையளித்து தாமதித்து வந்தவைகளெல்லாம் மிக திருப்திகரமாக கை கூடி வரும். தேக சுகமுண்டு, உத்யோகம் உயரும். அதிகாரியின் ஆதரவு அதிகம். தொழில் முன்னேற வ்யாபாரம் வலுவடையும். நூதன நண்பர் உதவி கிடைக்கும். ஸ்பெகுலேஷன் லாட்டரி முதலிய இனங்களில் விடா முயற்சி செய்துவரின் பலர் லாபமடைய முடியும். விவாஹம் நன்ருக நடைபெற, நிம்மதியும் உற்சாகமுமதிகம், விவகாரம் வெற்றிகரமாக முடிவடைய, எதிர்ப்பும் ஏமாற்றமும் இராது. புத்ரர்களுக்குப் போட்டி பரீக்ஷை தேற, நல்ல உத்யோகம் கிடைக்கும். மனைவிக்கு இவ்வாண்டு அதிருஷ்டம். அவர்கள் லாட்டரி முதலிய முயற்சி செய்யவும். உண்மையாக நற்பலனுண்டு.

**கன்னி ராசி :** உத்ரம் 2, 3, 4 பாதங்கள், ஹஸ்தம் சித்திரை 1,2 பாதங்கள், எக்கார்யத்திலும் எச்சரிகையுடனிருப்பது நன்று; அதிக நன்மை நடைபெறும் போலத் தோன்ற, ஓரளவே சுபபலனடையலாம். தேக சுகம் ஆனி, புரட்டாசி, ஐப்பசி மார்கழி பங்குனி மாதங்களில் பாதிக்கப்படும். உத்யோகத்தில் சிறு தொந்தரவுகளிருக்கக் கூடும். ஏமாற்றமுமிருக்கும், தொழிலில் மந்தமிருக்க, அரசாங்கம் மூலம் வரும் செய்திகளால் லாபம் குறையும். வரி மூலம் ஸ்ரமம் இருக்கலாம். போட்டியிட்டால் மதிப்பிற்கு அபாயம். யாவருடனும் பயமாக நடந்து கொள்வது நன்று. வ்யாபாரத்தில், சில விஷயங்களில்தான் லாபம், பெரும்பாலும் கையைப் பிடிக்கும். விவாஹம் தீர்மானிக்க தாமதம். மிகச்சிலருக்கே நடைபெறலாம். தம்பியின் மூலம் ஜூலை முதல் உதவியுண்டு. மாதாவிற்கு க்ஷேத்ராடனம். தேக சுகக்குறைவு. புத்ரர்கள் பிரிய நேரும். மனைவிக்கு யோஜனையும் ஆசையுமதிகமாகும். கை கூடி வர மிகத்தாமதம், குலுக்கு சீட்டு சேரின் வருஷ முடிவில் விழும். தை மாதம் முதல் மிக நன்று. அதுவரை பொறுமை தேவை.

**துலா ராசி :** சித்திரை 3, 4 பாதங்கள் சுவாதி விசாகம் 1, 2, 3 பாதங்கள் அதிக அலேச்சலும், அயலார் மூலம் அனுவசிய செலவும், விரோதமும் எதிர்ப்பாராத சிறு கஷ்டங்களும் அடிக்கடி யிருக்குமாதலால் ஓரளவு ஜாக்ரதையாகயிருப்பின், கஷ்டமும் நஷ்டமும் குறையும். தேக சுகம் வைகாசி, ஆடி, ஐப்பசி, தை மாதங்களில் பாதிக்கப்படும். இதர மாதங்களில் திருப்திகரமாக யிருக்கும். உத்யோகம் மாறும். அதிகாரி யும் மாறுவார். மனே வீடு வாங்க ஏற்பாடாகும். தொழில் மூலம் தனம் அதிகமாக முடங்கும். சேவகர்கள் ஒத்துழைப்பால் சற்று நன்று. வ்யா பாரம் சென்ற ஆண்டைவிட குறைவு. நண்பர் உதவியும் அதிகம் எதிர் பார்க்கலாகாது. விவாஹம் ஆவணியில் நடைபெறும். விவகாரம் வரா மல் தடுப்பது நன்று. ஆவணி, மார்கழி பங்குனி மாதங்களில் ஜயம் பெறலாம். ஏஜென்ஸி எடுக்கவும். லாபம் பெறுவீர். தாமத முண்டு. ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி எல்லாம் ஏமாற்றுமினங்களாகும். தம்பியும் மாதாவும் அடிக்கடி ப்ரயாணம் செய்ய, மனேவிக்கு நன்று. பிதாவிற்கும் சுகமுண்டு.

**விருச்சிக ராசி :** விசாகம் 4ம் பாதம் அனுஷம் கேட்டை சென்ற ஆண்டுபோல் கஷ்ட நஷ்டமோ, தேக சுகக் குறைவோ யிராதெனினும், அடை மழை ஒழிந்தும் தூர்வானம் போகவில்லே யென்பது போல் சமா ளிக்குமளவில் ஸ்ரமங்களிருக்கும். தனது கையே தன்னே குத்துவது போல், தானும் தனது உறவினருமே இவ்வாண்டில் தீய பலனுக்குக் காரணமாகும். ஜாக்ரதையாகயிருப்பின் துன்பம் வராமல் தடுக்கலாம். உத்யோகத்தில் ஆனி மாதம் கஷ்டம் நீங்கும். தை மாதம் முதல் மேன்மையுண்டு. தொழிலும் வ்யாபாரமும் நாளடைவில் விருத்தியடை யும். ஸ்பெகுலேஷன் லாட்டரி மூலம் வருஷ முடிவு நன்று. சித்திரை மாதமும் சுப பலனே. கண்ட்ராக்ட் எடுத்தால் முதலில் எதிர்பார்ப் பதற்கு மேல் அதிகமாக தனம் முடங்கி அப்பால் திருப்திகரமான லாபம் கிடைக்கும். பண நெருக்கடி நீடிக்கும். தம்பி தங்கை வெளியூர் செல்ல மாதா நூதன விலே உயர்ந்த பொருள்களேப் பெறவும், குழந்தைகள் திரும்ப அதே பரிக்ஷை போகவும், யத்தனம் பலிக்க இரு முறையாவது முயற்சி செய்யவும் நேரும். மனேவிக்கு மிக கஷ்டம். திருட்டால் நஷ்டம். பிதாவிற்கு எதிர்ப்பும் ஏமாற்றமும் இருக்கலாம்.

**தனுர் ராசி :** மூலம் பூராடம் உத்ராடம் 1ம் பாதம். சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் மேன்மையான பலன்கள் நடைபெறும். தேக சுகம் ஏற்பட்டுக்கொண்டு வரும். ஆடி. மார்கழி தை மாதங்களில் சற்று பாதிக்கப்படலாம். தனவசதியதிகமாகும். வைகாசி ஐப்பசி மாசி மாதங்களில் நூதன தொழில் ஏற்படவோ, உத்யோகம் கிடைக்கவோ, ப்ரமோஷன் பெறவோ நன்று. மேலதிகாரி நட்புண்டாக, சென்ற ஆண்டி லிருந்த ஸ்ரமங்கள் மறைய, உற்சாகத்துடன் உழைப்பீர். வ்யாபாரத்தில் அதிக தனம் போட்டு, சரக்குகளே சேமித்து ஆகஸ்டு மாதத்திற்கு மேல் நவம்பர் முடிவதற்குள் அதிக லாபம் பெறலாம். ஸ்பெகுலேஷன் லாட் டரி மூலம் கலந்த பலனே. திடீரென லாபம் எதிர்பார்க்க முடியாது. ஏஜென்ஸி காண்ட்ராக்ட் மூலம் லாபமே. முடங்கிய தனத்தைத் திரும்ப பெறலாகும். விவகாரம் வெற்றிகரமாக முடிவடைய பிற்பகுதியே நன்று. விவாஹம் வைகாசி அல்லது ஆவணியில் நடைபெறலாம். பரீக்ஷை தேறவும், மதிப்பிற்குரிய தொழில் பெறவும் இடம் மாறவும், நூதன மனே கட்டவும், விலேயுயர்ந்த ஆடை ஆபரணங்கள் வாங்கவும், மாடு முதலி யன சேர்க்கவும் எதிர்பார்க்கலாம், ஸஹோதரர்களுக்கும் மனேவிக்கும் உத்தம சுப பலன். கார்யசித்தி தன லாபம். இதர உறவினர்களுக்கு மத்திம பலனே.

**மகர ராசி :** உத்ராடம் 2.3.4 பாதங்கள். திருவோணம். அவிட் டம் 1,2 பாதங்கள். தேக சுகம் திருப்திகரமாகவே யிருக்கும். மார்கழி

தை மாதங்களில் சுகாதாரத்தைக் கவனித்துவரின் நோயால் வருந்த வேண்டாம். அலைச்சலும் அதிக உழைப்பும் அதற்கேற்ப லாபமும் உண்டு. ஆனால் வ்ரயமும் கட்டுக் கடங்காமலிருக்கும். தனம் சேர்க்க முடியாது. உத்யோகத்தில் மாறுதல் இருக்கலாம். நூதன தொழில் ஆரம்பிக்கவும், நூதன கூட்டாளி சேரவும், பழைய சம்பந்தம் முடியவும் வைகாசி ஆனி ஐப்பசி கார்த்திகை பங்குனி மாதங்கள் நன்று. வ்யாபாரம் வலுவடையும். தலை மறைவாய் சிலர் திங்கிழைக்க சிலர் முயன்றாலும், எதிரிகளின் சூழ்ச்சி பலிக்காமல், தெய்வானுகூலத்தால் ஜாதகன் கஷ்ட நஷ்டமின்றி தப்பிவிட முடியும். எதிர்ப்பும் ஏமாற்றமும் குறைவு. லாட்டரி ஸ்பெகுலேஷன் மூலம் அதிக லாபமிராது. ஏஜென்ஸி காண்ட்ராக்ட் எடுத்துவரின் நாளடைவில் தனவிருத்தி யுண்டு. பூராடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது யத்தன பலிதமதிகம். விவகாரம் வெற்றிகரமாக முடியும். விவாஹம் வைகாசியிலேயே நடைபெறும். சிலருக்கு பங்குனி மாதம் நடைபெறலாம். மனை வாங்க ஆவணி மாதம் நன்று. தம்பிக்கும் பிதாவிற்கும் தாமதமும் மனவேதனையும் இருக்க, தாய்க்கும், தமயனுக்கும் அதிக சுபபலன் நடைபெற, மனைவிக்கு வரவும் சிலவுமதிகமாகி கலந்த பலனே எதிர்பார்க்கலாம். புத்ரர்களுக்குப் புது வாழ்க்கையுண்டாகும்.

கும்ப ராசி : அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதங்கள் மேஷ ராசியைவிட மேலும் பன்மடங்கு நற்பலனடைவீர். ஏமாற்றமோ, எதிர்ப்போ இவ்வாண்டிவிராது. அதிக லாபமும் எதிர்பாராத வெற்றியும், தன வரவும் கார்ய சித்தியும் உற்சாகத்தையளிக்கும். பல வருஷகாலமாக உத்யோக உயர்வின்றி ஸ்ரமப்பட்டவர்கள் யாவருக்கும் இவ்வாண்டில் மேன்மையும் சம்பளம் அதிகமாவதும் நிச்சயம். சில ஆண்டுகளாக மூடிவைத்த தொழிலை திரும்ப ஆரம்பித்து திருப்திகரமான லாபம் பெறலாம். வ்யாபாரம் வலுவடையும் நூதன நண்பர்கள் உதவி பெற்று, விளம்பரத்தால் விருத்தியுண்டு. விவகாரம் வெற்றிகரமாக முடிய விவாஹம் விரைவில் நடைபெற, தாமதம் ஒழிய உற்சாகமதிகமாகும். ஸ்பெகுலேஷன் லாட்டரி மூலம் எதிர்பாராத மிகுந்த லாபம் இவ்வாண்டில் அடையும் ராசிக்காரர்கள் இவர்களே. மார்கழி மாதம் மிக நன்று. தம்பி புத்ரர் மனைவி யாவருக்குமே கார்ய சித்தியும் தனப் பெருக்கும் நூதன பொருள் சேர்க்கையும் விவாஹமும், புத்ரப்ராப்தியுமுண்டு. புத்துயிர் அளிக்கும் ஆண்டு.

மீன ராசி : பூரட்டாதி 4ம் பாதம், உத்ரட்டாதி, ரேவதி. ஆரம்பமும், முடிவும் இவர்களுக்கு ஓரளவு நன்று. என்றாலும், மொத்தத்தில் தடையும் தாமதமும் தேக சுகக்குறைவும், தனம் முடங்குவதும், உறவினரும் உதவிக்கு நாடிவர இவ்வாண்டு மத்திம பலனே. நீண்ட நோயால் வருந்துபவர், சிகிச்சை செய்து கொள்ள ஆஸ்பத்திரி போக நேரும். திடீரென சிறு தொல்லைகள் அதிகம் வரக்கூடும். குடியிருக்கும் வீட்டுக்காரர் தொந்தரவுமதிகம். உத்யோகத்தில் மேலதிகாரி நட்பு குறைய, சேவகர்கள் ஒத்துழைப்புமிராது. நூதன தொழில் ஆரம்பிப்பது உசிதமல்ல, செய் தொழிலிலும் ஸ்ரமங்கள் தோன்றும். வ்யாபாரத்தில் நஷ்டமுண்டாக ந்யாய முண்டு. கூட்டாளி பகைக்கவும், சிலர் ஏமாற்றமடையவும். விவகாரம் துடங்கவும் நேரும். விவாஹம் நடைபெற்றாலும் உற்சாகத்திற்கு தை மாதம் வரை பொறுமை வேண்டும். 1960 நல்ல பலனளிக்காவிட்டாலும் 1961 ஜனவரி முதல் எதிர்பாராத லாபமும். திடீரென நல்ல காலம் திரும்பி விட்டது என்பது போல் மேன்மேல் அடுத்து அடுத்து அதிக மேன்மையும் நன்மையும் உண்டு. கஷ்டம் தீரும். மாதா பிதாவிற்கு நன்று. இதர உறவினர்களுக்குத் தன்னைப் போலவே தை மாதம் முதல் யத்தன பலிதம். எண்ணியபடி லாபம், சுகமுண்டு.

# கேள்விகளுக்குப் பதில்

கணபதி ஜோஸ்யர்

எஸ். சுந்தரம், மதருஸ்-5.

பூரட்டாதி. சுக்ரதசை செவ்வாய் புக்தி ஆரம்பித்ததும் நிதி நிலை கடனின்றி கவலையின்றி திருப்திகரமாயிருக்கும்.

கமல்,

உலகில் நடைபெறுவன யாவும் நம்மிஷ்டப்படியே நடைபெற நாம் பெரும் பாக்யம் செய்திருக்க வேண்டும். செய்துள்ளோமா இல்லையா என ஜாதகம் ஒன்றுதான் வெளிப்படுத்தும். உனக்கும் நன்னுள் வந்துவிட்டது. வைகாசிமாதம் நிச்சயமாகி ஆனி மாதம் முதல் வாரம், மனதிற்கிசைந்த குணசீலனுடன் மணம் புரிய நேரும். கவலை வேண்டாம். மஹாலெக்ஷ்மி ஸ்தோத்ரத்தை மே மாதம் முதல் தேதி முதல் தொடர்ந்து படித்துவரின் ஒரு மண்டலத்திலேயே ஸகல ஸௌபாக்ய முண்டு என்பதை தீர்மானமாக நம்பி செய்து வரவும்

தர்மலிங்கம், சூரமங்கலம்.

சைக்கில் வாடகை கடை வைத்து லாபமடைவீர். வ்யாபாரம் நன்று. ஜூன் மாதம் ஆரம்பிக்கவும்.

வேலன் துணை.

நடப்பது தவருன மார்க்கம். காலம் சரியாகயில்லை. 1961 மே முதல் ஸகல சுகமும் தர்ம வழியிலிருக்கும்.

சரோஜா வில்லிவாக்கம்.

உமது கேள்விகளைக் காணேம். நேரே எழுதி பதிலைப்பெறலாம்.

கார்த்திகேயா, சேலம் 1

1961 ல் எம். ஏ. படிப்பீர். ஓராண்டில் விவாஹமும் நடைபெறும். மனைவி அந்தஸ்து உள்ள குடும்பத்தில் தனவசதியுடன் கூடிய குணவதி. நல்ல அழகுடன் அமைவாள். உமது முன் கோபம் மணமானது முதல் இராது.

சீனிவாசன் கல்யாணபுரம்,

உபாத்யாயர் தொழில் நிரந்தரமாக யிருக்கும். மறைபொருள் கிடைத்து திடீரென தன லாப மேற்பட ஜாதகத்தைப் பார்க்க வேண்டும். நம்பர் 64 ஐக்கொண்டு பார்த்தால். உமக்கு ஏமாற்றமுண்டு என புலப்படுகிறது.

ராமன். ராயப்பேட்டை

பரீக்ஷை பாஸ். அக்காவிற்கு அடுத்த ஆண்டில் ஆனி மாதம் விவாஹம்.

கந்தசாமி, பொள்ளாச்சி

சிறு பதில்கள் அளிக்குமாறு கேள்விகள் கேட்டால் 4,5 வரியில் பதில்கொடுக்கலாம் எதிர்காலபலனென்ன ? என்று வினவினுல் எப்படி சுருக்கமாகக் கூற முடியும். தனிப்பட பதில் பெறலாம்.

நடராஜன் தாவங்கிர்,

பரீக்ஷை தேறும். பரிசும் உண்டு.

ஜெ. ஜெ. ரெட்டி திருப்பதி

படிப்பீர். முதல் முயற்சியில் வெற்றியுண்டு. கிரக நிலை நன்றுகயிருக்கிறது.

K. Chellam. Previous letter is not received. What are your questions ?

எஸ். சாமி அதிராமபட்டிணம்

1964ம் ஆண்டு முதலே பணக்காரனுகலாம். 1971ம் ஆண்டு மே மாதம் 9 தேதி வரை ஆயுள் நிச்சயம்.

சாந்தா. மேற்கு மாம்பலம்

வியாதியே இதரர் செய்வினையல்ல. தானே சென்ற ஜன்மத்தில் செய்தவினையின் பலனே. உமது நக்ஷத்திரம் ஹஸ்தம். ராசி கன்னி.

சீனிவாசன், திண்டுக்கல்

மூலம்-மேலும் 14 மாதங்களில் மணம் புரிவீர். ஸ்ரீமந்தம் நடைபெறுவதும் ப்ரமோஷனும் ஒத்துவரும்.

திருஞானசம்பந்தன்.

பெருத்தலையூர்.

அடுத்த ஆண்டில் வைகாசி மாதம் விவாஹம். ஆடி மாதம் இடம் மாறும்.

சேக் அப்துல்லா, திண்டுக்கல்
நவம்பர் மாதம் நிரந்தர தொழில் ஏற்பட நிம்மதியும் உண்டு.

சந்திரன், ராயபுரம்
புனர் பூசம். ஆடி மாதம் 8ம்தேதி வேலை கிடைக்கும். 1961 பங்குனியில் விவாஹம்.

திருமலாச்சாரி, கடலூர்
10 மாதத்தில் விவாஹம் நடைபெறும். ப்ரயாணம் கை கூட மிகவும் தாமதமிருக்கிறது.

சுந்தரம், கொல்லம்.
அய்யப்பனை வணங்கி வாரும். ஸ்ரத்தை குறைந்து வருகிறது. இனி வ்யாபாரம் ஓங்கும் வில்லங்கமின்றி சொத்து கிடைக்கும்.

சின்னசாமி, திண்டுக்கல்.
ஜூலையில் இடம் மாறும் மேல் படிப்பு படிக்க மேலும் ஈராண்டு கழியவேண்டும்.

## தாயும்—சேயும்

படம்: புஷ்பத்துறை சுப்ரமணியம்.

ஜெபமணி செல்வராஜ்,
நாகர்கோவில்
1962 ஜனவரியில் வேலைமாறும். அப்பொழுதே விவாஹம். நெருங்கிய உறவில்லை. ஆனால் மனதை மயக்கும் மங்கையையே மணப்பீர்.

சம்பந்தம், குண்டக்கல்
1960ம்ஆண்டு நல்லதல்ல. சாமர்த்தியமாயிருந்து வருவீர். 1961 முதல் மிக நன்று. குணமும் தனமும் மிகுந்த பெண்ணை ஓராண்டில் மணப்பீர்.

சம்பத்குமார், பொம்மிடி
ஜாதகத்தை கணித்து, 4 மணி நேரம் பாடுபடின் உமது கேள்விகளுக்குப் பதிலளிக்கலாம் ஒருவர் இவ்வளவு எதிர்ப்பார்த்தால், பலருக்குப் பதிலளிக்க முடியாமல் போய் விடும். நேராக, ஜாதகத்தையனுப்பி கேட்டுக்கொள்ளலாம்.

ராஜகோபால், கோயம்பத்தூர்
1963ம் ஆண்டு சித்திரை மாதம் விவாஹம் நடைபெறும். ருக்மணி என்ற பெயரிருக்கும். தென்மேற்கு திக்கில் இருக்கிருள். இப்பொழுது நீரறிய முடியாது.

பார்வதி மைலாப்பூர்.
கூறிய எண் 64. காதல் கைகூடும். மேலும் 27 மாதங்கள் கழித்தே மணம் புரிவீர்.

ரங்கநாயகி அம்மாள் செம்பூர்.
சித்திரை. பெண் மகம். 1961 ஜூன் விவாஹம் வாழ்க்கையில் சுகமே.

ராகவன் கோபிசெட்டிபாளையம்,
மார்கழி மாதம் மனதிற்கிசைந்த மனைவியை அடைவீர். ஆகஸ்ட் மாதம் உத்யோக உயர்விருக்கலாம்.

கதிர்வேல் சிந்தாதரிப்பேட்டை
உமக்கு ஆறுமாதத்தில் சம்பளம் உயரும். குழந்தைகள் மொத்தம் ஆறு.

கோவிந்தராவ், வில்லிவாக்கம்
ஆண் பிறக்கும்! அன்று முதலே நன்று.

# விட்லோ மாவு மூலம்

## ஊறவைத்து அரைக்காமல், துரிதமாக எளிதில் இட்லிகளை தயாரிக்கலாம்

'பாலிதீன்' பாக்கெட்டுகளில் கிடைக்கும் 'விட்லோ' மாவை வாங்குங்கள்.

$1\frac{1}{2}$ மடங்கு தண்ணீரை கலந்து ஒரு இரவு முழுவதும் புளிக்க வையுங்கள்.

மறுநாள் காலையில் ஆவியில் வேக வையுங்கள்.

ருசியான இட்லியை சுடச் சுட பரிமாறுங்கள்.

'விட்லோ' மாவில் தேவையான அளவு உப்பு கலந்துள்ளோம். காஞ்சீபுரம் இட்லி போன்ற வாசனைப் பொருள் கலந்த இட்லிகளை தயாரிக்க அதற்கு வேண்டிய மிளகு, சீரகம் போன்றவைகளையும் இந்த மாவுடன் கலக்கலாம்: 'விட்லோ' மாவை ஒரு சில முறை உபயோகித்தால், புளிக்க வைப்பதற்கும், வேக வைப்பதற்கும் எவ்வளவு நேரம் பிடிக்குமென்பதை நீங்கள் அறியலாம். பெரிய பலசரக்கு கடைகளில் 500, 250 கிராம் பாக்கெட்டுகளில் கிடைக்கும். இன்றே ஒரு பாக்கெட் வாங்குங்கள்.

தயாரிப்பாளர்:

**விட்லோ புட் ப்ராடக்ட்ஸ் கம்பெனி**

**20, கோபாலகிருஷ்ண ரோடு, தி'நகர், சென்னை-17**

சென்னையில் விற்பனையாளர்:-

டான் ஸ்டோர்ஸ், ஆயிரம்விளக்கு, சென்னை 6 — புஹாரி ஸ்டோர்ஸ், மவுண்ட் ரோடு, சென்னை 2 — விஜயா ஸ்டோர்ஸ், மயிலாப்பூர், சென்னை 4
ஆர். எல். சுவுடர் கம்பெனி, பந்தர் தெரு, சென்னை 1
சம்பந்தம் செட்டி அண்ட் சன்ஸ், தி'நகர், சென்னை 17

JWT/VF - 940

# துதி பாடல்

## மைசூர் ஸ்ரீ வாஸு தேவாசார்ய,

ராகம்—மத்யமாவதி. தாளம்—மிச்ர சாபு

ஆரோஹணம். ஸரி மப நிஸ
அவரோஹணம். ஸநிபமரிஸ

பல்லவி :— ராமாபி4ராம மாமவ ஸ்ரீராம

அனுபல்லவி :— ராமா ரவிகுல லலாம ராக்ஷஸ குலபீ4ம
ராம சந்த்ரஸுகுண் ஸாந்த்ர
ஸ்ரீமானஸாம்புதி சந்ர.

சரணம் :— பவநாத் மஜ3ஸம்பூஜி3த பரமாத்பு4தநிஜசரித
தே3வாதி3தே3வ3மாத4வ ஸ்ரீவாஸுதேவ
ஸார்வபௌ4ளமஸத்ய காம
ஸர்வலோக வந்த்ய ராம (ராமாபி ராம)

பல்லவி :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸா , | ரிஸ் நிப | ஸ்நி ஸா | ரீ , | பமரீ | ரிஸ |
| ரா . | மா...... | ... ... பி | ரா . | ... ... | ம ... |
| ஸா . | ரிஸ நிப | நிஸ ரிம | ரீ | ரிம பநி | பமரிஸ |
| ரா . | மா ... | ... ... பி | ரா | ... ... | ம ...... |
| ஸரிஸரிமா . | ரிம பா | ம ப நீ | ஸ்ரிம்ரிரிஸ் | ஸ்ாரிஸ் நீ | பமரிஸ |
| ரா ... ... | மா ... | ... ... பி | ... ... ... | ... ... ... | ம ...... |
| ஸா , | ரிஸ நிப | நிஸ ரிம | ரீ , | பம ாரி | ரிஸ |
| ரா . | மா ... | ... ...பி | ரா . ... ... | ... ... | ம ... |
| , ரிம | பா | பம | பநிநி | பமரிரி | ரிஸ |
| மா . | ம . | வ | ஸ்ரீ ... | ரா ... | ம |
| , ரிம | பா | பம | பநிநி | ஸ்நீப | மபாரி |
| மா | ம . | வ | ஸ்ரீ ... | ரா ... | ம ... |

அனுபல்லவி ::—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பா , | மப நீ | பம | ரிஸஸ | நிஸரிஸ | ரீ |
| ரா | ம | ரவி | குலல | லா | ம |
| பா , | பநிஸ்நி | பம | ரீஸஸ | நிஸரிஸ | ரீ |
| ரா - | ம ...... | ரவி | குலல | லா ... | ம |
| , ம மரிரி | ஸரி | மப | பா, | பநி பநி | நிம பா |
| , ரா ... | க்ஷஸ | குல | பீ ... | ... ... | ம |
| . நிபா நி | ஸ்ரி | ரி ரி | ரிஸ்ரி | ரிம்பம் | ரிஸ |
| ரா ...ம | சந் | த்ர | ஸ"குண | ஸா ... | ந்த்ர |
| ஸ்ா , | நிஸ்ாநி | ப ப | பமநிநிபா | மா பம | ரீஸா |
| ஸ்ரீ | மா ... | . ந | ஸ்ாம்...ப. | நி சந் | . த்ர |

சரணம் :—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சரணம் :— | , ரிரி | ரீ | ரிரி | நிம பா | மாபமமரி | ரீஸா |
| | . பவ | நா | த்மஜ | ஸம் ... | பூ ... ... | ஜித |
| | , ரிஸ | ரிஸநிப | ஸநிஸா | , ரிஸ | ரீப ம | ரிஸ |
| | . பர | மா ... | த் பு த | , நிஜ | ச ரி | த |
| | , ரி நி | ரீ | ரிரி | நிமய நீ, | பமாரி . | ரிஸ |
| | பவ | நா | த்மஜ | ஸம் ... | பூ | ஜித |
| | , ரிஸ | ரிஸநிப | ஸநிஸா | . ரிஸ | ரீமப | ரிஸ |
| | பர | மா ... | த் பு த | , நிஜ | ச ரி | த- |

தேவாதி தேவ மாதவஸ்ரீ வாஸுதேவ
ஸார்வ பௌம ஸத்யகாம ஸர்வலோக வந்த்ய ராம

## அனுபல்லவி மாதிரி பாடவேண்டும்.

பல்லவி : ஸ்ரீராமா ; எல்லோருடைய ஹ்ருதயத்திற்கும் பிரியமானவனே என்னை காப்பாற்றும், ஸ்ரீராம லக்ஷ்மீயின் மனதை ஸந்தோஷப் படுத்துகிறவனே.

அனுபல்லவி:— யோகிகள் ரமிக்கும் நிலையை அடைந்துள்ளவனே, சூர்ய வம்சத்திற்கும் பூஷணமானவனே. ராமசந்திரனே நற்குணங்கள் நிறைந்தவனே. லக்ஷ்மியின் மனதாகிற சமுத்திரத்திற்கு சந்திரனாக உதித்தவனே.

சரணம் :— மாருதியால் பூஜிக்கப்பட்டவனே, ஆச்சர்யகரமான சரித்திரம் (நடத்தை) உடையவனே, தேவர்களுக்கு ஆதிதேவனே, ஸ்ரீ வாஸுதேவனே, சக்கரவர்த்தியே, ஸத்ய ஸங்கல்பம் உள்ளவனே, எல்லா உலகங்களாலும் நமஸ்கரிக்கக் தகுந்தவனே, அந்தர்யாமியாக இருந்து ஜீவகோடிகளை ரமிக்கச் செய்கிறவனே.

# சந்தேகம் தீர்த்த சற்குரு !

தமிழ் நாட்டை மூவேந்தர்கள் ஆண்டு வந்தனர். அவர்களில் சோழ நாட்டை ஆண்டு வந்த அபயகுலசேகரன் சிறந்த சிவ பக்தன். எப்பொழுதும் திருவாரூர் தியாகேசப் பெருமான் மீது அன்பு கொண்டு, வணங்குபவன். அவனுக்கு ஓர் ஐயம் தோன்றிற்று. நம் மூவர் ஆட்சியில். "அருளின் எல்லை யாது ?" என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதே அவனுடைய சந்தேகம். அரசனுக்கேற்பட்ட சந்தேகத்தைப் போக்கத் தகுந்தவர்களில்லாமையால், அவன் தியாகேசப் பெருமான் தான் இதற்கு வழி காட்ட வேண்டுமென எண்ணி அரனை வழிபட்டு வந்தான்.

நாட்கள் பலவாகியும் அரசனுடைய சந்தேகம் வளர்ந்ததே தவிர, குறையவில்லை. இந்நிலையில், திருநாரையூர் என்னும் ஊரில் ஒரு சைவப் பெரியார் இருந்தார். இவர் முறைப்படி மறை பயின்றவர். அதன்படி ஒழுகுபவர். அறம் வழுவா அந்தணர். தினம் அவ்வூர்ப் பிள்ளையார்க் கோயிலுக்குச் சென்று அங்குள்ள கணபதிக்கு அபிடேகம் செய்து. அமுது படைத்து, பிறகு உணவருந்துவதே அவரது வழக்கம்.

ஒரு நாள் அச்சைவப் பெரியார் வெளியூர்ச் செல்ல வேண்டி நேர்ந்தது. விநாயகப் பெருமானின் வழிபாட்டிற்கு இடையூறு நேருகிறதே என வருந்தினார். பிறகு, சிறிது சிந்தித்து. பள்ளியில் படிக்கும் தன் மகனை வேழமுகனுக்கு வேண்டியவைகளைக் கவனிக்குமாறு பணித்து விட்டு, வெளியூர்ச் சென்றார்.

தந்தையின் ஆணைபடி சிறுவன் கஜமுகனின் ஆலயத்திற்குச் சென்று கணபதிக்கு அபிடேகம் செய்து, அமுது படைத்து. நிவேதனம் செய்து, கைக்கட்டி வாய்ப் புதைத்து நின்றான்.

இலையிலிட்ட அமுது அப்படியே இருப்பதைக்கண்ட சிறுவன் கண்ணீர் விட்டுக்கதறி,'ஐயனே! கணபதி ! நான் செய்த வழிபாட்டில் குறையாதோ, அறியேன் ? தாங்கள் என் தந்தை படைக்கும் அமுதைப் புசிப்பதைப்போல், இவ்வமுதையும் புசிக்க வேண்டும். இல்லையேல், என் தலையை இந்தத் தூணில் மோதிக் கொள்ளுவேன் என்று கூறி, சிறிதுநேரம் நின்றான்.

நிவேதனம் இலையிலேயே இருந்தது. உடனே சிறுவன் சிறிது தூரம் சென்று திரும்பி ஒடி வந்து தலையைத் தூணில் மோத ஆயத்தமானான்.

ஆலயத்திலிருந்த சிலாமூர்த்தியின் முகத்திலிருக்கும், துதிக்கை நீண்டு வந்து சிறுவனின் இடுப்பைச் சுற்றி வளைத்து, கம்பத்தில் மோதாமல் காப்பாற்றியது. பிறகு நிவேதனத்தையும் வாரிப் புசித்து துதிக்கை மறைந்தது.

சிறுவன் மெய்ம் மறந்தான். ஆனந்தக் கண்ணீர்ச் சொறிய "ஆனை முகத்தய்யனே! கணப்தி!! உன் கருணையை என்னென்பேன்? தலைவா! இனி நீரே எனக்குத் தாய், தந்தை, குரு யாவும். நான் பள்ளிக்கூடம் போகமாட்டேன். பள்ளிக்குச்சென்றால் ஆசிரியர் என்னை அடிப்பார்; தண்டிப்பார். என்று வணங்கி நின்றான்.

சிறுவனின் வேண்டுகோளை ஏற்ற வேழ முகன். அன்றுமுதல் அவ்வந்தணச் சிறுவனுக்குச் சர்ஸ்திரம், கலை, மறை யாவும் ஓதுவிக்கலானார்.

இச் செய்தி எங்கும் பரவியது. அபயகுல மன்னனுக்கும் எட்டியது. இவ்வதிசயத்தைக் காண விழைந்தான் அம்மன்னன். நமது சந்தேகம் தீர இச் சிறுவன்தான் உதவி செய்ய வேண்டுமெனவும் எண்ணினான். உடனே, நகரத்திலுள்ள மக்கள் எல்லோரும் "விநாயகப் பெருமானுக்"காக பழம், எள்ளுருண்டை, அவல் கடலை எவ்வளவு முடியுமோ தயார் செய்யும்படி ஆணையிட்டான்.

அரசனின் ஆணைப்படி நிவேதனம் தயாராயின. வண்டிகளில் அவைகள் ஏற்றப்பட்டு. திருநாரையூர் வந்து சேர்ந்தன. மக்கள் கூட்டம் பெருகியது. அரசன், அமைச்சர்களுடனும், சில வீரர்களுடன் திருநாரையூர் வந்து சேர்ந்தான். அச்சிற்றூர் நகரம் போல் தோன்றியது. மூலாதாரப் பெருமானுக்காகத்


செழிப்பு மிக்க

புத்தாண்டு சார்வரிக்கு

வாழ்த்துக்களுடன்

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி ஆடைகள்

உங்கள் ஆடைக்கும்

இதர பல அலங்காரங்கட்கும்

சென்னை ராஜ்ய
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம்
லிமிடெட்.
பாந்தியன் ரோடு
சென்னை-8.

SISTA'S

தயார் செய்த நிவேதனங்கள் வைப்பதற்கும் இடமின்றிவண்டியிலேயே இருந்தன.

அரசன், அந்தணச் சிறுவனிடம் "அமுதுடன், கனிகள், எள்ளுருண்டைகள் யாவையும் கணபதி உண்ணுவாரா!" என்று வினவினுள்.

"அரசே!... அகிலத்திற்குக் கர்த்தாவான கஜமுகன் யாவையும் உண்டு நம்மை மகிழ்விப்பான்" எனக் கூறி, ஆலயத்திற்குள் சென்று, கணநாதருக்கு அபிடேகம் செய்து, தான் கொண்டு வந்த சிறுவமுதைப் படைத்து, அரசனகொண்டு வந்திருக்கும் உணவையும் சேர்த்து உண்ண வேண்டுமென வருந்தி. கண்ணீர் மல்கி நின்ருன். இமைப் பொழுதில் அரசன் கொண்டு வந்திருந்த கனிகள், அமுது, .எள்ளுருண்டை பொதிகள் யாவும் மறைந்தன.

அரசன் "தன்னுள்ளத்திலே எழுந்த சந்தேகத்தை கணபதி போக்க அருள் செய்ய வேண்டுமென" சிறுவனை வேண்டினுன்.

அதற்கிசைந்த சிறுவனும் விநாயகன் அடிபணிந்துவினவ, 'திருத்தொண்டர்கள் தோன்றிய இடமும், அவர்கள் வாழ்ந்த இடமும், சிவபெருமானை வழிபட்டவிடமும், முக்கண்ணன் அருள் பெற்று முக்தியடைந்தவிடங்களுமே மூவரின் அருள் எல்லை" என்று கூறினுர் கணபதி.

அரசன், அந்தணச் சிறுவனை வாழ்த்தி "என் சந்தேகம் தீர்த்த சற்குரு, நீயன்றோ!" எனக்கூறி, அச் சிறுவனுக்கும், அவன் தந்தைக்கும் வேண்டிய உதவிகளை அளித்து, சைவத்தை வளர்க்கும்படி, வேண்டிக்கொண்டான்.

—சுப்பு.

---

## வனநாட்டுப் பெண்

படத்தில் இருக்கும் இந்த பெண்மணி மிருகக் காட்சிசாலைக்கு நாட்டுப் பெண்ணுக வந்துள்ளாள். நவநாகரிக மோஸ்தரில் உடை குடை எல்லாம் பார்த்தீர்களா. இந்தப் புகைப் படத்தை எடுத்தளித்தவர் மயிலாப்பூர் லஸ்ஸில் உள்ள போட்டோ ஆர்ட் சென்டர் முதலாளி வீரப்ப நெயினி குடும்பராவ் ஆவார். இவர் கிருஷ்ணு ஜில்லாவைச் சேர்ந்தவராயினும் பாதிக்குமேல் தமிழராகிவிட்டார். தமிழர்களிடத்திலே மிகப்பிரியம் கொண்டு விளங்குகிருர். சிறந்த புகைப்பட நிபுணரோடு. ஸ்டில் காமிரா மென்னும் ஆவார். பிரபலமல்லீஸ்வரி, போன்ற படங்களுக்கு ஸ்டில்கள் எடுத்தவர். வாஹினியில் வேலைசெய்துள்ளார். 'லைகா 35 எம்'மில் இவர் பிரத்யேகத் திறமை பெற்றுள்ளவர், இவரது ஸ்தாபனம் ஒரு சிறந்த மாதிரி போட்டோ ஸ்தாபனமாகும்.

## 44 ஆண்டுகளாக



# பிர்மா புகையிலை

தயாரிப்பவர்கள்:

**A.N. இரத்தினம் & கோ.**

திருவாரூர்

நம்பிக்கையானதும் உத்திரவாத மானதும், வாட்சுக்கும் ரிபேர் களுக்கும் நம்பிக்கை யான இடம்.

★

## வஸந்த் வாட்ச் - கம்பெனி

ஈவினிங் பஜார் ரோட்,

மதருஸ்-3.

★★★★★★★★★★★★★★★★★★

பிரபல நாட்டிய நடிகைகள் விரும்பி வாங்குவது

## களஞ்சியம் பிரதர்ஸ் இமிடேஷன் நகைகள்

★

**களஞ்சியம் பிரதர்ஸ்,**
**சைனு பஜார் சென்னை-1.**

குறிப்பு :- குறவஞ்சி, கட்ட பொம்மன், நாடோடி மன்னன் முதலிய படங்களுக்குச் சப்ளை செய்தவர்கள்.

★★★★★★★★★★★★★★★★★★



சென்னை குவீன்மேரீஸ் காலேஜ் சமூக நலசங்கத்தின் நிதிக்காக ஸ்ரீமதி வைஜயந்தி மாலா அவர்களின் நடனக் கச்சேரி மார்ச் 9ம் தேதி நடந்தது. அவ்வமயம் தலைமை வகித்த சர்வ கலாசாலை மான்ய கமிஷன் தலைவர் ஸ்ரீ தேஷ்முக் அவர்கள் சங்கத்தின் சார்பில் அன்பளிப்பை அளிக்கிறார்.

---



★

மதுரை மாநகரிலே மகோன்னத நடன விருந்தளித்தார் ஸ்ரீமதி வைஜயந்தி மாலா அவர்கள். ஸ்ரீ சத்குரு சங்கீத சமாஜத்தின் ஆதரவில் நடந்த நடனக் கச்சேரிக்கு ஏராளமான கூட்டம். டி.வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸை சேர்ந்த ஸ்ரீ டி எஸ். ராஜம் அவர்கள் மதுரை மீனாக்ஷி அம்மன் கோயில் கோபுரத்தின் வெள்ளியாலான உருவத்தை சமாஜத்தின் சார்பில் அன்பளிப்பாக வழங்குவதைப் படத்தில் காணலாம்.

★

# சிறந்த நடனம்

அப்துல் ஹக்கீம் ஹிந்து முஸ்லீம் உயர்நிலைப் பள்ளி கட்டிட நிதிக்காக ஸ்ரீ ராஜா பழனியாண்டி அவர்களின் புத்திரியும் 'நாட்டியாலயாவின்' பிரதம மாணவியுமான **குமாரி சாமுண்டேஸ்வரியின்** நடனம் பாலர் அரங்கில் நடைபெற்றது. அன்று குமாரி ஆடிய வர்ணம், நடனமாடினார், அயிட்டங்களிலே சிறந்த ஆற்றல் வெளிப்பட்டது. சங்கராபரணப் பதம் தோடியில் அமைந்த பதம், முதலியவைகளும், நேர்த்தி. தில்லானாவில் விறு விறுப்பு காணப்பட்டது குறத்தி அயிட்டமும் நேர்த்தியாக அமைந்தது. குமாரிக்கு நல்ல வருங்காலம் உண்டு என்பது நன்கு புலப்பட்டது. அன்று தலைமை வகித்த ஸ்ரீ ஏ. என். பரசுராம், குமாரியின், லாகவம், லய சுத்தம், அபிநயச்சிறப்பு முதலியவைகள் பற்றி வெகுவாகப் பாராட்டினார்.

புதிய தொடர்கதை மே இதழிலிருந்து ஆம்ரபம்

20833

விரைவில் வருகிறது!

இரு பெரும் நட்சத்திரங்களின் இணையற்ற
முதற் கூட்டு

வைஜயந்திமாலா,
எம். ஜி. ராமச்சந்திரன்

நடிக்கும்

சதர்ன் மூவீஸ் அளிக்கும்

பாக்தாத் திருடன்

டைரக்ஷன் :
T. P. சுந்தரம்

வசனம் :
A. S. முத்து

பாடல்கள் :
A. மருதகாசி

சங்கீதம் :
G. கோவிந்தராஜுலு நாயுடு

பூரண உரிமையாளர் :
கோல்டன் பிலிம் (பிரைவேட்) லிமிடெட்.

ஸ்டூடியோ : கோல்டன்



Mg. Editor & Publisher: M. D Raman, Southern Avenue. Alwarpet, Madras-18
Edited and Printed by S. S. Sarma at Sri Sudarsan Press,
111/33, (Congress Bldgs ) Teynampet, Mount Road. Madras-6
Associate Editor T. R. Rajagopalan (Tha. Ra Ra.)

பிரபல நட்சத்திரங்கள் ஒருங்கே நடிக்கும்

ராஜமாணிக்கத்தின்

மகோன்னத படம்



# ராஜ பக்தி

டைரக்ஷன் : கே. வேம்பு

மணங்கமழும்
தென்றல்
வீச
அணங்கே
நின்
அழகைப்
பேச...

பூர்த்திபெற்ற அழகியாக விளங்குவதற்கு இன்றியமையாதது நேர்த்தியான மேனியெழிலே என்ற உண்மையை நன்குணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய பத்மினி பிரியதரிசினி கூறுகிருர். "அதனுலேதான் அதிமென்மை வாய்ந்த லக்ஸ் மீது எனக்குப் பூரண நம்பிக்கை. வெண்ணெய் திரண்டதுபோன்ற அதன் நுரை எனது சருமத்தை மழமழப்புடனும் சோபையுடனும் நிலைபெறச் செய்கிறது. உங்கள் அழகும் உன்னத அழகாக மிளிர-உபயோகியுங்கள் லக்ஸ்!

LUX
TOILET SOAP

சினிமா நட்சத்திரங்களின் தூய, மென்மை குலவும் அழகுசாதன சோப்.

ஜி. கே. ப்ரொடக்ஷன்ஸ் 'சகோதரி'யில் தோன்றும் அழகு நட்சத்திரம் பத்மினி பிரியதர்சினி.

LTS.48–X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.


Sri Sudarsan Press, Madras-6.